பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –iV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தை 29 | 11 –02–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை –359




படுகொலை செய்யப்பட்ட கௌசல்யன் மற்றும் போராளிகளுக்கு

# மக்கள், புலிகள், பாராளு. உறுப்பினர்கள்

# உணர்வு பூர்வமான இறுதி நேர அஞ்சலி!

## தாண்டியடி துயிலும் இல்லத்தில் வித்துடல்கள் விதைப்பு

(மட்டக்களப்பு)

**லெப். கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளின் வித்துடல்களுக்கு பொதுமக்கள், விடுதலைப்புலிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் உணர்வுபூர்வ அஞ்சலியும் வீரவணக்கமும் செலுத்தியதைத் தொடர்ந்து அவை பூரண இராணுவ மரியாதையுடன் தாண்டியடி துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்டது.**

இதற்குமுன்னதாக அம்பாறை மாவட்டம் களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலய ஒலிம்பிக் விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு மாவீரரின் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதில் பெருமளவான மக்கள், போராளிகள் கலந்து கொண்டனர். இதன் பின்னர் பொதுமக்களின் கண்டன

(IVஆம் பக்கம் பார்க்க)

-வன்னியில் இருந்து தரைவழியாகச் சென்ற-

## 35 விடுதலைப் புலிகள் இறுதி நிகழ்வில் பங்கேற்பு!

(கிளிநொச்சி)

மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் நான்கு போராளிகளின் இறுதி அஞ்சலி நிகழ்வில் மூத்த தளபதி கேணல் ரமேஸ், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் உட்பட முப்பத்தைந்து போராளிகள் வன்னிப் பிரதேசத்தில் இருந்து தரைவழியாகச் சென்று கலந்து கொண்டனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வழித்துணையுடன் இவர்கள் நேற்றைய தினம் மட்டக்களப்பைச் சென்றடைந்தனர்.

இவர்கள் அங்கு நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலி

(IVஆம் பக்கம் பார்க்க)

## வவு.இல் சனியன்று மாபெரும் கண்டனப் பேரணிக்கு ஏற்பாடு

பொலநறுவை - மட்டக்களப்பு வீதியில் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமான மட்டக்களப்பு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு உட்பட ஐவரது கொலைக்குக் கண்டனம் தெரிவித்தும் ஆழிப்பேரலை அனர்த்

(IVஆம் பக்கம் பார்க்க)

பொலநறுவை பிள்ளையாரடியில் வீரச்சாவடைந்த லெப். கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளினதும் ஒரு நாட்டுப்பற்றாளரதும் உருவப்படங்களைத் தாங்கிய பிரசுரம் உள்ளே....

## சமாதானத்தைக் காப்பாற்றுவதற்காகப் புலிகள் பெரும் விலைகொடுக்க வேண்டியுள்ளது!

–அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

சமாதானத்தைத் தொடர்ந்தும் காப்பாற்றுவதற்காக, விடுதலைப் புலிகள் பெரும் விலையைக் கொடுக்க வேண்டியுள்ளது. சர்வதேச நாடுகள் பலவற்றிற்கும் சென்று எமது மக்களின் விடுதலைக்காக அயராது முன்நின்று உழைத்த கௌசல்யன் கோழைத்தனமானவர்களின் தாக்குதலில் இன்று மீளாத்துயிலில் இருக்கின்றார். கிழக்கில் ஒரு முழுமையான புனர்நிர்மாணப் பணியை மேற்கொண்டு, சிறப்பாகக் கிழக்குப் பகுதிகளை எழுச்சி பெறவைக்கும் கனவுகளைச் சுமந்தபடி இங்கு திரும்பிவரும்போது, கௌசல்யன் அவர்களை, சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சதிமுயற்சி காவு கொண்டு சென்றுள்ளது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

(IVஆம் பக்கம் பார்க்க)

## இறுதிநாள் வீரவணக்க நிகழ்வில்...













## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு 2 ஆம் வட்டாரத்தில் ஒரு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. 1/2 ஏக்கராகவும் வழங்கப்படும் விலை நேரில் பேசிக கொள்ளலாம். தொடர்புகளுக்கு குணம் தேனீர்க்கடை தீன் சுவை அருகாமை, முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பு (5673)

### விற்பனைக்கு

நல்லின மிளகாய் இனங்களான-எம்.ஐ.கொட், எம்.ஐ-2 , கே-ஏ-2-நல்லின கத்தரி இனங்கள், தக்காளி கே-சீ-1-இனம், நல்லின-ஒட்டுச்-செய்த பலா, நாற்று-மா மற்றும் கறுவா, கொக்கோ, கோப்பி, மங்குஸ்தான்-றம்புட்டான்-தேசி - தோடை தென்னம்பிள்ளை-இனங்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு மு.கந்தசாமி சுஜீதா பழமர மரக்கறி நாற்றுப் பண்ணை, 261- புதிய புன்னை நீராவி, விசுவமடு. (சி.11250)

### தவறிவிட்டது

முத்தையா இளங்கோ 6ஆம் வாய்க்கால், கிளிநொச்சி எனது 5 சிப் கறுத்த வேக்குடன் மண்ணெண்ணெய்க்காட்,தே.அ.அட்டையும், சில உடுப்புகளும் டிப்போ சந்திக்கும் செல்வாநகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அன்பன் தையலகம், சந்தைக்குப் பின்புறம், கிளிநொச்சியில் ஒப்படைக்கவும், தகவல்:- மு.இளங்கோ. (5720)

### தவறிவிட்டது

அற்புதமூர்த்தி,பரமலிங்கம், சுப்பிரமணியம், மீசாலை கிழக்கு என்பவர்களுடைய மண்ணெண்ணெய்க் காட்டும், குடும்பப் பதிவு அட்டையும் கறுப்பு கைவேக்குடன் 04.01.2005 ஆம் திகதி கிளிநொச்சிக்கும், முகாமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகவல்:-சு.அற்புதராசா. (5718)

## பயிற்சிவகுப்பு

(நல்லூர்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.30 மணிக்கு அரியாலை ஆனந்தா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

மத்தியஸ்தர்களை தெரிவுசெய்வதற்கான பயிற்சி வகுப்பில் விரும்பியவர்களை கலந்து கொள்ளும் படி யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் வேண்டியுள்ளது (41)

## பொதுக்கூட்டம்

(நல்லூர் )

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 13ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தலைவர் தலைமையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(41)

## அரசாங்க அறிவித்தல்
## யாழ். மாவட்ட செயலகம்

# வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி - 2005

யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள கீழ் குறிப்பிடப்படும் வாகனங்களை சேவீஸ் செய்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும், வீண்ணப்ப படிவத்தினையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.45 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு, மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் வாகனங்கள் சேவீஸ் செய்வதற்கான கேள்வீ விண்ணப்பம் எனக் குறிப்பீட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகக் கேள்வீப் பெட்டியிலோ 2005 – 02 – 28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்படவேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்வீப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமூகமளிக்கலாம்.

### வாகனங்கள் விபரம்

- ☐ பிக்கப்
- ☐ வான்
- ☐ கார்
- ☐ மோட்டர் சைக்கிள்
- ☐ லொறி
- ☐ முச்சக்கரவண்டி (Auto)

கே. கனேஸ்,
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-11418)

## நூற்றாண்டு விழாவை நோக்கி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் நோக்குடனும், கல்லூரி அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளும் வகையிலும் எமது கல்லூரியின் பெயரில் வெவ்வேறு நாடுகளில் இயங்கும் சங்கங்களை ஒருங்கிணைத்து மகாநாடு ஒன்றினை இவ்வருட நடுப்பகுதியில் மகாஜனக் கல்லூரியில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இதன் பொருட்டு மகாஜனக் கல்லூரியில் கற்றுத் தேறிய பழைய மாணவர்கள்,கல்லூரி ஆர்வலர்கள் அனைவரிடமிருந்தும் ஆலோசனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. நூற்றாண்டு விழாவில் எமது கல்லூரி புதுப்பொலிவுடன் காட்சியளிக்கக் கூடிய வகையிலான ஆக்க பு,ர்வமான ஆலோசனைகளையும் செயற்றிட்டங்களையும் எழுத்துவடிவில் அமைத்து எமக்கு அனுப்பிவைக்குமாறு மகாஜனக் கல்லூரியின் ஆர்வலர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் நிரந்தர உறுப்புரிமை பெற்றவர்களும் உறுப்புரிமை பெறத் தகுதியுடையவர்களும் தங்கள் முகவரியினையும், அங்கத்துவம் தொடர்பான விபரங்களையும் எமக்கு அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் ஆலோசனைகளை 31.03.2005 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக்கிடைக்கச்செய்து மகாநாட்டு ஒழுங்குகள் தடையின்றி நிறைவேற ஒத்துழைப்பீர்கள் என நம்புகிறோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :-
செயலாளர்
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
மகாஜனக் கல்லூரி,தெல்லிப்பழை.

பா.கிருபாகரன்
ம.மணிசேகரன்,
இணைச்செயலாளர்.

பொ.சுந்தரலிங்கம்
தலைவர்.

(சி.11419)

## அரசாங்க அறிவித்தல்
## யாழ். மாவட்ட செயலகம்

# 2005ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சேவைகள் வழங்குநர்களை பதிவு செய்தல்

யாழ். மாவட்ட செயலகத்திற்கு பின்வரும் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலகக் களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப4.45 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2004 – 02 – 28ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் விலாசமிடப்பட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பொருட்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல் எனக் குறிப்பீட்டு அனுப்பிவைக்கவும்.

01) கணினி, நிழற்படப்பிரதி இயந்திரம், தட்டச்சு இயந்திரம், பக்ஸ் இயந்திரம் என்பன வழங்குதல். அவற்றின் உதிரிப்பாகங்கள் வழங்குதல் மற்றும் அவற்றை திருத்தம் செய்தல்

02) மோட்டார் வாகனங்களுக்குரிய உதிரிப்பாகங்கள் வழங்கல் மற்றும் அவற்றைத் திருத்தம் செய்தல்

03) காகிதாதிகள், எழுது பொருட்கள் வழங்குதல்

04) பாவனைப் பொருட்கள் (ஈர்க்கில் தடி, தும்புத்தடி, சவர்க்காரம், வீம், காப்பீக், பைனோல், குளோரின் முதலியன) வழங்குதல்

05) மரத்தளபாடங்கள் வழங்குதலும், திருத்தமும்

06) உருக்குத் தளபாடங்கள் வழங்குதலும், திருத்தமும்

07) கட்டடத் திருத்தம் செய்தல், திருத்தத்திற்குரிய பொருட்களை வழங்கல்

08) பீங்கான் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் என்பனவற்றை வழங்கல்

09) மின் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் வழங்கலும், திருத்துதலும்

10) மின்னிணைப்பு திருத்த வேலைகள்.

11) நீர் வழங்கு பொருட்கள் வழங்குதலும் அவற்றின் திருத்த வேலைகளும்.

12) இறப்பர் முத்திரைகள் செய்து வழங்குதல்

13) சீருடைத் துணிகள் மற்றும் துணிவகைகள் வழங்குதல்

14) மீன் பிறப்பாக்கிகள், மின் மோட்டார், நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்குதலும், அவற்றின் திருத்த வேலைகளும்.

கே. கணேஸ்,
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-11417)

## நேர்முகத் தேர்விற்கான அழைப்பிதழ்

கடந்த 01.02.2005 (செவ்வாய்க்கிழமை) ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரமான எழுகதிர் பல்பொருள் வாணிப வேலை வெற்றிடத்திற்கு விண்ணப்பம் அனுப்பியவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 13.02.2005 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி தொடக்கம் 2.00 மணி வரைக்கும் விண்ணப்பதாரர்களை சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

எழுகதிர் பல்பொருள் வாணிபம்,
ஈழநாதம் முன்பாக,
கிளிநொச்சி.

(5721)

# கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளின் படுகொலையை கண்டித்து நாளை யாழ்.இல் கர்த்தாலுக்கு அழைப்பு

## -தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் ஏற்பாடு

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் உட்பட நான்கு போராளிகள் மீதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மீதும் திட்டமிட்ட வகையில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவத்தினை எதிர்த்து நாளை சனிக்கிழமை யாழ்.குடாநாடு தழுவிய பூரண கர்த்தாலுக்கு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்விற்கு அனைவரையும் பங்கேற்குமாறு யாழ் பல்கலைக்கழக சமூகம் அறைகூவல் விடுத்துள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பில் மூத்தபோராளியும் மட்டு-அம்பாறை மாவட் அரசியல்துறைப்பொறுப்பாளருமாகிய இ.கௌசல்யனினதும், சகபோராளிகளினதும் இழப்பானது தமிழ் மக்களுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் பெரும் சோகத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டமிட்ட இலங்கை இராணுவத்தினுடைய சதி வேலையால் பெரும் சீற்றத்தினையும் தமிழர்கள் அடைந்துள்ளார்கள்.

தமிழ்த்தேசியத்தினைச் சிதைக்கும் நோக்குடன் கருணா என்ற தேசத் துரோகியினால் பிரதேசவாதம் என்கின்ற சதி வலையை விரித்தபோது தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்கும், துரோகி கருணாவினுடைய துரோகத்தனத்தினைஅழிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் முன் நின்று உழைத்த போராளி தான். இ.கௌசல்யன். ஆகவே அவருடைய இழப்பு என்பது இன்று தமிழ் மக்களுடைய ஆன்மாவை சோகக்கடலில் சங்கமிக்க வைத்துள்ளது. போரினால் வெல்ல முடியாத புலிகளை சமாதானம் என்ற பொய் வேசத்தினை மாயத் திரையை வைத்துக் கொண்டு சதிவேலைகளைத் திட்டமிட்ட வகையில் நிறைவேற்றிக் கொள்வதிலேயே இலங்கை அரசாங்கமும், இராணுவமும் செயற்படுகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

இதன் தொடர் நிகழ்வாகவே இ.கௌசல்யன் அவர்களின் படுகொலையும் இடம்பெற்றுள்ளது. உலக நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் சமாதானத்தின் மீது ஆர்வம் இருப்பதாக மாயத் தோற்றத்தினைக் காட்டிக் கொண்டு மறுமுனையில் தமிழ் மக்களையும், தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளையும் நசுக்குவதற்கான திட்டங்களையே செயற்படுத்தி தொடர்ச்சியாக இவ்வாறான தாக்குதல்களின் மூலம் தமிழர்களைப் போருக்கு சீண்டிவிடும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றது.

கருணா குழு என்ற குழுவே மட்டக்களப்பு, அம்பாறையில் தற்போது இல்லை. இலங்கை இராணுவமே அந்தக் குழுவின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு தனது சதிவேலைகளை முன்னெடுக்கின்றது. என்று ஏற்கனவே அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். எனவே இங்கு ஒரு உண்மை நிலையை இலங்கை இராணுவம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். கருணா என்ற குழு தமிழ்த் தேசியத்தினை விட்டு முற்று முழுதாக அழிக்கப்பட்டும் வெளியேற்றப்பட்டும் விட்டது. அதனுடைய பெயரைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை இராணுவம் தனது கைவரிசைகளைத் தொடர்ந்து காட்ட முனையு மாக இருந்தால் இது சமாதான நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவதாக அமையும்.

ஆகவே இலங்கை இராணுவத்தினரின் சதிவலையில் சிக்கி வீரச்சாவைத் தழுவிய மாவீரர் களுக்கும், நாட்டுப்பற்றாளரான சந்திரநேரு அவர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித் துக் கொள்வதுடன் இந்தப்படு கொலைச் சம்பவத்தினை எதிர்த்து நாளை சனிக்கிழமை அன்று தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் முன்னெடுக்கும் பூரணகர்த்தாலுக்கு நாமும் ஒத்துழைப்பு வழங்குவதுடன் சகல அமைப்புக்களையும, பொதுமக்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ.பல்கலைக் கழக சமூகம் அழைப்பு விடுத்துள்ளது (36)

# மாதர் சங்கத் தெரிவு

(கிளிநொச்சி)

பெரிய குளம் கிராமத்தில் மாதர் சங்கத்தெரிவு நிகழ்வு நேற்று முன் தினம் பிற்பகல் 5.00 மணிக்கு அப பகுதிப் பாடசாலையில் உப தலைவி தலைமையில் இடம் பெற்றது.

பொதுச் சுடரை கண்டாவளைப் பிரதேச செயலர் அவர்களும், கிளி.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூவிழி அவர்களும் ஏற்றினர் கருத்துரையினை திருமதி கமலாம்பிகை, பிரதேச செயலர், கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் அவர்களும் நிகழ்த்தினர். சிறப்புரையினை கிளி. மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி அவர்கள் நிகழ்த் தினார். தொடர்ந்து மாதர் சங்கத் தெரிவு இடம்பெற்றது.

# போராளிகளின் படுகொலையைக் கண்டித்து கண்காணிப்புக்குழு ஊடாக சனாதிபதிக்கு அறிக்கை

## கிளி.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அனுப்பி வைப்பு

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் மற்றும் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு அவர்களும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியான வெலிகந்த பிரதேசத்துக்குள் நாமக்கல் பிள்ளையாரடியில் வைத்துக் கடந்த திங்கட்கிழமை மாலை 7.45 மணியளவில் படுகொலை செய்யப்பட்டுள்ளதை கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்த அமைப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவர் ஊடாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள தனது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்பு அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இராணுவம், பொலிஸ் படிப்படியாகத் தமிழ் மக்கள் மீதும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும், விடுதலைப்புலிகளின் ஆதரவாவாளர்கள் மீதும் மேற்கொண்டு வரும் கொடுமைகளைக் கட்டுப்படுத்தி உண்மைச் சமாதானத்திற்கு ஒத்துழைக்குமாறு கடந்த 19.01.2005 இல் கண்டன வேண்டுகோள் கடிதம் ஒன்றை தங்களுக்கு அனுப்பியிருந்தோம். அதன் பின் 13 நாட்களுக்குள் தங்கள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரச படைகளாலும், தேச விரோதக் கும்பல்களினாலும் இப்படுகொலை திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளது.

தாங்களும் தங்கள் அரசுகளும் தமிழ் மக்களின் கௌரவமான உரிமைகளை வழங்கி சமாதான பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு தீர்வு வரும் என்று விடுதலைப்புலிகள் நம்பியே பேச்சுக்களில் ஒத்துழைத்து வருகின்றார்கள். ஆனால் தாங்களும், தங்கள் அரசும் இத்தேசத்தினுடைய தமிழ் இனத்திற்கு ஒரு பாதுகாப்பான வாழ்வைத் தரமாட்டீர்கள் என்பதுடன் இனவாத சக்திகள் சேர்ந்து தமிழ் இனத்தைக் கொன்றொழிக்கும் நடவடிக்கைகள்தான் தொடரப்போகின்றன என்பதை கடந்த திங்கட்கிழமை நடந்த இப்படுகொலைகள் நிரூபிக்கின்றன. கௌசல்யனும், அவரோடு பயணம் செய்தவர்களும் படுகொலை செய்யப்பட்டதை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் தலைமையில் நீதியான விசாரணைகளை மிகவிரைவாக ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தாங்கள் நீதியான விசாரணைகளை மிகவிரைவாக ஏற்படுத்தி இவ்வாறான அராஜக செயற்பாடுகளை உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இணையம் கேட்டுக் கொள்கிறது.

எமது மக்களின் மகஜர்களிற்கும் மதிப்பளிக்காது நடவடிக்கைகள் தொடருமானால் இலங்கை நாடு முழுவதும் வெகுஜனப் போராட்டங்கள் தொடங்கப்படும் என்பதை இந்த நாட்டின் சமாதானப் பிரியர்கள் அனைவருக்கும் இணையம் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது. தங்களின் நடவடிக்கைப் பதிலை இணையம் எதிர்பார்த்து நிற்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

1. உபபரிசோதகர் :-

க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருந்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் :- 4500 + 7155 — 150 X10 + 165 X7 + 2700

2. எழுதுவினைஞர் :-

க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருந்தல் வேண்டும். அல்லது க.பொ.த. (சாதாரணம்) சித்தியுடன் ஐந்து (5) பாடங்களில் தமிழ்மொழி உட்பட திறமைச்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
வயதெல்லை 18-30 ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் :- 4200 + 6430 — 125 X10 + 140 X7 + 2700

3. காவலர் :-

க.பொ.த. (சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

சம்பளம் :- 4200+ 6430 — 125 X10 + 140 X7 + 2700

மேற்படி பதவிகளில் இணைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள காவல்துறை நடுவப்பணியகத்துக்கு 2005.02.10 முதல் 2005.02.28 ஆம் நாள்வரை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை சான்றிதழுடன் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஆளணிப்பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

(5715)


# சாவு அறிவித்தல்

## சின்னத்தம்பி பொன்னையா

ஆழியவளையைக் பிறப்பிடமாகப் கொண்ட சின்னத்தம்பி பொன்னையா என்பவர் 09.02.2005 அன்று சாவடைந்துள்ளார். இவர் வள்ளிப் பள்ளையின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, காலம் சென்ற இராசரத்தினம், தங்கராசா( UK), செல்வரத்தினம், சின்னத்தம்பி (UK), இலட்சுமிப்பிள்ளை,புவனேஸ்வரி ( போராளி மருத்துவப் பிரிவு), குஞ்சா ( காலம் சென்றவர்) ஆகியோரின் அன்புத் தந்தையும். செல்லத்துரை, பாக்கியம், சரஸ்வதி,காலம் சென்ற கணபதிப்பிள்ளை, நல்லதம்பி ஆகி யோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம், முத்து இலட்சுமி (UK), விஜயகுமாரி, காலம் சென்ற நாகலட்சுமி, பரமேஸ்வரன், றெஜி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

தகவல்:-
பிள்ளைகள்

(சி.11420)

## 07–02–2005இல் பொலநறுவை பிள்ளையாரடியில் வீரச்சாவடைந்தோர்!



லெப். கேணல் கௌசல்யன்



மேஜர் செந்தமிழன்



மேஜர் புகழன்



2ஆம் லெப்.விதிமாறன்



நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு

# பொலநறுவை பிள்ளையாரடியில் வீரச்சாவடைந்தோர் விபரம்

07.02.2005 அன்று பொலநறுவை பிள்ளையாரடி எனும் இடத்தில் இனந்தெரியாத தேசவிரோதக்குழுவினரின் தாக்குதலின் போது நான்குபோராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

* லெப்.கேணல் கௌசல்யன்

இளையதம்பி -லிங்கராஜா, சொந்தஇடம்- பண்டாரியா வெளி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.

* மேஜர் புகழன்

சிவலிங்கம் - சுரேஸ்காந்தன்/ சுரேஸ். மையம்பா வெளி, தன்னாமுனை, மட்டக்களப்பு.

* மேஜர் - செந்தமிழ்

தம்பிராசா - கந்தசாமி. 2ஆம் வட்டாரம் குருமன் வெளி, களுவாஞ்சிக் குடி, மட்டக்களப்பு. த.மு. பிலாச்சோலை, மண்டூர், களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு.

*2ஆம்லெப்டினண்ட் விதிமாறன்

சிவபாதம்-மதனசுதன், கட்டுப் பிள்ளையார் கோவில் வீதி, செட்டிப்பாளையம்.

என்ற போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர் இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

இதேவேளை 07.02.2005 அன்று பொலநறுவைபிள்ளையாரடி என்னும் இடத்தில் இனந் தெரியாததேசவிரோதக் குழுவினரின் தாக்குதல் ஒன்றின் போது விழுப்புண் அடைந்திருந்து 08.02.2005 அன்று நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

*நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு.

அரியநாயகம் -சந்திரநேரு, திருக்கோயில், அம்பாறை.

என்ற நாட்டுப்பற்றாளரே வீரச்சாவடைந்தவராவார் இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

### வவு...

தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான நிவாரணங்கள் வழங்கப்படாமையினை ஆட்சேபித்தும் எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட வெகுசன ஒன்றியங்களின் தலைவர் ச.குலதேவராசா தலைமையில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணிகள் கண்டி வீதி, இறம்பைக்குளம், குருமன்காட்டுச் சந்தி ஆகிய நான்கு திசைகளில் ஆரம்பித்து மாவட்டசெயலகத்தில் ஒன்றுகூடும். அங்கு அரசாங்க அதிபரிடம் தமது மகஜரைச் சமர்ப்பித்த பின்னர் பேரணி வைரவப்புளியங்குளம் பேர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்துக்குச் சென்று அங்கு முடிவடையும். வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களுடைய பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பேரணியில் கலந்து கொள்ளவுள்ளனர். காலை 8 மணிக்குப் பேரணிஆரம்பித்துப் பகல் 12 மணிக்கு முடிவடையும். இந்த நேரத்தில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு இருக்கும். அதன்பின்னர் வழமைபோல் கடைகளைத் திறக்கலாம் என ஒன்றியம் தெரிவித்துள்ளது. வவுனியாவில் உள்ள அனைத்து அமைப்புக்களும் இந்தப் பேரணிக்கு தங்களுடைய பூரண ஆதரவை வழங்கமுன்வந்துள்ளார்கள்.

# இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தத்தில் விரைவில் கைச்சாத்திட வேண்டும்!

## -லக்ஷ்மன் கதிர்காமர் கோரிக்கை

சிறிலங்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் துரிதமாகச் செயற்பட்டு கூடியவிரைவில் உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு இந்திய அரசைச் சிறிலங்கா வெளிவிவகாரஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். கோரியுள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அடுத்த மாத இறுதியில் சிறிலங்காவுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் கதிர்காமரின் இக்கோரிக்கை வெளிவந்துள்ளது.

புலனாய்வுத் தகவல் பரிமாற்றம், சிறீலங்கா படையினருக்கு இந்தியஇராணுவப்பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி போன்ற விடயங்களை இவ் உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் உள்ளடக்கியுள்ளது.

இதேவேளை பிரதமர் மன்மோகன் சிங் அண்மையில் இதுபற்றி தமிழகக் கட்சிகளிடம் உறுதியளிக்கையில் ஈழத்தமிழருக்கு எதிரான எந்தச் செயலையும் இந்தியா செய்யாதென்றுதெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அண்மையில் சனாதிபதி சந்திரிகாவுடன் பாகிஸ்தானுக்கு சென்றிருந்த கதிர்காமர் அங்கு அந்நாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

### இந்தியப் பிரதமர் இலங்கை விஜயம்

இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் அடுத்தமாத இறுதியில் சிறிலங்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார் என்று இந்தியப் பிரதமர் அலுவலகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

18 வருடங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு வரும் இந்தியப் பிரதமராக கலாநிதி மன்மோகன் சிங் உள்ளார்.

### சமாதானத்தை...

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் மற்றும் மூன்று போராளிகளின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். தமிழ்ச்செல்வன் அங்குமேலும்உரையாற்றுகையில்,

வெலிக்கந்தப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் லெப்.கேணல்கௌசல்யன் உட்பட ஆறு பேர் கொலைசெய்யப்பட்டமையைக் கண்டித்து ஐக்கிய நாடுகள்ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் கொபி அனான் விடுத்த அறிக்கையானது சர்வதேச சமூகம் எமது பிரச்சினையை உணரத் தொடங்கிவிட்டது. என்பதைக் காட்டுகிறது. ஆனால் எங்களுடைய அமைப்பின் எதிரிகள் மட்டும் இதனை உணராமல் காரியமாற்றுகின்றனர்.

எதிர்காலம் நோக்கிய எங்களுடைய பயணத்தில் நாங்கள் எவ்வளவு தூரம் உயர்வடைந்துள்ளோம் என்பதை இந்தச் செய்தி காட்டுகின்றது எதிரிகள் மட்டும் எதையும் உணராதவர்கள் போல் தங்கள் காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எமது தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் எண்ணங்களையும், கருத்துக்களையும் மக்கள் மத்தி யில் சரியான முறையில் கொண்டு சென்றவர்லெப்.கேணல கௌசல்யன்

தமிழ் பேசும் மக்கள் தமிழர் தாயகத்தினுடைய நீதிக்காக- நியாயத்திற்காக -உரிமைக் காகப் போராடுகின்றார்கள். இன் றைய உரிமைப் போராட்டப் பயணத்தின் போக்கு அதன் வளர்ச்சி அதன் எதிர்காலம் எல்லாவற்றையுமே புரிந்து கொள்கின்ற ஒரு நிலையை இந்த உரிமைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படுகின்ற அனைத்துச் சக்திகளும், சிறிலங்கா அரசாங்கமும் உணர்ந்து கொள்ளும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

எங்களுடைய மக்கள் மிக உறுதியாக இருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் தங்கள் தாயகத்தின் - தங்கள் தேசத்தின் - தங்கள் தலைவரின் பலத்தை- ஒருபோதும் பலவீனப்படுத்த மாட்டார்கள்.

இந்தத் தமிழீழ தேசத்தை அழிக்க நினைப்பவர்கள் எல்லோருமே பெரும் கனவோடு இருந்த நேரம் இந்த மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்திலே வாழ்கின்ற மக்கள் எல்லோருமே ஒன்றிணைந்து ஒரு சில நாட்களுக்குள் நாங்கள் யார் என்பதை- எங்கள் தேசத்தினுடைய ஒருமைப்பாட்டை- எங்கள் உரிமைப் போராட்டத்தினுடைய உறுதியையும் வெளிப்படுத்தினார்கள்

ஆகவே இப்படியான படுகொலைகளால் இந்தத் தேசத்தினுடையவிடுதலையினதும் எங்கள் மக்களினதும் எதிர்காலத்தை நோக்கிய பயணத்திலே நாங் கள் இன்னும் வீறுநடை போடுவோம்.ஆகவே இந்த உயர்ந்த - எங்கள் பாசத்திற்குரிய எங்கள் உறவுகள் மீது நாங்கள் சத்தியம் செய்கின்றோம் என்றார் அவர்.

### மக்கள்...

அறிக்கை ஒன்று மண்முனை தென்னெருவில் பற்று பிரதேச செயலாளர் பாஸ்கரனிடம் கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்று நண்பகல் மட்டக்களப்பிற்கு எடுத்துச் செல்லப்பட்ட வித்துடல்கள் தேவநாயகம் மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. வித்துடல்களுக்குப் போராளிகள், மக்கள் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் வெளிநாட்டவர்கள் உட்படப் பலர் அஞ்சலி செலுத்தினர்.

வெலிக்கந்த சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரும், அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரநேரு அரியநாயகம் அவர்களின் பூதவுடல் கொழும்பிலிருந்து நேற்றுக் காலை மட்டக் களப்பு நகருக்கு எடுத்து வரப்பட்டு தேவநாயகம் மண்டபத்தில் போராளிகளின் வித்துடல்களுடன் மக்களின் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் சிறிலங்கா பாராளுமன்ற அமர்வை முடித்துக் கொண்டு இரா.சம்பந்தன் தவிர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 பேரும் நேற்றுக் காலை மட்டக்களப்பிற்கு வந்து நகரில் தேவநாயகம் மண்டபத்தில் தமது இறுதி வணக்கத்தைச் செலுத்தினார்கள்..

பின்னர் ஏறாவூர் செங்கலடி வழியாகக் கொண்டு செல்லப்பட்டு கிரான் மகாவித்தியாலயத்திலும், அதன் பின்னர் சந்திவெளியிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கரடியனாறுக்கு வித்து டல்கள் கொண்டு செல்லப்பட்டு இறுதியாக தாண்டியடி துயிலும் இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. அதில் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், விடுதலைப்புலிகளின் மூத்தஉறுப்பினர் வே.பாலகுமாரன், மட்டக்களப்பு பள்ளிவாசல் கூட்டமைப்பின் தலைவர் அப்துல் ஜவாத் உள்ளிட்ட பலர் உரை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டு பூரண இராணுவ மரியாதைகளுடன் வித்துடல்கள் புனித விதை குழியில் விதைக்கப்பட்டன.

இவர்களின் வித்துடல்கள் எடுத்துச் செல்லப்பட்ட வீதியின் இரு மருங்கிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து கண்ணீர் மல்க தமது இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

இந்நிகழ்வில் கேணல் பானு, கேணல் ரமேஸ், விடுதலைப்புலிகள் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் கரிகாலன், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி, பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திரசேரகன், சிவாஜிலிங்கம், ரவிராஜ் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களுடன் பெருந்திரளான பொதுமக்கள் போராளிகள் கலந்து கொண்டு இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

அதேவேளை நாட்டுப்பற்றாளர் அரியநாயகத்தின் உடலும், அம்பாறை மாவட்டத்தில் அவரது சொந்தக் கிராமமான திருக்கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இவரது நல்லடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை அங்கு நடைபெறவுள்ளது.

### 35விடுதலைப் ...

யைச் செலுத்தியுள்ளனர்.

ஏற்கனவே விசேட உலங்குவானூர்தி மூலம் நேற்று முன்தினம் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி,மட்டு -அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பானு மற்றும் மூத்த உறுப்பினர் பாலகுமாரன் ஆகியோர் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 15 | வெள்ளி - 50 | 11 - 17 - பெப்ரவரி - 2005



## வாசகர்களின் கவனத்திற்கு

எதிர் வரும் 18-02-2005 அன்று வெளிவரவேண்டிய வெள்ளிநாதம் இதழ் வெளிவராது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

19-02-2005 அன்று ஈழநாதம் தேசிய நாளிதழின் பதினாறாவது ஆண்டுயொட்டி 19.02.2005 அன்று "ஆண்டுமலர்" அதிக பக்கங்களுடன் வெளிவரவுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

ஆசிரியர்.

## படித்ததில் பிடித்தது

### கட்சி மாறியவன்

என்னுடைய சோதரனே
உன் எஜமானனின்
ஒவ்வொரு பாசாங்கிற்கும்
உன் பல்லைக்காட்டுகிறாய்
தங்கப்பிரேம் கண்ணாடிகளை
அணிந்திருக்கும் சோதரனே
உன் எசமானனை~நீ
கீழ்ப்படிவோடு நோக்குகிறாய்
அற்புதமான
மாலைநேர ஆடையணிந்திருக்கும்
என் பாவப்பட்ட சோதரனே
ஆரவார இரக்கம் காட்டும்
மண்டபங்களிலே
நீ
அலறுகிறாய்...
முணுமுணுக்கிறாய்...
கெஞ்சுகிறாய்....
உன்மீது
பரிதாபமே எழுகிறது.

உன்னுடைய பவித்திரமான
'நாகரிக' நெற்றியிலே
உன் நாட்டினுடைய
தகிக்கின்ற சூரியன்
வெறும் நிழலாகவே உள்ளது
உன் பேத்தியின்
குடில் பற்றி நினைக்கையில்
வரு[illegible]ணக்கான
சிறுமைப்படுத்தலாலும்
தவறான மனச்சாட்சியாலும்
உன் வெளிறிய முகம்
சிவந்து போகிறது.

ஆபிரிக்காவின்
கசப்பான சிவந்த மண்ணை
நீ மிதித்துத் துவைக்கும்போது
அமைதியற்றிருக்கும்
உன் காலடிகளோடு
இசைந்ததாக
கடுந்துயரால் எழும்
இந்த வார்த்தைகள்
ஒலிக்கட்டும்
"ஓ! நான் தனிமையாயிருக்கிறேன்
மிகவும் தனிமையாயிருக்கிறேன்"

எழுதியவர்:-டேவிட் டியொப்
தமிழில்:-வின்சென்ற் புளோறன்ஸ்

## காரசாரம்

அகில உலகத்திலும் வீடற்றோர் தொகை நாளுக்குநாள் பெருகி வருகிறது. இதன் காரணமாகவே நடை பாதைகளிலும் பாலங்களின் அடியிலும் புறம்போக்கு நிலங்களிலும் வசிப்போர் தொகை பெருகி வருகிறது. இந்த வகையில் கடலோரங்களில் குடியிருந்த ஏராளமான மக்கள் சுனாமியால் தாக்குண்டு உடமைகளை இழந்தாலும் நிவாரணம் பெறும்போது வீட்டுக்கான நிவாரணத்தைப்பெறமுடியாதுள்ளது.

வீடு என்பது ஒரு பெரும் பிரச்சினையாகவுள்ளது. மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் என்ன? உண்டிட நாழி உடுத்திட நான்கு முழம், உறங்கிட ஒரு கூரை இன்றைய மனிதர்களுக்கு வீட்டில் வாழும் வாழ்வுரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஒரு சிலர் நான்கைந்து வீடுகளுக்கு உரிமையாளர்களாயிருக்க பலர் ஒரு குடிசையும் இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

அதற்காக ஆற்றல் உள்ள சிலர், பணம் கொடுத்துத் தமக்கொரு வீட்டைக்கட்ட முயன்றாலும். அந்த வீட்டுக்கு அருகில் பாடசாலை, சந்தை, வைத்தியசாலை மருந்தகம், பஸ்போக்குவரவு, மின்சாரம் எனப் பல அடிப்படை வசதிகளையும் கொண்டதாக அமைக்கவே விரும்புகின்றனர்.



## வீடு என்பது பெரும் பிரச்சினையாகவுள்ளது

எனவே, தமிழீழத்தில் அவ்வளவு வசதியான இடங்களை தேடிப் போக வேண்டியதில்லை. ஏனெனில் கிளிநொச்சி தவிர்ந்த வேறிடங்களில் இவ்வளவும் இல்லை. கிளிநொச்சியிலும் எல்லா இடங்களிலும் இந்த வசதியில்லை. ஆக நகரைச்சுற்றி நிலம் படைத்தோர் மிக அதிகமான விலையில் வாடகையில் வீடுகளை வழங்கிக் கொழுக்கின்றனர். அதிலும் வெளிநாட்டு என்ஜீயோக்களுக்கு அதியுச்ச வாடகைக்கு வீட்டைக் கொடுத்தும் ஊரவர்களுக்கு வீட்டைத்தர முடியாது என மறுத்தும் விடுகின்ற நிலை காணப்படுகிறது.

தமிழர்கள் வீடுகளை வாஸ்து சாஸ்த்திர முறைப்படிதான் அமைத்துக்கொள்கின்றனர். இவ்வழிப்படி வீடமைக்கும்போது பல விதிமுறைகளைக் கையாள வேண்டியுள்ளது. தற்போது வீடமைக்கும் வேலையைச் சில நிறுவனங்கள் முன்வந்து செய்கின்றன. கடன் அடிப்படையில் தான் என்றாலும் வீட்டில் குடியிருக்கப் போகிறவர்களின் எந்த அபிப்பிராயத்துக்கும் இடங்கொடாமல் கட்டி முடிக்கப்பட்ட வீடு கையளிக்கப்படுகிறது. வாழப்போகும் குடும்பம் அதன் பிறகு சில சுவர்களை உடைத்து சில சுவர்களைக்கட்டி சில விடயங்களை மாற்றி அந்த வீட்டை தனக்குகந்ததாக மாற்றவேண்டியுள்ளது.

எங்கள் தேசப்பிரமாணப்படி கிழக்கிலேதான் அடுக்களை அமைக்க வேண்டும் வாஸ்த்து விதியும் அதுவே. காரணம், எமது நாட்டுக்கு காற்று தெற்கிலிருந்து வடக்காக (சோழகம்)வும் மேற்கிலிருந்து கிழக்காகவும்தான் வீசுகிறது. அடுப்பிலுள்ள நெருப்பு காற்றின் திசை காரணமாக வீட்டின் கூரையை மட்டுமல்ல சமைப்பவரின் உடலையும் தாக்காது. வீடமைப்பு அதிகாரசபை வீடுகளைக் கடன் அடிப்படையில் கட்டமுன்வந்தாலும் அவற்றைக் கட்டிக்கொடுக்கும் இடங்கள் பெரும்பாலும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் இடங்களே. வெறும் பொதுக் கிணறுகளை நம்பி எப்படி ஒரு வீட்டுத் தோட்டத்தையோ, கால்நடை வளர்ப்பையோ செய்யலாம். இதைவிட இக் குடியிருப்புகளில் வாழ்வோரின் வாழ்க்கைக்கு வழியென்ன? நகரின் தொலைவில் அமைக்கப்படும் இக் குடியிருப்புகளில் தொழில் வசதி ஏன்ன? இப்படிப் பல கேள்விகள் எழ;

இன்னுமொரு வகையில் இடப்பெயர்வுகளையடுத்து புறம்போக்கு நிலங்களௌனக் கருதிக் காடு வெட்டித் திருத்தி வீடு கட்டி வாழ்கின்ற மக்கள் திடீரெனக் கொழும்பிலிருந்தோ, வெளிநாடுகளிலிருந்தோ வரும் பெரும் பண முதலாளிகளால் விரட்டப்படும் நிலை காணப்படுகிறது. சிங்களப்படை ஊர் புகுந்தபோது "வாய்யா வந்திரு என்று விட்டு ஓடிப்போனவர்கள். நாங்கள் இந்த மண்ணில் நின்று எல்லைப்படையாகவும் போராளிகளாகவும் ஆயுதமேந்தி வந்த சிங்களப்படையை விரட்டினோம். இப்போது எங்களை இவர்கள் விரட்டுகிறார்கள். அப்புஹாமியும் சுதுபண்டாவும் இருந்தபோது எங்கே போனவர்கள்" என்று கொதித்தார் விரட்டப்பட்ட ஒரு குடும்பத்தலைவர்.

இவை நீதிகாணப்பட முடியாத விடயம். வீடமைப்பு அதிகார சபையோ தமிழர் புனர்வாழ்வுக் கழகமோ, அனைவருக்கும் வீடு வழங்குவது சாத்தியமா- அதுவும் எம்மக்கள் மரபுகள் வழக்கங்கள் அழியாமல் இப்படித்தான் ஏனைன் வீதியில் ஏதோவொரு நிறுவனத்தினால் கனகராயன் குளம் பெரியார் குளப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளின் நடுக் கூரைகளின் மேற்கே புகைபோக்கிகள் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். தனக்குரிய வீட்டை வடிவமைக்கும் உரிமைகூட சாதாரணகுடிமகனுக்கு மறுக்கப்படுகிறது.

தனக்கான வீடொன்றைப் புறம்போக்கு நிலத்தில் கட்ட முனையும் ஒருவர் சட்டத்தை மீறியவராகக் கருதப்படுகிறார். அதேசமயம், வன்னிமாவட்டத்தின் பெருவளங்களான குளங்கள் அதன் நீரேந்துப் பிரதேசங்களில் கட்டப்படும் வீடுகளால் நிரம்பி அழிவதற்குத் தயாராகிவருகின்றன. குளமொன்றின் அலைகரையில் அத்திவாரம் போட்டிருந்த ஒருவருடைய அந்த அத்திவாரமும் கிணறும் முற்றுமுழுதாக இடுப்பளவுக்கு மேல் தண்ணீர் மூடியிருந்தது. நல்ல வேளையாக அந்த வீட்டைக் கட்டாமல் விட்டார் என நினைத்தோம். ஆனால் இப்போது அவர் அந்த வீட்டைத் தொடர்ந்து கட்ட முனைந்துள்ளார். தண்ணீரை என்ன செய்வது என்று கேட்டால் சற்றும் மனம் தளராமல் 'சுற்றி மதில் கட்டப்போகிறேன்' என்றார். அதையடுத்து மேலும் சிலர் காணிகளை அளந்து வீடுகட்ட நிலையம் எடுப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அவர்களும் குளத்து நீர் உள்ளே வராமல் மதில் கட்டப் போகிறோம் என்றார்கள். சரி, எல்லோருமே குளத்து நீர் உள்ளே வராமல் மதில் கட்டினால் குளத்துக்கு நீர் எப்படிப்போகும் குளங்கள் வரண்டு போனால் கிணற்றுக்கு நீர் எப்படி ஊறும். இது போன்று குளங்களை நிரப்பி உருவாக்கிய பழைய குடியிருப்புகளான புதுக்குடியிருப்பு முள்ளியவளை போன்ற வீதிகளே வெள்ளத்தின் வடிகாலாக மாறிவிடும் நிலை கிளிநொச்சிக்கும் மிக விரைவில் வரப்போகிறது.

வீடுகட்டி வாழும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு என்றாலும் அதை எங்கே கட்ட வேண்டும் என்ற வரையறை உண்டு. பெரும்பாலும், கண்களைக் கொடுத்துச் சித்திரம் வாங்குவது போன்ற இந்த நடவடிக்கைகளால் எதிர் காலத்தின் விவசாய முயற்சிகள் முற்றாகச் செயலிழந்து போகும்.

பெரும் பணம் படைத்தவர்களே இவ்வாறு "ஐநூறு லோட் மண்ணடிக்கக் காணி நிமிரும்" என்கிறார்கள்.

இந்த ஐநூறு லோட் மண்ணை அகழும் இடத்தில் வீட்டைக் கட்டினால் என்ன? தான் தோன்றித்தனமாக நாட்டின் வளத்தைத் தன் பணத்தால் அழிக்க முயலும் இவர்களின் செயல்களை ஏனோ சட்டமும் தடுப்பதில்லை. திட்ட அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை. "நவீன இஸ்ரேலியர்கள் நாம்" என்று கூறுமளவுக்கு அரசியலை விளங்கிக் கொள்பவர்களே இத்தவறுகளைச் செய்கிறார்கள்.

குறிப்பாக இன்னுமொரு திட்டமிட்ட குடியேற்றக் கிராமம். ஒரு குளத்தின் அலைகரையின் மேல் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் குளத்தின் நீரைப் பயன்படுத்தும் விவசாயிகள் குளக்கட்டு வேலையைச் செய்தனர். குளத்தின் மேற்கரையிலும் விவசாய நிலங்கள் இருந்தன. இவை எவற்றையும் கவனத்தில் கொள்ளாமல் குளக்கட்டு மேலும் உயரமாக்கப்பட்டு அதன் கொள்ளவு அதிகரிக்கப்பட்டது. விளைவு இம்முறை நீர்த்தேக்கம் கிழக்கே பல வீடுகளையும் மேற்கே பல விவசாய நிலங்களையும் காவு கொண்டது.

வீடுகளைக் கட்டிக்கொள்ளப் பணவசதியற்றவர்கள் மட்டுமே ஒரு குடிசைபோடவும் சட்டத்தின் அனுமதியைக் கோரி நிற்கிறார்கள். பணம் படைத்தவர்கள் அதையெல்லாம் லட்சியம் செய்வதில்லை. அதிலும் அவர்களிடம் அதிகாரமும் இருந்துவிட்டால் பேசவே தேவையில்லை. ஒதுக்கப்பட்ட காணியில் வீடுகட்டியதற்காக ஒரு ஏழைப்பெண் பல வருடங்களாக நீதிமன்றுக்கு அலைய, அதே ஒதுக்கப்பட்ட பிரதேசத்தின் மீது அதிகாரம் படைத்தோரின் ஆடம்பர மாளிகைகளும், தட்டிக் கேட்கவேண்டிய கிராம அதிகாரியின் வதிவிடமும், நிரந்தரமாகவும், கம்பீரமாகவும் எழுந்து நிற்கும் அதிசயத்தை என்னென்பது? எல்லாம் கிளிநொச்சியில் மட்டுமல்ல, வெளியிலும், இதுபோல் நடக்கத்தான் செய்கிறது. ஊரைச் சொன்னாலும் பேரைச்சொல்லாதே' என்பார்கள் எனக்கேன் வம்பு.

மாயா

# சுனாமிப் பரீட்சை





**தனது சொந்தச் சிங்கள மக்களுக்கே ஒரு வினைத்திறன் மிக்க ஒழுங்கான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க முடியாது திணறிக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கம் வட~கிழக்கில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் என்று ஒரு நிர்வாகக் கட்டமைப்பை அதுவும் அதிகம் உணர்ச்சிகரமான ஒன்றை உருவாக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உண் டாகியிருக்கிறது.**

**இது அவர்களைப்பொறுத்தவரை ஒரு சோதனை. அவர்களுக்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்திற்கும் இது சோதனைதான். சிறிலங்காவின் சமாதான முயற்சிகளை விடவும் சிறிலங்காவின் சுனாமி அரசியல் ஒப்பீட்டளவில் அதிகம் சர்வதேச மயப்பட்டதாக மாறிவிட்டிருக்கிறது. இத்தகைய ஒரு பின்னணியில் இது விசயத்தில் அரசாங்கம் என்ன முடிவை எடுக்கப்போகிறது என்பதும், அந்த முடிவு அதிகாரப் பகிர்வின் ஒரு தொடக்கப் புள்ளியாக அமையும் விதத்தில் அரசாங்கத்தின் மீது சொல்வாக்கை அல்லது அழுத்தங்களை பிரயோகிப்பதில் மேற்கு நாடுகள் எத்தகைய வெற்றிகளை பெறக்கூடும்என்பதும்தான் இலங்கைத் தீவின் முழுச்சமாதான முயற்சி களுக்குமான ஒரு குறிகாட்டியாக "அமையப்போகிறது.**

சுனாமி-2004, ஆசியாவுக்கு அழிவை மட்டும் கொண்டுவர வில்லை அது சில நாடுகளுக்கு சோதனையையும்- பரீட்சையையும் - வைத்திருக்கிறது. இந்தச் சோதனை யில் குறிப்பிட்ட நாடுகள் சித்தி பெறுமா இல்லையா என்பதில்தான் அந்த நாடுகளின் தலைவிதியே தங்கி யிருக்கிறது.

இந்தோனேசியா இப் பொழுது முதற்கட்டமாக அந்தச் சோதனையை எழுதிக்கொண்டிருக் கிறது. அங்கே அச்சே போராளி களுக்கும் இந்தோனேசிய அரசாங் கத்திற்குமிடையில் அண்மையில் பேச்சுக்கள் தொடங்கியிருக்கின்றன. பின்லாந்தின் தலைநகர் ஹெல் சிங்கியில் முன்னால் பின்லாந்து பிர தமர் மார்ரி அ.'.ரிசாரியின் அனு சரணையுடன் கடந்த மாதக் கடைசியில் மேற்படி பேச்சுக்கள் தொடங்கி யிருக்கின்றன.

அங்கே ஏற்கனவே இருந்து வந்த ஒரு யுத்தநிறுத்தம் முறிக் கப்பட்டு சண்டைகள் தொடங்கி நடந்துகொண்டிருந்த ஒரு சூழலில் சுனாமி அச்சேயைத்தாக்கியது. இப் பொழுது சுனாமியின் பெயரால் அங்கே பேச்சுக்கள் மறுபடியும் தொடங்கியிருக்கின்றன.

ஆனால், இலங்கைத் தீவிலோ அரசாங்கம் இன்னமும் இந்தச் சோதனையில் அமர்வதற்கே தயாராயில்லை. அயலில் உள்ள பேரரசுகள் எதையாவது பிடித்து குதிரை ஓடலாமா என்றே சந்திரிகா சிந்திப்பது போல தெரிகிறது.

யோசனைகள், மாற்று யோசனைகள், திருத்தப்பட்ட யோச னைகள் என்று கொழும்புக்கும் கிளி நொச்சிக்குமிடையில் ஹெலிகொப் டர்கள் சலியாது பறந்துகொண்டிருக கின்றன. அறிக்கைகள், பேட்டிகள், பத்திரிகையாளர்கள் சந்திப்புக்கள் என்றெல்லாம் சுனாமி அரசியலானது சுனாமிக்கு முன்பிருந்த அதே சலிப் பூட்டும் அருவருப்பான தடத்திற்கே திரும்பிச் சென்றுகொண்டிருக்கிறது.

சுனாமிக்கு முன்பு சமா தானப் பேச்சுவார்த்தைகள் பெரு மளவுக்கு தேங்கி நின்றுவிட்டிருந்த ஒரு சூழலிலும் இப்படித்தான் யோச னைகள், மாற்று யோசனைகள், திருத்தப்பட்ட யோசனைகள் என்று ஹெலிகொப்டர்கள் வீணே பறந்தன. ஒரு கட்டத்தில் மாவீரர் நாள் உரை யோடு எல்லாவற்றுக்கும் ஒரு எல்லைக்கோடு வரையப்பட்டது.

ஆனால், சுனாமி வந்து அந்த எல் லைக்கோட்டை தள்ளிவைத்துவிட் டது. அதே சமயம் சுனாமி, புதிய எல்லைக்கோடுகளை கொண்டு வந்திருக்கிறது. அதன்படி சுனாமியின் அகதிகளை மீளக் குடியமர்த்துவதற் கும் அவர்களுடைய வாழ்வை மீளக் கட்டியொழுப்புவதற்குமாக உடன டியான ஒரு நிர்வாக பொறிமுறைக் கான கட்டாயத்தை அது கோரி நிற்கிறது.

முன்பு யுத்தத்தின் அகதி களை வரையறையின்றி காத்திருக்க வைத்துக்கொண்டு ஹெலிகொப் டர்கள் வீணே பறந்தன. ஆனால், இப்பொழுது சுனாமியின் அகதி களை அவ்வாறு காத்திருக்க வைக்கமுடியாது. ஏனெனில் யுத்தத்தின் அகதிகளை விடவும் சுனாமியின் அகதி கள் அதிகம் சர்வதேச மயப்பட்டவர்களாகக் காணப் படுகிறார்கள். ஒரு விதத்தில் சர்வ தேச சமூகம் அவர்களை தத் தெடுத்துவிட்டது போல ஒரு தோற்றம் உண்டாகியிருக்கிறது.

எனவே யுத்தத்தின் அகதி களைப்போல சுனாமியின் அகதி களை அநாதைகளாக தனித்துவிட முடியாத ஒரு நிலை. இதனால் சுனாமி யின் அகதிகளை பராமரிப்பதற்கும் அவர்களுடைய வாழ்வை மீளக் கட்டி எழுப்புவதற்குமான ஒரு நிர்வாகப் பொறிமுறை எனப்படுவது அதிக மதிகம் சர்வதேச மயப்பட்டதாகவே அமையவேண்டியிருக்கிறது.

யுத்தத்தின் அகதிகளு டைய வாழ்வை மீளக்கட்டி எழுப்பு வதற்காகவே புலிகள் இடைக்கால நிர்வாக ஏற்பாடு ஒன்றை கேட்டு வந்தார்கள். அதை ரணில் விக்கிரம சிங்கவும் ஏற்றுக்கொள்ளவில்லை சந்திரிகாவும் ஏற்றுக்கொள்ள வில்லை. சர்வதேச சமூகமும் அது விசயத்தில் ஒரு கட்டத்துக்கு மேல் கையாலாகாததாக மாறும் ஒரு நிலை தோன்றிக்கொண்டிருந்த போதே புலிகளின் மாவீரர் நாள் உரை வந்தது.

இப்பொழுது சுனாமி அரசி யலில் அந்த இடைக்கால நிர்வாக ஏற்பாட்டில் பிரேரிக்கப்பட்டிருந்த ஒரு விசயத்தின் மீது- நிதி நிர்வாகத்தின் மீது- அதிக கவனம் குவிக்கப்பட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் சம்பந் தப்பட்ட எல்லாத்தரப்புக்கும் உரு வாகியிருக்கிறது.

சிறிலங்காவுக்கு வரும் சுனாமி நிதியில் தமிழர்களுக்குரிய பங்கை எப்படி கையாளுவது என்ப தற்கான ஒரு நிர்வாக பொறிமுறை பற்றியே இப்பொழுது யோசிக்கப் படுகிறது. இப்பத்தியில் சில வாரங் களுக்கு முன் கூறப்பட்டது போல அப்படியொரு நிர்வாகப் பொறிமுறை பற்றி சிந்திப்பது என்பது ஒரு இடைக் கால நிர்வாக ஏற்பாட்டில் நிதிக் கையாளுகை பற்றி எடுக்கப்படக் கூடிய முடிவுகளுக்கு அடிப்படையாக அமையக்கூடும். அதாவது ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின சர்ச்சைக்குரிய சில பகுதிகளைக் குறித்து தீவிரமாக சிந்தித்து உட னடியாக முடிவெடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை சுனாமி கொண்டு வந்திருக்கிறது.

இதிலுள்ள பிரச்சினை என்னவென்றால்.. முன்பு சந்திரி காவும் ஜே.வி.பியும் எதைக் குறித்துப் பேசத் தயாராக இல்லாமலிருந் தார்களோ அதைப் பற்றி உடனடியாக முடிவெடுக்கவேண்டிய ஒரு கட் டாயம் தோன்றியிருக்கிறது என்பதே.

ஒரு புறம் அரசாங்கம் தெற் கில் தனது சொந்த சிங்கள மக்க ளுக்கே ஒரு வினைத்திறன் மிக்க நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க முடியாமல் திணறுகிறது. இன்னொரு புறம் வட- கிழக்கிற்கான ஒரு நிர் வாகப் பொறிமுறைபற்றி அதுவும் எதிர்காலத்தில் எந்த ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டிற்கும் கருவாக அமையக்கூடிய ஒரு நிர்வாகப் பொறி முறைபற்றி முடிவெடுக்க வேண்டி யிருக்கிறது.

தெற்கில் சுனாமிக்குப் பிந் திய நிலைமைகளை கையாள்வதற்கு அரசாங்கம் உருவாக்கி வைத்திருக் கும் நிர்வாகக்கட்டமைப்புக்கள் அநே கமாக தோல்வியடைந்துவிட்டன என்று கூறப்படுகின்றது. இத்தகைய கட்டமைப்புக்களில் ஒன்றிற்கு பொறுப் பாயிருந்தவரும் சந்திரிகாவின் மிக நெருங்கிய சிநேகிதியுமான கலாநிதி தாரா டிமெல் கடந்தகிழமை தனது பொறுப்பை ராஜினாமா செய்ததை இங்கே சுட்டிக்காட்டலாம். இது தவிர சுனாமி உதவிகள், பாதிக்கப்பட்ட மக்களில் சுமார் 30விகிதத்தினருக்கு மட்டுமே கிடைத்திருப்பதாக அத்தி யாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜ கடந்த கிழமை கூறியிருக்கிறார். கடந்த திங்கட்கிழமை - 7ஆம் திகதியுடன் இந்த விகிதம் 75 ஆக மாற்றப்பட்டு விடவேண்டும் என்று சந்திரிகா கண்டிப்பாக உத்தரவிட்டுள் ளாராம்.

அதாவது தனது சொந்தச் சிங்கள மக்களுக்கே ஒருவினைத்திறன் மிக்க ஒழுங்கான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க முடியாது திணறிக்கொண்டிருக்கும் ஒரு அரசாங்கம் வட-கிழக்கில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும என்று ஒரு நிர்வாகக்கட்டமைப்பை அதுவும் அதிகம் உணர்ச்சிகரமான ஒன்றை உருவாக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உண்டாகியிருக்கிறது.

இது அவர்களைப்பொறுத் தவரை ஒரு சோதனை. அவர் களுக்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத திற்கும் இது சோதனைதான். சிறி லங்காவின் சமாதான முயற்சிகளை விடவும் சிறிலங்காவின் சுனாமி அர சியல் ஒப்பீட்டளவில் அதிகம் சர்வ தேசமயப்பட்டதாக மாறிவிட்டிருக் கிறது. இத்தகைய ஒரு பின்னணியில் இது விசயத்தில் அரசாங்கம் என்ன முடிவை எடுக்கப்போகிறது என்பதும், அந்த முடிவு அதிகாரப்பகிர்வின் ஒரு தொடக்கப்புள்ளியாகஅமையும் விதத் தில் அரசாங்கத்தின் மீது சொல் வாக்கை அல்லது அழுத்தங்களை பிரயோகிப்பதில் மேற்கு நாடுகள் எத் தகைய வெற்றிகளை பெறக்கூடும் என்பதும் தான் இலங்கைத்தீவின் முழுச்சமாதான முயற்சிகளுக்குமான ஒரு குறிகாட்டியாக அமையப் போகிறது.

இப்படிப்பார்த்தால் சுனாமிப்பரீட்சை சிறிலங்காவிற்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்திற்கும் தான். இந்தப் பரீட் சையில் இரு தரப்பும் பெறப்போகும் பெறுபெறுகளே இனி சமாதானத்தின மீதான தமிழர்களின் நம்பிக்கை களைப் புதிப்பிக்கும்.

இல்லையென்றால், எதற் கெடுத்தாலும் பேச்சுவார்த்தை என்று சொல்லி முடிவுகளை எடுக்காது பேசிக்கொண்டிருப்பதன் மூலம் ஏதோ பெரிதாக நடக்கிறது என்ற ஒரு மாயத்தோற்றத்தை உரு வாக்கும் ஒரு தந்திரமே இது என்று தமிழர்கள் விரக்திவசப்பட நேரிடும்.

கடந்த சுமார் மூன்று ஆண்டு கால யுத்தநிறுத்தத்தில் புனிதமிழந்து கொண்டே வரும் விவகாரங்களில் ஒன்று பேச்சு வார்த்தை.

எதற்கெடுத்தாலும் பேச்சு வார்த்தை என்று சொல்லி அனுசர ணையாளரையும் மினக்கெடுத்தி புலி களையும் மினக்கெடுத்தி ஊடகக் காரர்களையும் மினக்கெடுத்தி இதன்

*நிலாந்தன்*

மூலம் காலத்தைக் கடத்துவதே சந்தி ரிகாவின் சமாதானத்திற்கான உத்தி யாக இருந்து வந்துள்ளது.

எதற்கெடுத்தாலும் ஒரு பேச்சுவார்த்தை. பேச்சுவார்த்தைக ளைத் தொடங்குவதற்கும் ஒரு பேச்சு வார்த்தை. பிறகு புலிகளின் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளைப் பரிசீலிப்பது பற்றிப் பேசுவதற்கும் ஒரு பேச்சுவார்த்தை. இப்பொழுது சுனாமி நிதிநிர்வாகக் கட்டமைப்பைப் பற்றிப்பேசுவதற்கும் ஒரு பேச்சுவார்த்தை.

இப்படியே போனால் பேச்சு வார்த்தை என்ற பொறிமுறை அதன் புனிதத்தை இழந்துகொண்டே போய் ஒரு கட்டத்தில் போரைத் தொடங்கு வதற்கும் ஒரு பேச்சுவார்த்தை என்ற ஒரு நிலை வந்தாலும் வரலாம்.

# அழிவுற்று வரும் பொன்னாவெளிக் கிராமம்



பண்டைய மன்னராட்சிக் காலத்தில் வன்னியில் பிரதான ஆட்சி காணப்பட்ட போதிலும் பல சிற்றரசுகள் ஆங்காங்கே ஆட்சி செய்து வந்துள்ளன.

அவ்வாறான வன்னிச் சிற்றரசு ஆட்சியில் ஒன்றுதான் பூநகரி பிரதேசமும். இவற்றை வரலாற்று ஆசிரியர்களான திரு. சிற்றம்பலம், திரு. புஸ்பரட்ணம் என்பவர்கள் தங்களின் ஆய்வு நூல்களில் விளக்கியுள்ளனர். இவ்வாறு சிறப்பு மிக்க பூர்வீகக் கிராமங்கள் சில இன்று அழிந்துகொண்டு வருகின்றன. சில அழிந்துவிட்டன. இந்த வகையில் அழிந்து வருகின்ற கிராமங்களில் ஒன்றான கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பொன்னாவெளி எனும் கிராமம் ஆகும்.

கிளிநொச்சி நகரிலிருந்து 63 கி.மீற்றர் தூரத்தில் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள இக்கிராமம் வரலாற்றுச் சிறப்புமிக்க பூர்வீகக் கிராமம் ஆகும். பொன்னாவெளி என்பதன் அர்த்தம் பொன் போன்று நெல் விளைந்ததும், வெளிகொண்ட தரை நிலத்தில் ஆயிரக்கணக்கான பசு மாடுகள் புல் மேய்ந்துகொண்டு நிற்பதை வைத்தும் முன்னோர் இக் கிராமத்தை பொன்னாவெளி என பெயர் சூட்டினார்கள் என கூறப்படுகிறது. இக்கிராமத்தை சுற்றி வடக்கே பாலாவி கிராமமும் மேற்கே கடலும் சூழ்ந்து, தெற்கே வலைப்பாட்டுக் கிராமமும் தென்கிழக்கே வேரவில் கிராமமும், கிழக்கே காடுகளும் சூழ்ந்து காணப்படுகின்றது. முன்னைய காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் செல்லும் பிரதான வீதி கூட பூநகரி செம்மண்குன்று வழியாக பாலாவி, பொன்னாவெளி ஊடாகச் சென்று சம்பு வெளி என்னும் வீதியால் பல்லவராயன் கட்டை அடைந்து அதனூடாக மன்னார் யாழ்ப்பாணப்பாதை அமைந்திருந்ததாக இங்குள்ள பெரியார்கள் கூறுகின்றனர்.



மேலும் இங்கு வாழ் கின்ற மக்கள் தமது பிரதான தொழிலாக விவசாயம் (குறிப்பாக நெல்) மற்றும் விலங்கு வேளாண்மையை (குறிப்பாக மாடுவளர்ப்பு) அன்றிலிருந்து இன்றுவரை மேற்கொண்டு வருகின்றனர். கல்வியை பொறுத்தவரை ஆதியில் திண்ணை முறை கல்வியே காணப்பட்டுள்ளது. அதாவது மர நிழல்களின் கீழ் குருவுக்கு பணிவிடை செய்தே கற்கவேண்டும். இங்கு சைவமும், இலக்கியமுமே கற்பிக்கப்பட்டுள்ளன. இதனால்தான் இன்றும் கூட இங்குள்ள மாணவர்கள் வெளியிட மாணவர்களை விட சைவம், தமிழ் பாடங்களில் உயர்ந்த நிலையில் காணப்படுவது இதன் வரலாற்றுக்கு ஓர் சான்றாகும்.

அதைவிட 1908ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திண்ணைப் பாடசாலை ஒன்று அமைந்துள்ளது. இதற்கு ஆறுமுகநாவலர் தான் சைவப்பிரகாச வித்தியா சாலை என்று பெயர் சூட்டினார். அன்று இந்தப் பாடசாலை சுண்ணாம்புக் கற்களினால் அமைக்கப்பட்டு கிடுகுகளினால் வேயப்பட்டு இருந்தது. பின்பு அரசு பொறுப்பேற்று ஓர் நிரந்தர கட்டடத்தை அமைத்து கிளி/ பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாசாலை என்று இயங்கி வருகின்றது. ஆனால், இங்கு தரம்05 மட்டும் காணப்படுகிறது. இப் பாடசாலையில் கல்வி கற்ற பலர் இன்று அரச திணைக்களங்களில் உயர் பதவிகள் தொடக்கம் பல்வேறு பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பொன்னாவெளியில் வாழ்கின்ற மக்கள் இந்து சமயத்தை சேர்ந்தவர்கள். மாமிசத்தை உண்ணாதவர்கள். ஆனால், இன்று ஒரு சில குடும்பத்தை தவிர பல நாகரிக மாற்றத்தால் தங்களையும் மாற்றிக்கொண்டுள்ளனர். இக்கிராமம் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. அதைவிட இங்கு நான்கு தலைமுறைகளுக்கு மேலான உடையார் பரம்பரை வாழ்ந்துள்ளனர். இவர்கள் இவ்வூர் நிர்வாகத்தில் பெரும் பங்கு வகித்துள்ளனர். அதாவது ஊருக்குள் ஏதேனும் பிரச்சினைகள தோன்றின் அதனை நியாயமான முறையில் நீதிகளை வழங்கி தீர்த்து வைப்பதில் சிறப்பானவர்கள். அத்தோடு சைவத்தை வளர்ப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளார்கள். இதன் வெளிப்பாடாக பிள்ளையார், சிவன், கண்ணகையம்மன் ஆகிய கடவுள்களுக்குக் கோயில் அமைத்து வழிபட்டு வந்துள்ளனர்.

அ.பிரகாஷ், சுழியன்

கந்த உடையார், சின்னத்தம்பி உடையார், குமாரசாமி உடையார், அருளம்பலம் உடையார் என இந்த உடையார்கள் இந்த நூற்றாண்டின் ஆரம்பம்வரை வாழ்ந்திருக்கின்றனர். தொன்மை வாய்ந்த இப் பிரதேசத்திலிருந்து ஆறுமுக நாவலருக்கு பூசைக்கு பால், நெய், தேன், நெல் என்பன கொடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு கண்ணகி மதுரையை எரித்துவிட்டு இலங்கைககு வந்து பொன்னாவெளிக் கிராமத்தில் தில்லை மரப்பொந்தில் சிலம்பு, பிரம்பு என்பவற்றை வைத்து விட்டு வற்றாப் பளைக்குச் சென்றதாக இக்கிராமத்தில் ஓர் செவிவழிக் கதையுண்டு. இச்சிலம்பையும், பிரம்பையும் கண்டெடுத்த முன்னைய மூதாதையர்கள் கண்ணகிக்கு ஓர்ஆலயமும் அமைத்து பொன்னாவெளி கண்ணகை அம்மன் ஆலயம் என்று பெயர் சூட்டி ஒவ்வொரு வருடமும் பொங்கல்விழா செய்து வருவதாகவும் செவிவழிக் கதைகள் கூறப்படுகின்றன.

மேலும் , திருக்கேதீச்சர ஆலயத்திற்கு பால், தயிர், நெய், தேன் போன்ற அபிசேகப் பொருட்கள் அங்கிருந்துகொண்டு சொல்லப்பட்டதாகவும் அறிய முடிகிறது. ஆரம்பகாலங்களில் 1500 ஏக்கர் பரப்பளவுக்கு மேற்பட்ட நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இன்று 500 ஏக்கர் பரப்பளவாக குறைந்துள்ளது. தென்னஞ்சோலைகளாக இருந்த இடம் இன்று காடுகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் இவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.



ஆரம்பத்தில் 150இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த பொன்னாவெளியில் இன்று 12 குடும்பங்களே வாழ்கின்றார்கள் இதிலும் 03 குடும்பங்கள் 'தற்காலிகமானவர்கள். இதற்குக் காரணம் கால மாற்றத்தினால் கல்வி, மற்றும் தொழில்வாய்ப்பு கருதி வெளியிடங்களுக்குச் சென்றமையாலும் வெளியிடங்களில் திருமண உறவுகளை ஏற்படுத்திக்கொண்டமையும் காரணமாகக் கூறப்படுகிறது. இக்கிராமத்தில் கல்வி, போக்குவரத்து, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட பல வசதிகள் இன்மையால் மக்கள் வசதி வாய்ப்புகள் நிறைந்த இடங்களை நோக்கிச்செல்கின்றனர். இதே நிலை தொடர்ந்தால் இன்னும் ஒரு சில வருடங்களில் இருக்கின்ற 12 குடும்பங்களும் பொன்னாவெளியை விட்டு இடம்பெயர வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓர் பிரதேசம் அழிவதை எவராலும் தடுக்கமுடியாது. இங்கு தற்போது உள்ள இளைய தலைமுறையினர் பெரும்பாலும் நகர்ப் புறங்களை நோக்கி வாழ்வதையே விரும்புகின்றனர். எனவே அங்குள்ள மூதாதையர்களின் காலம் ஒரு சில ஆண்டுகளில் முடிவடைய பொன்னாவெளியின் கதையும் முடிந்ததாகவே அமையும். இதனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கிராமத்தை பாதுகாக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இல்லையெனில் எமது மண்ணில் இருக்கின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க கிராமத்தின் அழிவு எம் கண் முன்னே நடந்து விடும் அபாயமுண்டு. எனவே அக்கிராமத்திற்கு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதோடு விவசாயம் செய்வதற்கும் ஏற்ற ஓர் சூழ்நிலையை தோற்றுவித்து குடியேற்றங்களை உருவாக்கி வரலாற்றில் பழமை வாய்ந்த ஓர் கிராமத்தை அழிவின் விளிம்பில் இருந்து காப்பாற்ற வேண்டிய நேரம் இது. இல்லையெனின் பொன்னாவெளியின் அழிவு நிச்சயமான ஒன்றாகிவிடும். ●



பொன்னம்பலம் தர்மலிங்கம்



# புலிகளைச்சீண்டினால்..?

போதும் போதுமென்ற அளவுக்கு பொறுமை காத்தாகிவிட்டது. இனியும் எதுவரை பொறுமை காக்க வேண்டுமாம்.

இப்ப கையைக்கட்டிப் போட்டு கழுத்தறுக்கிறமாதிரி சிங்கள தேசம் தன்னுடைய நரித்தனமான விளையாட்டை போடுகினம்.

இவையள் ஏதோ ஒரு செய்தியை திரும்பத் திரும்பச் சொல்லுவது போலவும் அதை நாங்கள் தமிழர்கள் விளங்கிக் கொள்ளாமல் இருக்கிறது போலவும் சிங்களதேசம் தனக்குள்ள நினைச்சுக்கொண்டு இருக்கிது போல.

ஆனால் தமிழர்களுக்கும் எல்லாம் விளங்கும். அவையள் எதை விளங்கேல்லை எண்டு நினைச்சுக்கொண்டு இருக்கினமோ அதை எல்லாருக்கும் தமிழர்கள் எப்படி புரிஞ்சு வைச்சிருக்கிறம் எண்டதை உணர்த்தவும் தெரியும்.

ஆனால் இவையள் நினைக்கிறமாதி நாங்கள் ஒண்டும் நிதானம் இல்லாதவர்கள் இல்ல.

புலிகளுக்கு எண்டொரு கௌரவம் இருக்கு. புலிகளுக்கெண்டொரு சண்டையிருக்கு எண்டு 1995 இல முல்லைத்தீவு இராணுவ முகாம் நிர்மூலமாக்க அணிவகுத்திருந்த போராளிகள் மத்தியில கேணல் தீபன் சொன்னவர். அதைப்போல புலிகளுக்கெண்டொரு பொறுமையும் இருக்கு அதை இப்ப சொல்லுறம். அதைச் சீண்டிப் பார்த்தால் சிங்கள தேசம் தாங்கிக்கொள்ளாது.

பொறுமைக்கு நாங்கள் மதில் கட்டிப்பார்ப்பம் எண்டால் அவங்கள் கிடங்கு வெட்டிப் பார்ப்பம் எண்டுறாங்கள்.

சரி வெட்டட்டும். யார் அதில் தாழப்போகிறது எண்டுறதை காலம் விரைவிலேயே சிங்கள தேசத்துக்கு உணர்த்தும். இது மட்டும் நிச்சயம்.

# ஒரே திசையில் அதிகரிக்கும் வேகம்

ஐங்கரன்

உலக அரசியல் ஒரே திசையில் பயணித்துக்கொண்டிருக்கும் வேகம் மீளவும் அதிகரிக்க ஆரம்பித்துவிட்டது. அவ்வதிகரிப்பு நிலையான அதே நேரம் நீடித்த போக்கை காணமுயற்சிக்கின்றது. அம்முயற்சியின் படிக்கற்களாகவே ஈராக் மற்றும் ஏற்கனவே நடந்து முடிந்த பலஸ்தீன தேர்தல்கள் அமைந்துள்ளன. அமெரிக்காவின் சீரான பயணத்தின் புதிய அத்தியாயங்களை புதிதாக நியமிக்கப்பட்ட அமெரிக்க வெளிவிவகார செயலாளர்



தேர்தலில் அதிக வன்முறைகள் நிகழ்ந்தது என்பது ஒரு புறம் அமைந்திருக்க மறுபக்கத்தில் சுனி முஸ்லிம் பிரிவினர் நிராகரிக்க தேர்தலில் மிக குறைந்தளவான பங்களிப்பே சாத்தியமானது. 275 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான முயற்சியில் ஈராக்கிய மக்கள் ஒன்றுசேர முடியாத நிலை காணப்படுவதுடன் பங்களிப்பு மிகக் குறைவாகவே அமைந்திருந்தது. கட்சிகள், தேர்தல்கள் பற்றிய அறிவின்மை என்பதைவிட ஈராக்கியரின் தன்னாதிக்கமற்ற தேர்தல் என்பதே அவர்கள் வாதமாக இருந்தது. ஆனால் அமெரிக்கர்களோ உலகத்தின் கண்களுக்கு சேற்றைவாரிவீசிவிட்டு தமக்கு ஆதரவான மிதவாதிகளை தேர்ந்தெடுத்துவிட்டார்கள். அவ்வாறு பார்க்கும்போது அமெரிக்க மயமாக்கத்துக்கான அமெரிக்க சனநாயகத் தேர்தல் சாதகமாக நிறைவேறிவிட்டது.

**இஸ்ரேல் – பலஸ்தீனம்.**

பலஸ்தீன சனாதிபதியாக

2002 இல் பலஸ்தீன அரசு இஸ்தாபிக்கப்படுவதற்கான வாய்ப்பு உருவாவது பற்றி அதிகம் அமெரிக்க அதிபரே அடிக்கடி பிரஸ்தாபிக்கின்றார். அத்தகைய சாத்தியப்பாடு அபாஸ் காலத்தில் நிர்ணயமாகுமாயின் அது அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டில் தங்கியிருக்கும் பலவீனமான, இறைமையற்ற, அமெரிக்க மயமாக்கத்துக்குட்பட்ட அரசாகவே அமையும். அதனை பலஸ்தீனர்களது அரசென்று கூறுவதைவிட மிதவாத அடிவருடிகளது அரசு என்று அழைப்பதே பொருத்தமானதாகும். எனவே இந்தவகையில் பார்த்தால் அமெரிக்கர்களின் இலக்கு சாதகமான விளைவையே ஏற்படுத்தியுள்ளது. பலஸ்தீன மக்கள் அமெரிக்க மயமாக்கத்துக்குள் உட்படுவதுமட்டுமன்றி இஸ்ரேலிய எதிர்ப்புக்கு எதிராகப் போராடுவதை விடுத்து சுதேசத்துக்குள்ளேயே முரண்பாட்டுடன் மோதுபவர்களாக மாறுவார்கள். அத்தகைய பலவீனத்துக்குள் அகப்பட்டுள்ள



மீதான யுத்தம் ரம்ஸ் பீல்ட்டின் யுத்தம் என்பது போல் இனிவரப்போகும் யுத்தம் எதற்கும் (ஈரானுடனோ, அல்லது வடகொரியாவுடனோ, அல்லது ஜோர்தானுடனோ) கொண்டோலோவே முதன்மை வகிப்பவராக இருப்பார்.

அவரது முதல் ஐரோப்பிய விஜயம் ஈரானுக்கு எதிராக ஐரோப்பாவை அணி சேர்ப்பதாகவே அமைந்திருந்தது. அத்துடன் ஈரான் மீதான பொருளாதாரத்துக்கான அறை கூவலையும் ஐரோப்பாவில் விதைத்துள்ளார். மேலும் மேற்காசியாவிற்கு விஜயம் செய்த ரைஸ் இஸ்ரேல்-பலஸ்தீன தலைவர்களை சந்தித்து உரையாடியதுடன் இருதரப்புடனான சந்திப்பையும் மேற்கொண்டுள்ளார். இஸ்ரோலியத் தரப்பை அதிகம் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் ரைஸ் பலஸ்தீன தரப்பை மிருதுவாக தட்டிக் கொடுத்துள்ளது போல் நடந்துள்ளார்.

இவரது விஜயம் ஒரு வகையாக இராஜதந்திர நகர்வாகவே விளங்குகிறது. அமெரிக்கா உலகத்தின் போக்கில் அடுத்த கட்டத்தை எப்படி நகர்த்தப் போகின்றது என்பதை கோடிட்டு காட்டியிருப்பதுடன் ஒரே திசையில்

கொண்டோலோ ரைஸ் மேற்கொள்வார் போல் தெரிகின்றது. குறிப்பாக அவரது ஐரோப்பிய பயணம் அதன் அடுத்த இலக்காக இஸ்ரேல் - பலஸ்தீனத்திற்கு சென்றவற்றை வைத்துக்கொண்டு அதனை விளங்கிக்கொள்ளலாம். இதனை முழுமையாக பரிசீலிப்போம்.

**ஈராக் தேர்தல்**

ஈராக்கில் நடந்துமுடிந்த தேர்தல் சனநாயகத்திற்கானதும், சுதந்திரத்திற்கானதுமென யாரும் பிதற்றிக்கொள்ளலாம்! ஆனால், யதார்த்தத்தில் ஈராக் தேர்தல் அமெரிக்க நலனுக்கானதாகவே அமைந்துள்ளது என்ற விமர்சனத்தை மேற்குசார் ஊடகங்கள் முன்வைத்தாலும் அமெரிக்க மயப்படுத்தலில் ஈராக் தேர்தல் ஒரு மைற்கல் என்றே மதிப்பிடுதல் பொருத்தம். அதன் மூலம் இஸ்லாமியர் மத்தியில் புதிய வரலாற்றை எழுதவேண்டிய அவசியத்தை அமெரிக்கா ஏற்படுத்திவிட்டது. அதன் பாதையில் ஈராக் மக்களின் அரசியல், கலாசாரம், பொருளாதாரம் என்பன வடிவமைக்கப்படும் அமெரிக்காவின் அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றியாகவே இத்தேர்தல் அளவீடு வெய்தல் வேண்டும். அவ்வாறு பார்ப்போமாயின் இது மேற்காசியாவில் அதிலும் குறிப்பாக இஸ்லாமியர் மத்தியில் இரண்டாவது சாதனையாகக் கூறலாம். இது இஸ்லாமியருக்கோ, மேற்காசியருக்கோ சாதனையாக இல்லாமலிருக்கலாம். ஆனால் அமெரிக்க மயமாக்கத்திற்கு சாதகமான மாறுதலாகவே அமைந்துள்ளது.

முகமட் அபாஸ் தெரிவான பின்பு அதிக ஒத்துழைப்பை அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாக வழங்கிவருகின்றன. அமெரிக்க சனாதிபதி 350 மில்லியன் அ.டொலர் உதவியாக பலஸ்தீனத்திற்கு வழங்குவதாக அறிவித்துள்ளமை, மற்றும் காங்கிரஸ் 31 மில்லியன் அ.டொலர் வழங்க முன்வந்திருப்பவை எல்லாமே அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகவே உள்ளது. இவ்வகையான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் அபாஸுக்குரியதென்றே விமர்சிக்கப்படுகின்றது.

சனாதிபதி அபாஸ் எந்தளவுக்கு அரபாத்போன்று காட்சியளித்தாலும், தோன்றினாலும் அரபாத் போலாகிவிட முடியாது. அரபாத் தனித்துவமான விடுதலைப் போராட்டம் சார்ந்த, மிதவாத அரசியல் வீரராகவும் விளங்கியவர். ஆனால் அபாஸ் அரபாத்தின் வடிவத்தை காண்பித்து பலஸ்தீனர்களின் தலைவராகிவிட்டார். நிச்சயமாக அவர் அசல் பலஸ்தீனத்தின் தலைவனாக விளங்கமுடியாது. ஒரு வகையில் அவர் அமெரிக்காவின் கூலியாளாகவே செயல்பட முடியும். யூதர்களுக்கும் அமெரிக்கருக்குமான நெருக்கம் நிரந்தரமானது. அதனை மீறி இரண்டு சக்திகளும் தனிமைப்படுவதோ, முரண்படுவதோ கடினம். எனவே அவை இரண்டும் சேர்ந்து பிறசக்திகளை தனிமைப்படுத்தவே முயலும். அதன் ஒரு முயற்சியே அபாஸுக்கான அமெரிக்க உதவிகள்.



பலஸ்தீனத்தின் வழிகாட்டியாகவே அபாஸ் விளங்குவார். இவரது மிதவாத அரசியலுக்கான தவறாக கற்பிதம் அதிகமாக முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கவல்லது.

**கொண்டோலோ ரைஸ்**

தனித்துவமான அமெரிக்க விசுவாசி. அமெரிக்காவுக்காக பிறந்த கறுப்பு பெண்மணியினரால் அமெரிக்காவுக்கும் மேலாக வில்லியம் புஷ்ஷின் விசுவாசி புஷ்ஷின் கடந்த கால ஆட்சியின் போது தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக விளங்கியவர். தீவிர வெறியர். ஆமெரிக்க ஆதிக்கத்திற்கான வெறியராகவும் செயற்படுபவர். ஈராக்

செயல்படும் உலகத்தையும் இவரது நகர்வு படம் பிடித்துக்காட்டியுள்ளது. எனவே ரைஸ் நிரந்தரமான மாற்றங்களை அடையாளப்படுத்தவே மேற்காசியா நகர்ந்துள்ளார் என்பதே முடிவாகவுள்ளது. எனவே ரைஸ் நகர்வில் அதிகமான அரசியல் முடிவுகள் தெரியவந்துள்ளது. மேற்காசியாவே தொடர்ந்தும் நெருக்கடியை சந்திக்கவுள்ள பிராந்தியமாகும். ஈரானுக்கு கொடுக்கப்பட்ட எச்சரிக்கை போன்றே ஈராக்குக்கும் புஷ்ஷின் ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டது. அந்த வகையில் அமெரிக்காவின் அடுத்த இலக்கு ஈரானா? என்ற சந்தேகம் உலக விமர்சகர்கள் மத்தியில் வலுத்துள்ளது. நிரந்தரமான மாறுதல் என அமெரிக்கா காணும் அமெரிக்க மயமாக்கத்திற்கான சூழல் என்பது இஸ்லாமிய சக்திகளை ஓரம் கட்டுவதோ அல்லது அழித்தொழிப்பதாகவோ அமையலாம். அதனை படிப்படியாக நகர்த்தவே அமெரிக்கா விரும்புகிறது. ஈரான் மீதான குற்றச்சாட்டுகளும் அப்படியானவையாகவே அமைந்துள்ளன.

எனவே மேற்காசியாவை மையமாகக் கொண்ட அமெரிக்க மயவாக்க அரசியல் நிரந்தரமான மாற்றத்தை தரக்கூடியதாகவும் தொடர்ச்சியான பாதிப்புக்களும், ஆபத்துக்களும் அப்பிராந்தியத்தில் ஏற்படுவதுடன் அதனை நோக்கி உலகத்தை திருப்ப ரைஸ் முயன்றுள்ளார். ரைஸ் மேற்காசியாவுக்குள் முரண்பாட்டையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி அரசுகளை கூறு போடுவதிலும் பலவீனப்படுத்துவதிலும் வெற்றி பெறுவார் என்றே கருதமுடியும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 11 . 02 . 2005
மின் அஞ்சல் : weekly @ eezhanatham.com

# மறைக்க முடியாது...!

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து பல தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளதுடன். இந்தத் தாக்குதலையடுத்து பல கேள்விகளும் எழுந்துள்ளன.

சுனாமியினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவசர மனிதாபிமான பணிகள் மற்றும் சமாதான முன்னெடுப்புகள் என்பவற்றில் முக்கிய பங்காற்றி வந்தவர் என்ற வகையில் கௌசல்யன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமையை மிகவும் கொதிப்படையச் செய்துள்ளது.

புலிகளின் தலைமை அடைந்துள்ள கொதிப்பை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டுள்ளதை இத்தாக்குதல் சம்பவத்தினை கண்டித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் அவர்கள் அறிக்கை ஒன்றை விடுத்திருப்பதன் மூலம் இதன் தாக்கத்தை அவர்கள் புரிந்து கொண்டுள்ளதை புரிந்துகொள்ளலாம்.

சமாதான முயற்சியில் புலிகள் இயக்கம் ஈடுபட்டு வரும் சூழ்நிலையில் ஆயுதங்கள் எதுவுமற்று அரசியல் பணியில் ஈடுபட்டு வரும் போராளிகளை இலக்கு வைத்து இராணுவ புலனாய்வு அமைப்பும், அதன் கைக்குழுக்களும் பல்வேறு தாக்குதல்களை நடாத்தி பல போராளிகள் வீரச்சாவடையக் காரணமாகவுள்ளனர்.

இத்தகைய தாக்குதல்கள் நடைபெறும்போது இதனை கண்டிப்பதாக அறிக்கை ஒன்றை விடுவதன் மூலம் மட்டும் இதனை தடுத்துவிடமுடியாது.

இதற்குமப்பால் அரசின்மீது சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் காத்திரமான அழுத்தத்தினை பிரயோகித்தாக வேண்டும்.

இந்தச் சம்பவங்களில் யுத்தநிறுத்தத்தை கண்காணித்துவரும் கண்காணிப்புக் குழுவும் ஒரு வரையறைக்கு அப்பால் எதுவும் செய்யமுடியாதவர்களாகவுள்ளோம் என கையை விரித்துவிடுகின்ற ஒரு நிலைமையே காணப்படுகிறது.

ஆனால் கௌசல்யன் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழு உரியமுறையில் செயற்பட வேண்டிய ஒரு தேவையை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் இத்தாக்குதலானது மனிதாபிமானப் பணிகள் மற்றும் சமாதான முயற்சிகள் என்பவற்றில் பாரிய பாங்கத்தை ஏற்படுத்தக்கூடியதென புலிகள் இயக்கம் தெரிவித்திருப்பதை கவனத்தில் எடுத்தாகவேண்டும்.

அத்தோடு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மாற்று ஆயுதக்குழுக்கள் யாவற்றிடமிருந்தும் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கு மாறாக இந்த மாற்று ஆயுதக் குழுக்களுக்கு அரச புலனாய்வுப் பிரிவினரே ஆயுதங்களையும், தகவல்களையும் வழங்கிவருவதுடன் அவர்களை பாதுகாத்து வருகின்றமையும் தெளிவாகவே வெளிவரத்தொடங்கியுள்ளது.

இந்த வகையில்தான் கௌசல்யன் மீதான தாக்குதல் சம்பவத்தையடுத்து பொலநறுவை மாவட்டத்தின் எல்லைக்கிராமமான ஓமடியாமடு மற்றும் மட்டக்களப்பு பற்பொடி முகாம் என்பவற்றிலிருந்துகொண்டு இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் துணைக்குழுக்களும் இயங்கி வருவது தொடர்பாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த நிலையில் அரசு இனியும் தனது கபட நாடகத்தை மறைக்கமுடியாது.

ஆகவே கௌசல்யன் மற்றும் போராளிகள் மீதான தாக்குதல் சம்பவத்தையடுத்து சமாதான முயற்சியில் ஏற்படக் கூடிய பாங்கத்தை தவிர்த்துக்கொள்ளத்தக்க வகையில் எத்தகைய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளப்போகிறது என்பதில் சமாதானத்தின் எதிர்காலத்தின் வலிமை தங்கியுள்ளது.

# தமிழர்களின் எதிரிகள் விரும்புவது...

**பு.சத்தியமூர்த்தி**

நடக்கின்ற சம்பவங்கள் தமிழர்களை திட்டமிட்டுப் போருக்குள் இழுத்து விடுபவையாகவே உள்ளன. போர் ஒன்றைச் சிறிலங்காவால் தாங்க முடியாது என்றபோதிலும் போர் சிறிலங்காவை சுனாமியை விடவும் கடுமையாக அழித்து விடும் என்பதை நன்றாகவே அறிந்திருந்தபோதிலும் தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாக போர் அமையும் என சிங்கள தேசம் நம்புவது போலத் தெரிகிறது.

தமிழர் தரப்பை இலங்கைக்குள்ளே தங்களுக்குச் சமமான மறுதரப்பாக கருதுவதற்கு மறுக்கின்ற மகாவம்சத்தனமான மனப்போக்கே இந்தச் 'சிக்கல்களுக்கெல்லாம் அடிவேராக விளங்குகின்றது. அதனால் தான் பேச்சுவார்த்தை மேசையிலோ, நிவாரணப் பணிகளிலோ இராணுவச் சமபல நிலையை யதார்த்தமாக அணுகுவதிலோ சிங்கள தேசம் தமிழர்களை தமிழர்களின் பிரதிநிதிகளைமறு தரப்பாக ஏற்றுக்கொள்ள





மறுக்கிறது. இந்த மறுத்தல் என்பது இன்றைய புற நிலையில் நேரடியாகச் செய்யப்படமுடியாதாகையால் அதனை எதிர் வளமாக யதார்த்தத்துக்கு முரணான நிபந்தனைகள், யோசனைகள், சட்டப் பிரச்சினைகள், செயற்பாடுகள் ஊடாக நடைபெறுகிறது.

இவ்வாறான ஒட்டுமொத்த 'மறுத்தல்' மூலம் தமிழர்களை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளிவிட்டு; அந்தச் சூழ்நிலையில் தங்களால் கையாளப்படும் சக்திகளைப் பாவித்துப் படுகொலைகளை நிகழ்த்துவதன் மூலம் தமிழர்களை யுத்தத்திற்குள் அல்லது வன்முறைப் பாதைக்குள் வலிந்து தள்ளிவிடச் சிங்கள தேசம் வரிந்து கட்டி நிற்கிறது.

இந்த ஒட்டு மொத்த மூலோபாயத்தின் ஒரு வெளிப்பாடுதான் கடந்த 7 ஆம் திகதி வெலிக்கந்தைப் பிள்ளையாரடியில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் ஆகும். அன்றைய நிகழ்வை ஒரு படுகொலை என்ற அர்த்தத்தில் மட்டும் புரிந்து கொள்ள முனைவது அதனுடைய பரிமாணங்களையும் அது ஏற்படுத்தக்கூடிய எதிர் விளைவுகளையும் புரிந்துகொள்ளாத அல்லது புரிந்துகொள்ள மறுப்பதாகும்.

இந்த மறுப்பு என்பது சிங்கள தேசம் செய்யமுனையும் இராசதந்திர நயவஞ்சகத்திற்கு துணைபோவதாகவோ, அல்லது அதனை ஊக்குவிப்பதாகவோதான் இருக்கமுடியும். ஏனெனில் இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றுமே ஏற்கனவே வரையப்பட்டுவிட்ட கண்ணுக்குத் தெரியாத சித்திரத்தின் ஒவ்வொரு புள்ளிகளே. இந்தப் புள்ளிகள் பூரணப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டால் சித்திரம் கண்ணுக்குத் தெரியவரும். அதுவே தமிழர்களை யுத்தத்திற்குள் தள்ளிவிட்டு அவர்களைப் பயங்கரவாதிகளாகவும் சமாதானத்தின் எதிரிகளாகவும் சித்தரித்து இராசதந்திர ரீதியில் தமிழர்களைப் தனிமைப்படுத்துதல் என்ற மூலோபாயமாகும்.

இந்த மூலோபாயத்தைப் புலிகளும், தமிழர்களும் செம்மையாக எதிர்கொண்டு வரும் சூழலில் தான் நடைபெற்றிருக்கின்றன, வெலிக்கந்தைப் படுகொலைகள். அரசியல் பேச்சுவார்த்தைகள், இடைக்கால நிர்வாக சபை யோசனைகளுக்குள் மையப்பட்டு அது இழுபறிப்பட்டு நிற்கும் நிலையில் திடீரென வந்த 'சுனாமி' புனரமைப்பு விடயத்தில் பொதுக் கட்டமைப்பு விவகாரமும் பிசுபிசுத்துப் போய் ஒரு வித விரக்திச்சூழல் தோன்றிய நிலையில் இந்தப் படுகொலைகள் நிகழ்ந்ததைக் கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

மட்டக்களப்பு- அம்பாறைப் பகுதிகளில் பெப்ரவரி 04 ஆம் திகதி மீளவும் தமிழ் மக்கள் மீதும் புலிகள் மீதும் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அது 7ஆம் திகதி விஸ்வரூபம் எடுத்து வெலிக்கந்தையில் வாய் பிளந்திருந்தது.

எல்லா வழிகளிலுமே தமிழர்களினதும், தமிழர்களின் பிரதிநிதிகளான புலிகளினதும் அசைவியக்கம் சிங்கள தேசத்தால் முடக்கப்படும்பொழுது ஏற்படக் கூடிய விரக்தி நிலையே இன்று சிங்கள தேசத்தால் எதிர்பார்க்கப் படுகிறது. அந்த விரக்தி இராசதந்திர வழிமுறைகளில் இருந்து படைய ரீதியான செயற்பாடுகளுக்கு தமிழர்களையும், புலிகளையும் தள்ள வேண்டும் எனவும் சிங்களம் எதிர்பார்க்கிறது.

ஏனெனில் தமிழர் தரப்பு சர்வதேச இராசதந்திரக் களத்தில் ஆழமாகக் கால் ஊன்றி தனியொரு தரப்பாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆரம்ப நாட்களிலும் தெளிவாகத் தெரியத்தொடங்கிவிட்டன. பல்வேறு நாடுகள் புலிகளின் பிரதிநிதிகள் இராசதந்திர கலந்துரையாடல்களில் உயர் மதிப்புடன் கலந்து கொள்கின்றனர். அங்கு அவர்கள் முனவைக்கும் கருத்துக்கள் ஆர்வமுடன் கேட்கப்படுவதோடு அந்தக் கருத்துக்களை ஆதாரமாக வைத்துத் தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றன. அவை பகிரங்கப் படுத்தவும் படுகின்றன.

இந்த நிலையானது பல்லாண்டுகளாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சும் புலனாய்வு நிறுவனங்களும் 'தலையால் கிணறு கிண்டி' புலிகள் மீது ஏற்படுத்திய பயங்கரவாத 'முத்திரையினை செல்லாக்காசாக ஆக்கி வருகின்றன.

எனவேதான் 'அமைதிச் சூழல் என்பது போராட்டங்களை பலவீனப்படுத்தும் காலம்' என்ற பயங்கரவாத முறியடிப்புத் தந்திரோபாயத்தை நம்பியிருந்த சிறிலங்காவுக்கு புலிகளின் இந்த இராசதந்திர வெற்றிகள் வயிற்றிலே புளியைக் கரைக்கத்தொடங்கியிருக்கிறது. அதனால் தான் எப்பாடுபட்டாயினும் புலிகளை மீண்டும் யுத்தத்திற்குள் தள்ளிவிடப் படாதபாடு படுகிறது சிங்களம்.

தமிழீழத் தேசியத் தலைவர் தனது கடந்த வருட மாவீரர் நாள் உரையில் விடுத்த அவசர அழைப்பையும், எச்சரிக்கையையும் சிங்களம் இந்த வழியிலே வழிநடத்த முற்பட்டிருந்தபோதும் புலிகள் அதை மிகச் சாணக்கியமாக முறியடித்திருந்தனர் மக்கள் போராட்டங்கள் மூலம் தமிழரின் உரிமைக் குரலை உலகின் கவனத்துக்குக் கொண்டுவரும் உத்தியைப் புலிகள் தேர்ந்தெடுத்தபோது மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளாக்கியது சிங்களம். எனவே தான் தற்போதைய இழுத்தடிப்பு, படுகொலை என்ற இரட்டை உத்தியை மீளவும் தீவிரமாகக் கையில் எடுத்துக்கொண்டுள்ளது.

எதிர்பாராது வந்த சுனாமி அள்ளி வந்த வெளிநாட்டு உதவிகளும், அமெரிக்கப் படைப்பிரசன்னமும் ஒருவித மிதப்பையும் சிங்களத்துக்கு ஏற்படுத்தித்தான் விட்டுள்ளது. அதை வைத்துத் தமிழர் தரப்பை மிரட்டவும் மீறினால் அழிக்கவும் முடியும் என அது கணக்குப்போடுகிறது. எனவேதான் அது துள்ளுகிறது.

துள்ளுகிறமாடுகள் பொதி சுமக்க வேண்டும் என்பது நியதி ஆனால், அது சிங்களம் தெரிந்திருக்க ஞாயமில்லை. இவ்வாறில்லாவிடில் ஏற்கனவே பல தடவைகள் படித்த பாடத்தை மீண்டும் படிக்க அது முற்படமாட்டாது.

தமிழர் தரப்பின் இராசதந்திர முயற்சியை மிகவும் குறைத்து எடைபோடும் தப்பிதத்தை சிங்களம் மீண்டும் ஒரு முறை நிகழ்த்துகிறது.

ஆனால், அது எதிர்கொள்ளப் போகும் பதில் என்பது முற்றிலும் எதிர்பாராததாகவே இருக்கும்.

ஏனெனில் 'எதிரி விரும்புவதை நீ செய்யாதே' என்பது சீனப் போரியல் ஞானி சன்சூ 2500 வருடங்களுக்கு முன்பே சொல்லிவைத்தது என்பதுவும், தமிழர்களின் தலைமை சன்சூவை விடவும் தெளிந்த நோக்குடையது என்பதுவும் மனங்கொள்ள வேண்டியவை ஆகும்.

# அரசியல் ஓட்டப்பந்தயத்தில் முதலாம் இடம் யாருக்கு?

து.சபேசன்

நாட்டில் மாற்றம் ஒன்று ஏற்படுவதற்கான ஏதுநிலைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர், சனாதிபதி ஆகியோர் வெளிநாட்டுப்பயணங்களை மேற்கொண்டதுள்ளனர். உள்நாட்டு அரசியலில் அதிரடி மாற்றங்களைச்செய்வதற்காக சர்வதேச நாடுகளின் ஆதரவைப்பெறும்



நோக்கில் அல்லது அரசியல் குழப்பம் ஒன்றை முறியடிப்பதற்கான ஆதரவை பெறுவதற்காக இவ்வாறான வெளிநாட்டுப் பயணங்கள் அமைந்துள்ளதாக சிலர் கருதுகின்றனர். உள்நாட்டு அரசியலில் ஏற்படும் குழப்பமான சூழ்நிலையை சரிசெய்வதற்கு அல்லது குழப்பமான சூழ் நிலையைப் பயன்படுத்தி மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஜே.வி.பிதலைவர் சோமவன்ச அமரசிங்க நாட்டைவிட்டு திடீரென வெளியேறியமையும், அண்மைக்காலங்களில் ஜே.வி.பியினர் தெரிவித்துவரும் அரசுக்கு எதிரான கருத்துக்களையும் இணைத்துப் பார்க்கப்படவேண்டிய விடயங்களாகும். அரசுக்கும் தமக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்தாலும் அரசிலிருந்து வெளியேறி நாட்டை இக்கட்டில் தள்ளிவிட தாம் விரும்பவில்லை என்று ஜே.வி.பியினர் கருத்துத் தெரிவித்துவருகின்றனர். அந்த வகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கருத்து முரண்பாடுகள் உள்ளன என்பதையும் அதற்காக அரசைவிட்டு வெளியேறப்போவதில்லை என்றும் கூறுவது எமக்கு குறிப்பாக ஒரு விடயத்தை உணர்த்துகிறது.

அதாவது, அரசுடன் இணைந்து செல்ல ஜே.வி.பிக்கு விருப்பமில்லை. இருப்பினும் அரசை விட்டு தாமாக வெளியேறி தமது பெயரை கெடுக்கவும் விருப்பமில்லை. இதைத்தான நாட்டு நிலைமை மீது கரிசனை கொள்ளும் அவர்களின் கருத்து வெளிப்படுத்தும் செய்தியாகும்.



எனினும் அரசுடன் தொடர்ந்து இணைந்திருப்பது தமது எதிர்கால அரசியல் வளர்ச்சிக்கு பாதகமாக அமையும் என்று உணரும் சந்தர்ப்பத்தில் ஜே.வி.பியினர் அரசை விட்டு வெளியேறுவார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டு உருவாக்கப்பட்டபோது கூட ஜே.வி.பியினர் தமது எதிர்கால அரசியல் இலக்கை நோக்கியே தமது காய்களை நகர்த்திவந்தனர். இது சந்திரிகாவுக்குத தெரிந்த விடயம். அப்போதைய சூழ்நிலையில் சந்திரிகாவுக்கு கூட்டுச்சேருவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. வாக்குகளின் எண்ணிக்கையை கூட்டிக்கழித்துப் பார்த்து வியூகம் அமைத்து தேர்தல் கூட்டு அமைத்து ஆட்சியினைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆயினும் கொள்கை ரீதியாக முரண்பட்ட இரு கட்சிகளும் எதிரும் புதிருமான செயல்திட்டங்களுடன் தமது கூட்டை தொடர்ந்துபேணி வருகின்றனர்.

சுனாமித்தாக்கத்தின் பின் எழுந்துள்ள புதிய அரசியல் சூழலில் அரசாங்கம் தனது எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆட்சி அதிகாரத்தைத் தொடர்ந்து தக்கவைத்திருப்பது தொடர்பாகவும் புதிய திட்டங்களை வகுத்து வருவதாகக் கூறப்படுகிறது. ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணி அரசைப்பலப்படுத்துவதைவிட சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பலப்படுத்தி அடுத்த தேர்தலை நோக்கி நகர்ந்துவருகிறார் சந்திரிகா. குறிப்பாக பண்டாரநாயக்க குடும்ப வாரிசு அரசியல் அதிகாரத்தை உறுதிப் படுத்த சனாதிபதி முயற்சிக்கிறார். அந்த வகையில் ஜே.வி.பியின் நீண்ட நாள் கனவு கனவாகவே போய்விடக்கூடிய ஏதுநிலைகள் ஏற்படுவதை தடுப்பதற்கு அவர்கள் விரும்புகின்றனர். இவ்வாறான அரசியல் நகர்வுகளே தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தபோது அதில் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பியினர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தான் தமது அமைச்சுப் பதவிகளை எடுத்துக்கொண்டனர். அதிலும் முக்கிய உறுப்பினர்கள் அமைச்சுப்பதவிகளை பொறுப்பேற்கவில்லை. இதனூடாக ஜே.வி.பியினர் மக்களுக்கு ஒரு செய்தியை தெரிவிக்க முற்பட்டார்கள்.

அதாவது பதவி, வசதிவாய்ப்புக்களுக்கு அப்பால் மக்கள் நலன்களில் அக்கறைகொள்ளும் ஒரு கட்சியாக தம்மைக் காட்டிக்கொண்டனர். இதன் மூலம் சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுத்து இரண்டு பிரதான கட்சிகளையும் முந்திக்கொண்டு தாமே முதலாம் இடத்துக்கு வரவேண்டுமென திட்டமிட்டனர். அதற்கேற்ப தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். இதற்காக இரு பிரதான பெரும்பான்மைக் கட்சிகளைப் போல இனவாதம் என்ற ஊக்கமாத்திரையை பாவித்து குறுக்கு வழியிலாவது முதலாம் இடத்தைப் பிடிக்கவேண்டுமென்ற சிந்தனையும் ஜே.வி.பியினரிடம் இருந்து வருகிறது.

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பியினர் வெளியேறுவது அல்லது வெளியேற்றப்படுவது என்ற இரு அதிரடியான அரசியல் பூகம்பங்கள் ஏற்படலாம் என்ற கருத்து தற்போது நிலவுகிறது. அரசை விட்டு தாமாக வெளியேறுவதை ஜே.வி.பியினர் விரும்பமாட்டார்கள். சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் கூட்டணியிலிருந்து வெளியேற்றப்படுவதை அவர்கள் விரும்புவார்கள். இதன் மூலம் அனுதாப அலை ஒன்று ஏற்பட்டு அதனைக் கொண்டு தமது ஆதரவுத் தளத்தை பலப்படுத்திக் கொள்ளலாம் என்ற நோக்கில் ஜே.வி.பியினர் செயற்படுகின்றனர். இதற்காகவே சனாதிபதியை எரிச்சலூட்டும் கருத்துக்களைக் கூறுவதுடன் செயல்களையும் செய்துவருகின்றனர். மறுவழமாக அரசாங்கமும் ஜே.வி.பியினர் தாமாக வெளியேற வேண்டுமென விரும்புகிறது. இதற்காக ஜே.வி.பியினரை தொடர்ந்து புறக்கணிக்கும் செயற்பாடுகளைச் செய்து வருகிறார் சந்திரிகா.



இவ்வாறான அரசியல் இழுபறிக்கு மத்தியில் ஜே.வி.பியினர் தமது காய்களை மெதுவாகவும் நிதானமாகவும் நகர்த்திவருகின்றனர். தனக்கே உரித்தான பாணியில் அமெரிக்க ஆதரவுடன் கூடிய சர்வதேச வலைப்பின்னலை ஏற்படுத்துவதில் ரணில் ஈடுபட்டுவருகிறார். ரணிலுக்கு உதவியாக வழமை போல மிலிந்த மொரகொடவும் இணைந்துள்ளார்.

தென்னிலங்கை அதிகார போட்டியில் தேசிய அரசாங்கம் ஒன்று ஏற்படும் வாய்ப்பு பற்றியும் சில சந்தர்ப்பங்களில் கருத்துக் கூறப்படுவதுண்டு. அவ்வாறான கருத்துக்களை இன்றும் சிலர் கூறிவருகின்றனர். உண்மையில் இரு பிரதான பெரும்பான்மைக் கட்சிகளும் கொள்கை ரீதியாக ஒரே சிந்தனையுடைய கட்சிகளே. யு.என்.பியிலிருந்து பிரிந்தகட்சி தான் எஸ்.எல்.பி ஆனால் இவை இரண்டும் ஒன்று சேர்ந்து கூட்டு அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதற்கான சாத்தியம் மிகக் குறைவு. இவ்விரு கட்சிகளும் அவ்வாறான சிந்தனைப் போக்கை கடந்த காலங்களிலும் கொண்டிருக்கவில்லை. தமது கட்சி நலன் சார்ந்த சிந்தனையே இன்றும் இவ்விரு கட்சிகளிடமும் இருந்துவருகிறது. ஜே.வி.பியினருடன் சந்திரிகாவின் கட்சி அமைந்துள்ள கூட்டணியின் இழுபறி நிலைக்கும் இதுதான் பிரதான காரணம்.

இரு பிரதான கட்சிகளும் சேர்ந்து கூட்டு அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமாயின் நாட்டின் அரசியலில் இருவேறு போக்கான விடயங்கள் நடைபெற சாத்தியம் உண்டு.

ஒன்று, சமாதானம் பற்றிய பெரிய எதிர்பார்ப்பு ஒன்று ஏற்படும். அதற்கான நகர்வுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப் படும். அல்லது அவ்வாறானதொரு மாயை ஏற்படுத்தப்பட்டு வெளிநாட்டு உதவிகள் கவர்ந்திழுக்கப்படும். இதில் இரண்டாவது வகையான செயற்பாடுகளுக்கே அதிகமுக்கியத்துவம் வழங்கப்படும். கடந்த காலங்களிலும் அவ்வாறுதான் நடந்துள்ளது.

மற்றது, ஜே.வி.பியினர் அரசியல் ரீதியாக நாடாளுமன்றத்தினுள்ளும் வெளியிலும் போராட்டங்களை முன்னெடுப்பர். தொழிற் சங்கங்களூடாகவும், மக்களைத் திரட்டியும் இப்போராட்டங்கள் இடம்பெறும். எதிர்ப்பு ஊர்வலங்கள், கூட்டங்கள் என்ற வகையில் இதுஅமையும். இதை விட கடந்த காலங்களைப்போல முதலாளித்துவ எதிர்ப்பு தீவிரமடைந்து படுகொலை முயற்சிகளும் இடம்பெற சாத்தியம் உண்டு.

தேசிய அரசு பற்றி கருத்து வெளியிடப்படுகின்ற வேளையில் இன்னொரு விடயம் குறிப்பிடப்படவேண்டும். பெரும்பான்மை இனக்கட்சிகள் இரண்டு சேர்ந்து உருவாக்கும் ஆட்சி பெரும்பான்மைக் கட்சிகளின் கூட்டாட்சியாகவே இருக்கும். தமிழ், முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கிய ஆட்சியாக இருக்கும் பட்சத்தில்தான் அதை தேசிய அரசாங்கம் என்று கூறலாம். இந்த வகையில் அரசியல் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பிடிப்பதற்காக நடக்கும் போட்டியில் தனித்தோ அன்றி கூட்டாகவோ வெற்றிக் கம்பத்தை யார் அடைந்தாலும் அது சிங்கள தலைமைகளுக்கான போட்டியே. இதில் பங்கு பற்றும் வாய்ப்பு சிங்கள மக்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் வெறும் பார்வையாளர்களே.

வெற்றிபெறும் சிங்கள சக்திகள் சிறுபான்மை மக்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள்? நமது உரிமைகளை எவ்வழிகளில் பெற்றுக்கொள்ளலாம்? என்பது பற்றி சிந்திப்போராகவே நாம் இருக்க முடியும். தென்னிலங்கை அரசியல் நகர்வுகளையும் மாற்றங்களையும் அதனால் ஏற்படப்போகும் விளைவுகளையும் சரியாக கணித்து எமது எதிர்கால நகர்வுகளைத் திட்டமிடவேண்டும்.

# ஜே.வி.பி வெளியேறுமா?

கொண்டுள்ள ஒப்பந்தத்தில் கூறப்பட்டவற்றை அப்படியே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்றுவார் என ஜே.வி.பி நினைத்திருக்கவும் மாட்டாது.

2000ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இவ்வாறு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்ட வேளை சனாதிபதி சந்திரிகா எவ்வாறு நடந்துகொண்டார் என்பதிலிருந்து பின்னர் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை எவ்வாறு மதிப்பார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்திருக்கும். அப்பொழுது ஏற்பட்ட உடன் பாட்டின் அடிப்படையில்தான் 17ஆவது திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது. எல்லாக் கட்சிகளினதும் இணக் கப்பாட்டின் அடிப்படையில் நான்கு சுயாதீனக் குழுக்கள் அமைப்பதற்கு இந்தச் சட்டதிருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், அன்று ஆட்சியைத் தக்கவைப்பதற்காக அந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதுவரை அதனை நடைமுறைக்குக் கொண்டுவர சிறிதும் முயலவில்லை.

இவ்வாறுதான் இப்பொழுதும்கூட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒப்பந்தத்தில் இணங்கிக்கொண்டதற்கு மாறாகப் பல தடவை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒப்பந்த விதிகளை மீறிவருவதாகவும் அதனால் தாம் அரசாங்கத்திலிருந்து விலகப் போவதாகவும் ஜே.வி.பி கூறிவருகிறது. "ஒப்பந்த விதிகளை மீண்டும் ஒருமுறை மீறினால் நடக்கிறதே வேறு" என்ற ரீதியிலும் ஜே.வி.பி இப்பொழுது கூறுமளவுக்கு நிலைமை உள்ளது. ஆனால், சனாதிபதி சந்திரிகா மீது ஜே.வி.பி குற்றம் குறை கூறுவதும் பின்னர் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் ஒட்டிக்கொண்டிருப்பதும் வழமையான விடயங்களாயிருப்பினும் செய்துகள் நடந்துகொண்டிருக்கின்றமை எதிர்பார்க்கத்தக்கதே.

இதில் அமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது என்ற உடன் பாட்டிற்கு மாறாக சனாதிபதி சந்திரிகா இப்பொழுது பெரும்தொகை அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமித்திருக்கிறார். ஒரு அமைச்சை பலருக்கு பங்கிடப்படு மளவுக்கு மோசமான நிலையில் இந்த அமைச்சர்கள் பிரதியமைச்சர்களின் நியமனங்கள் கட்டுமீறிச் செல்கின்றன. இதனை ஜே.வி.பியினர் எந்தவிதத்திலும் தடுத்துவிட முடியவில்லை.

இதேவேளை நாட்டின் உடமைகளை தனியாருக்கு விற்பனைசெய்வது கைவிடப்பட வேண்டுமென ஜே.வி.பி முன்னரே வலியுறுத்தி வரும் விடயம். ஆனால் அதனைச் சந்திரிகா அரசு முற்றுமுழுதாகக் கைவிட்டுவிடவில்லை. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும் அதற்கு எதிராகத் தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெறுவதும் வெளிப்படையானது.

அதேவேளை ஜே.வி.பி சனாதிபதி சந்திரிகா மீது ஒப்பந்தத்தை மீறிவிட்டதாகப் பல தடவைகள் குற்றம் சுமத்தியுள்ளதும் சனாதிபதி சந்திரிகா எரிச்சலுறுவதும் வழமை. ஒரு கட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைமைப் பொறுப்பைச் சந்திரிகா கைவிட்டார். ஏனெனில் கட்சிக் கூட்டத்தில் ஜே.வி.பியின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்து எரிச்சலுற்ற அவர் கட்சிப் பதவிப் பொறுப்பைத் துறந்தார். அதன்மூலம் ஜே.வி.பியின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் பொறுப்பிலிருந்து சந்திரிகா விலகிக்கொண்டார்.

ஆனால், அதற்காக ஜே.வி.பி சந்திரிகாவை விட்டு விடவில்லை. பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அதுபற்றிப் பேச சந்திரிகாவிடம் நேரம் கேட்டுவந்தது. ஆனால், சந்திரிகா அதற்கு நேரம் ஒதுக்கவில்லை.

இந்த நிலையில் ஜே.வி.பி அதனைப் பொறுத்துக்கொண்ட போதும் அது ஆட்சியை விட்டு விலகப்போவதாக அறிவிக்கும் தருணம் இருப்பின் அது தமிழர் பிரச்சினைக்கு ஏதாவது இணக்கப்பாடு ஏற்பட்டுவிடுமோ என்ற தோற்றப்பாடு ஏற்படும்போதுதான்.



அவ்வாறுதான் சுனாமிப்பேரலைத் தாக்கத்தின்பின் ஏற்பட்ட நிலைமையில் வெளிநாட்டுப் படைகள் இலங்கைக்குப் பெருமளவில் வந்தன. அப்போது நாட்டின் இறைமைபற்றி அது பேசவில்லை. அதேவேளை ஜே.வி.பி மேற்கொண்ட நிவாரண "நடவடிக்கைகள்" சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் சனாதிபதிக்கும் எரிச்சலை மூட்டியது. அதனால் ஜே.வி.பியை ஓரம்தள்ள சனாதிபதி பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அப்பொழுதெல்லாம் ஜே.வி.பி முறுக்கிக் கொண்டதே தவிர அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போவதாக அது கூறவில்லை.

ஆனால், வெளிநாட்டு உதவிகளை பயன்படுத்தும் விடயத்தில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் பொது நடைமுறை ஒன்று குறித்த முயற்சி தீவிரம் பெற்றபோது அவ்வாறு எதுவும் நடந்தால் ஆட்சியை விட்டு வெளியேறப்போவதாக ஜே.வி.பி கூறியது. அந்த வேளையில்தான் ஒப்பந்தத்திற்கு மாறாக மீண்டும் ஒருமுறை நடந்தால் தாம் ஆட்சியை விட்டு வெளியேறப் போவதாகக் கூறியது.

இது எதனைக் காட்டுகிறதென்றால் ஒருபுறம் ஜே.வி.பி தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குத் தடையாக இருக்கும் அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறும்போதும் இலாபத்துடன் வெளியேற இப்பிரச்சினையே சிறந்தது என அது நம்புகிறது.

அதாவது தமிழ் மக்களுக்கு நாட்டை விற்றுவிட்டதாகக்கூறி சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குத் தேடுவதாயின் தமிழர் பிரச்சினையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏதாவது இணக்கப் போக்கை காட்டும் சந்தர்ப்பத்தை ஜே.வி.பி பார்த்துக்கொண்டிருக்கிறது.

அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ ஜே.வி.பியை இவ்வாறு ஒரு தருணத்தில் கழற்றிவிடாது வேறேதாவது பிரச்சினையில் வெளியேற்ற முடியுமா எனப் பார்த்திருக்கிறது. இதனால்தான் ஏனைய விடயங்களில் புறக்கணிப்பைக் காட்டும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினை விடயத்தில் வரும்போதுமட்டும் கதிர்காமர் போன்றோரை பயன்படுத்திச் சமாளித்து வருகிறது.

எவ்வாறாயினும் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கூட்டு என்பது சந்தர்ப்பவாத சுயநலக் கூட்டு என்பதுடன் ஒருவரை மற்றவர் விழுங்குவதற்கான கூட்டு என்பது வெளிப்படையானது. அதில் வெற்றிபெறுவது யார் என்பதுதான் கேள்வி. அநேகமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிதான் என்றே விமர்சகர்கள் கூறுகின்றனர். அவ்வாறாயின் ஜே.வி.பியின் குறுக்குவழி சரியானவழியல்ல என்பது நிரூபணமாகும்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# அறிவுறுத்தப்பட வேண்டும்

சிறிலங்கா அரசானது கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களின் கல்வி, பொருளாதாரம், மொழி என்பவற்றை திட்டமிட்டு நேரடியாகவும் மறைமுகமாகவும் நசுக்கி வருகின்றது. சிங்களதேசத்திற்கு மேற்கொள்ளப்படுகின்ற உதவி நடவடிக்கைகளில் எந்த உதவிகளும் எமது தாயகப்பகுதிகளில் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. சிங்களமொழி மூலப் பாடசாலைகளில் அளவிற்கு அதிகமான வளங்கள் வசதிவாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டு சிங்கள தேசக்கல்வி நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு நவீனமயப்படுத்தப்பட்ட கல்விக்கு அமைவாக தமிழ்தாயகக் கல்விச்செயற்பாடுகளை சிறிதளவேனும் கருத்தில் கொள்ளாது அரசு தனது திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. ஏதோ தற்பொழுது ஒருசில அரச கட்டமைப்பு சாராத அமைப்புக்களின் நிதியுதவியுடன் போரினால் சிதைக்கப்பட்ட கல்வியும் கல்விச் சாலைகளும் கட்டி எழுப்பப்பட்டு வருகின்றன. இவற்றை நடைமுறைப் படுத்துகின்ற ஒப்பந்தகாரர்களும் இவற்றை கண்காணித்து வருகின்ற அரச திணைக்கள அதிகாரிகளும் அசமந்தப்போக்கை காட்டிவருகின்றனர்.

அண்மையில் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, கடந்த 2004ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி யாழ் பல்கலைக் கழகத்திற்கு சென்றபோது அங்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் பெரும் எதிர்பார்ப்புகளுடன் பல்கலைக்கழகம் சென்ற மாணவி தனது பல்கலைக்கழக வாய்ப்பை இழந்துள்ளார்.

சம்பந்தப்பட்ட மாணவி முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியில் 2004ஆம் ஆண்டு கலைப் பிரிவில் இந்து சமயம், தமிழ், கர்நாடக சங்கீதம் போன்ற பாடங்களை தெரிவுசெய்து முறையே A,B,C தரப் பெறு பேறுகளைப் பெற்று Z கோர் புள்ளித் திட்டத்தின்கீழ் 1.3280 புள்ளி பெற்று மாவட்ட மட்டத்தில் 21 ஆவது நிலையில் யாழ்பல்கலைக்கழக அனுமதி பெற்று பெரும் எதிர்பார்ப்புடன் பல்கலைக்கழகம் சென்றுள்ளார். அங்கு அனுமதி மறுக்கப்பட்டமைக்கான காரணம் பற்றி கொழும்பு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது குறிப்பிட்ட மாணவி இரு கலைப் பாடங்களில் தோற்றிமையால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று இவ்வாண்டு மூன்றுமாணவர்கள் குறிப்பிட்ட கல்லூரியில் உயர்தரப் பரீட்சை எழுதவுள்ளனர். இது தொடர்பாக அடிக்கடி வலயக்கல்விப் பணிமனை பாடசாலைகளுக்கு அடிக்கடி சுற்று நிருபங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைவாகவே பரீட்சைக்கு தோற்றவேண்டும். இது உரிய முறையில் மாணவர்களுக்கு உரிய முறையில் அறிவுறுத்தப்படாமையினாலே இவ்வாறு இம்மாணவி, பல்கலைக்கழக வாய்ப்பினை இழந்துள்ளார். இது தொடர்பாக சகல கல்வி சார்ந்த ஊழியர்கள் மீதும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. இதைவிட கடந்த ஆண்டு கல்வியற் கல்லூரிக்குத் தெரிவாகிய மாணவி ஒருவரின் விண்ணப்பப்படிவங்கள் உரிய முறையில் பூர்த்திசெய்யப் படாமையால் கல்வியற்கல்லூரி வாய்ப்பு இழக்கப்பட்டது.

அடுத்து இக்கல்வி வலயத்தில் மீள் கட்டுமானப்பணிகளை எடுத்துக்கொண்டால் 2003 ஆம் ஆண்டுக்கு முன்னதாக செய்து முடிக்கப்படவேண்டிய வேலைகள் எவையும் செய்துமுடிக்கப்படவில்லை. இதைவிட குறிப்பிட்ட சில பாடசாலைகளில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டும் இதுவரை கையளிக்கப்படாதுள்ளன. குறிப்பாக நட்டாங்கண்டல், பாண்டியன்குளம் ஆகிய பாடசாலைகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் கடந்த ஏழுமாதங்களுக்கு மேலாக புனரமைப்புப் பணிகள் எவையும் நடைபெறவில்லை. இதைவிட மூன்றுமுறிப்பு, பனங்காமம், சிறாட்டிக் குளம், பாலைப் பாணி ஆகிய பின்தங்கிய பாட சாலைகளில்பெரும்வளப் பற்றாக்குறை. இவை உரிய முறையில் நிவர்த்திசெய்யப்படவில்லை. வளப்பங்கீடு என்பது சரியான முறையில் இல்லை. பாண்டியன்குளம் ம.வி, பாலிநகர் ஆகிய முன்னணிப்பாடசாலைகளுக்கும் ஒரு சாதாரண அடிப்படை வசதிகளைக்கொண்ட விஞ்ஞான ஆய்வுகூடங்கள் இல்லை. விஞ்ஞான இரசாயன மூலகங்களையும் உபகரணங்களையும் உரிய முறையில் பாதுகாக்க முடியாத நிலை. இது அரசினது புறக்கணிப்பாக இருந்தாலும் மக்கள் மத்தியில் இங்குள்ள கல்வி அதிகாரி களும் கவனம் எடுக்கவேண்டும் என கூறுகின்றனர்.

அடுத்து தற்போதைய ஆசிரியர் நியமனமானது ஆரம்பக் கல்வி ஆசிரியர் நியமனங்களாகவே உள்ளன. புதியபட்டதாரி ஆசிரியர் நியமனங்களில் அவர்கள் இடைநிலை. அதாவது தரம்-5 முதல் தரம்-9 வரையான வகுப்புக்களுக்கு மட்டுமே கற்பித்தலை மேற்கொள்ள முடியும். இவர்கள் தரம் ஒன்றில் உள்ள மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்ளமுடியாது. இச் செயற்பாடானது ஆசிரியர் களினதும் மாணவர் களினதும் மனங்களை மிக விரைவில் பாதிக்கும் என்பதாகும். ஆரம்பக் கல்விக்கான ஆசிரியர்களுக்கு பல்வேறு பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுத்தான் அவர்களை ஆரம்பக் கல்வி கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்த முடியும். அதுவே ஒரு திடமான அத்திவாரத்தை மாணவர்களின் கல்விக்கு இடமுடியும்.

இவ்வாறான செயற்பாடுகளின் பின்னணி உரிய முறையில் மக்களை சென்றடைவதில்லை. இது சார்ந்தவர்கள் பாடசாலைகளினூடாக பெற்றோர்க்கு அல்லது மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்துக்கூறி வரும்போது மக்கள் மத்தியில் எழுகின்ற சந்தேகங்களுக்கு விடை காணமுடியும். இவ்வாறான செயற்பாடுகள் யாவும் மக்கள் மத்தியில் அதாவது கட்டடங்கள் புனரமைக்கப்படாமை. கல்வி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் கல்வித் திணைக்களங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் உரிய முறையில் பெற்றோர்களையும் நலன்விரும்பிகளையும் மாணவர்களையும் சென்றடையாமையினாலே இவ்வாறான பிரச்சினைகள் மக்கள் மத்தியில் எழுகின்றன. எனவே, இதுசார்ந்தவர்கள் இது தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகள் சிரமங்களை தெளிவாக மாணவர்களுக்கும் .பெற்றோர்களுக்கும் விளங்கப்படுத்துவதன்மூலமே இவர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ளமுடியும்.

**சு.பாஸ்கரன்**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சுனாமியினால் சிறுவர்கள்..!



உறவினர்களையோ பெற்றோர்களையோ இழந்தாலும் அவர்களின் எதிர்காலத்தைத் தாங்க வேண்டியது இங்குள்ள ஒவ்வொருவருடைய பொறுப்பும் கடமையுமாகும். இவற்றை முழு மனதுடன் செயற்படுத்த அமைப்புக்களோ தனிநபர்களோ முன்வரவேண்டும். பல்வேறு வடிவங்களில் உளத்தாக்கங்களிற்கு உட்பட்டுள்ள சிறுவர்களின் மனதில் விரக்தி, பயம், தனிமை களையப்பட வேண்டும். நம்பிக்கை ஒளி பிரகாசிக்க அவர்களிடம் அன்புக்கரம் நீட்டி மனித நேயத்தைக்கட்டியெழுப்பினால் சிறுவர்களின் மனங்கள் குதூகலமாக மிளிரும்.

அலைக்கென்ன உரிமை கரையைத் தொட? காற்றுக்கென்ன உரிமை இடத்தை நிரப்ப? நீருக்கென்ன உரிமை பள்ளத்தில் பாய? உரிமை இவற்றுக்கு உண்டெனில் சிறுவர்களே உங்களுக்கும் உரிமையுண்டு கல்விபெற- நல்ல கல்விபெற.

இவ்வாறு உரிமையை உரிமையுடன் வலியுறுத்தி கவிதை பாடியது பாடசாலை மாணவியான ஜசோதா.(வயது-15)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களில் 1/3 ப்குதியினர் சிறுவர்களாவர். அநாதைகள் ஆக்கப்பட்டும், அங்கவீனர்களாகியும், கொல்லப்பட்ட சிறுவர்களும் இவற்றுள் அடங்குவர். சுனாமிப் பேரலையினால் அதிகளவில் ஆட்டம் கண்டது இந்தோனேசியாவும்- இலங்கையுமே. ஆனால், இடர்பாடுகளையும்,. இழப்புக்களையும் சந்தித்தவர்களில் அதிகளவானவர்கள் சிறுவர்களே. இன்றுவரை தொடரும் சிறுவர்கள் மீதான சுவீகரிப்புக்களும் சுரண்டல்களும் தங்கு தடையின்றி இடம்பெறுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. சுனாமிப் பேரலையினால் இலங்கையில் மட்டும் இறந்தவர்களில் 10 பேரில் 04 பேர் சிறுவர்களாக கணக்கிடப்பட்டமை நம்பமுடியாத உண்மையாகவுள்ளது.

சுனாமிக் கடல்அலையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மறுவாழ்விற்கென பல நல திட்டச்செயற்பாடுகளில் அமைப்பு ரீதியாக பலர் ஈடுபட்டு வருகின்றனர். வெளிநாட்டு, உள்நாட்டு தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் சிறுவர்களின் நலன்களிலேயே அதிகளவில் அக்கறையுடன் செயல்படுவதனை அவதானிக்கமுடிகிறது. "யுனிசெவ் நிறுவன" இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி "ரெட் சைபான்" சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பாக குறிப்பிடுகையில்,

நாடு முழுவதிலும் சுனாமியால் மூன்று லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களிற்கான மறுவாழ்வுச் செயல்திட்டங்களை எமது நிறுவனம் பல பரிமாணங்களில் மேற்கொள்ளவுள்ளது. இதில் முதல் கட்டமாக முழுமையான கல்வியை வழங்குவதற்கான நடவடிக்கைகளே இப்பொழுது இடம்பெற்று வருகின்றது. எமது செயற்பாடுகளை கல்வி அமைச்சின் ஊடாக அவ்வப்பகுதி வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வியாளர்கள், பொது அமைப்புக்களைக்கொண்டு மேற்கொள்ளவுள்ளதாகவும், இதேவேளை வடமராட்சிப் பகுதியில் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கு விளையாட்டு உபகரணங்களையும் கற்றலுக்கான பொருட்களையும் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாணவர்களுக்கோ மக்களுக்கோ உரிய முறையில் உதவிகளும் உரிமைகளும் கிடைக்கக் கூடியவாறு அரசு தனது பொறுப் புணர்ந்து செயற்படு கிறதா? எனது பெயர் விமலன் வயது 12, எனக்கு அவசியமான தேவைகளை நீங்கள் பூர்த்திசெய்யும்போது எனது உரிமைகளை நீங்கள் பாதுகாக்கின்றீர்கள்... என்னைப் போன்றசிறுவர்களது வாழ்க்கையும் மேம்பட உத வுங்கள், என சிறுவர் தேவைகளே உரிமைகளாகும் என்ற துண்டுப்பிரசுரத்தில் விமலன் என்ற சிறுவன் தனது கருத்தை முன்வைத்துள்ளான்.

இன்றைய நெருக்கடி

**இரா-வின்**

யில் நான் தனிமனித குடும்ப குழுவாழ்வில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப எதிர்காலப் பிரச்சினைகளை உருவாக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொருவரையும் சாரும். இதில் எமது பங்களிப்பு என்ன? எமது பிரதேசத்தில் "அநாதைகள், அகதிகள்" என்று எவருமே இல்லை. இடம்பெயர்ந்தவர்களும் உடல், உள நெருக்கீடுகளிற்கும் பாதிப்புக்களிற்கும் உட்பட்டவர்களுமே உள்ளனர்.

உறவினர்களையோ, பெற்றோர்களையோ இழந்தாலும் அவர்களின் எதிர்காலத்தைத் தாங்கவேண்டியது இங்குள்ள ஒவ்வொருவருடைய பொறுப்பும் கடமையுமாகும். இவற்றை முழு மனதுடன் செயற்படுத்த அமைப்புக்களோ தனிநபர்களோ முன்வர வேண்டும். பல்வேறு வடிவங்களில் உளத்தாக்கங்களிற்கு உட்பட்டுள்ள சிறுவர்களின் மனதில் விரக்தி, பயம், தனிமை களையப்படவேண்டும். நம்பிக்கை ஒளி பிரகாசிக்க அவர்களிடம் அன்புக்கரம் நீட்டி, மனித நேயத்தைக் கட்டியெழுப் பினால் சிறுவர்களின் மனங்கள் குதூகலமாக மிளிரும்.

வடக்குக் கிழக்கில் சுனாமியால் பெற்றோரை இழந்த சிறுவர்கள் 737 பேர், தாய் தந்தையை இழந்தவர்கள் 2125பேர்,



மாவட்ட ரீதியாக நோக்கும்போது அம்பாறையில் 1116 பேர், மட்டக்களப்பில் 1105 பேர், முல்லைத்தீவில் 487 பேர், யாழ்ப்பாணத்தில் 86 பேர், திருகோணமலையில் 67 பேர், கிளிநொச்சியில் ஒருவர் என்ற ரீதியில் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களின் எதிர்காலம் என்ன? சிறுவர்களின் உள்ளங்களில் இறைவனை காணலாம் என்பார்கள். எனவே இறை உள்ளங்களை பேணிப் பாதுகாத்து மறுவாழ்வளிப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மாலான பங்களிப்பை வழங்கவேண்டும். இதற்கு எத்தனை பேர் தயாராக உள்ளனர்?

தென்னிலங்கையில் பேரப்பிள்ளைகளை விற்க முயன்றவர் பொலிசாரால் கைது. அநாதைப் பிள்ளைகளை தத்தெடுக்க விரும்புகிறோம். ஏழு குழந்தைக்கு ஒன்பது தாய்மார் உரிமைகோரியுள்ளனர். போதகரால் கடத்தப்பட்ட சிறுவர்கள் பொலிசாரால் மீட்பு, நலன்புரி நிலையத்திலுள்ள சிறுமி மீது பாலியல் வல்லுறவு, இவற்றையெல்லாம் விட அதி முக்கியமானது வடக்கு கிழக்கில் இருந்து ஒரு தமிழ்க்குழந்தையை தத்தெடுக்கவுள்ளேன்- சனாதிபதி சந்திரிகா. தலதாமாளிகையால 100 குழந்தைகளை பராமரிக்கவுள்ளோம்.

இவ்வாறு சிறுவர் தொடர்பாக வெளிவரும் செய்திகளில் அதிகம் சிறுவர்களை பயன்படுத்தி அரசியல் செய்ய முயலும் ஒரு போக்கைத்தவிர வேறு எதனை.

நலன்புரி நிலையங்கள், பாடசாலைகளில் தங்கியுள்ள சிறுவர்களின் நிலை, அவர்கள் எம்முடன் பகிர்த்து கொண்டவை, என்ர பெயர் சுதர்ஜினி வயது-15, நாங்கள் மணற்காட்டில இருந்து இடம்பெயர்ந்து இப் பாடசாலையில் இருக்கிறம். நாங்க இங்க இருக்கிறதால இங்க படிச்சபிள்ளைகளும் பள்ளிக்கூடம் போகாம இருக்கினம். நாங்களும் படிப்பில்லாமல் இருக்கிறம். நாங்கள் கல்வியைத் தொடர்வதற்கு மிகவிரைவாக நடவடிக்கைகளை எடுக்கவேணும். நாங்கள் இன்னும் எத்தனை நாட்கள் இப்படியான இடங்களில் இருக்கிறது. இங்க இருக்கிற ஆட்களில அநேகமான பிள்ளைகள் புத்தகங்கள், கொப்பிகள் இன்றியேயுள்ளனர் என தனது க்ருத்துக்களை நிறைவு செய்தார். கல்வியைத் தொடர்வதற்கான ஆதங்கத்துடன் இருக்கும் இன்னோர் மாணவன் கூறுகையில்,

என்ர பெயர் விமலகாந்தன் வயது-16 நாங்கள் இடம் பெயர்ந்து இங்க இருக்கிறம். எங்களிற்கு ஆண்டுத்தொடக்கத்திற்கு என புதிதாகத் தந்த புத்தகங்களும், புதிதாக வேண்டி வைத்த கொப்பிகளும் கடலோடு அடிச்சுக்கொண்டு போட்டுது. வேற இடத்துப் பள்ளிக்கூடங்களில் இப்ப விளையாட்டுப் போட்டிகள் நடக்குது அதுகளை நினைக்கேக்க எங்களிற்கு சரியான கவலையாக இருக்கு. கடலிற்குக் கிட்ட இருந்த ஒரு காரணத்தால எங்கட கல்வியையும் கல்வி சார் ஏனைய செயற்பாடுகளையும் இழந்துபோயுள்ளோம். நாங்கள் கல்வியைத் தொடர்வதற்கு பொறுப்பானவர்கள் முன்வந்து வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித்தரவேணும் என தனது கருத்துக் களை நிறைவு செய்தார்.

சிறுவர்களைப்பொறுத்தவரையில் போசாக்கானதும் சுகாதாரமானதுமான உணவைப் பெறல், அடிப்படை கல்வியைப் பெறல், பாதுகாப்பான வீடும் பெற்றோரும், பொழுது போக்கும் விளையாட்டும் தங்களுடைய கருத்துக்களை வெளியிடல், பாரபட்சம் பாராது திறனையும், அறிவையும் வளர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம், அக்கறையும் சிறந்த வழிநடத்தலும், உடலுக்கோ, உயிருக்கோ தீங்கு ஏதுமின்றி உயிர்வாழ்தல், இவ்வாறான தேவைகளையும் உரிமைகளையும் கொண்டுள்ளனர்.

சிறுவர்களின் சுபீட்ச மான வாழ்விற்கு சிறு குழுக்களை அமைத்து அவர்களிடையே விளையாட்டுக்கள், கற்பித்தல், வேவ்வேறு வகையான குழுச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். பொழுது போக்கு மையங்களை அமைப்பதுடன் மேலதிக கல்வியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன் பாதிக்கப்பட்டவர்கள் கல்வியைத் தொடராது வேறு வேலைகளிற்கு விரும்பியும் விரும்பாமலும் அமர்த்தப்படுவதையும் தடுக்கவேண்டும்.

நாளைய தலைவர்களை இன்று நல்ல முறையில் வளர்ப்பதற்கு அமைப்புக்கள் மட்டுமன்றி ஒவ்வொரு தனி மனிதனும் முன்வரவேண்டும்.



# சந்திரிகாவைத் தாக்கும் சுனாமிகள்

கடந்த மாதம் சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புச்சபை கூடிய பொழுது, இரணைமடுவில் புலிகள் கொண்டிருப்பதாகக் கூறப்படும் 1350 X75 மீ ஓடு பாதையையும் இரண்டு வெவ்வேறு வான் கலங்களையும் இஸ்ரேலிய தயாரிப்பு சேச்சர் ஆளில்லா வான் கலம் (UAV) எடுத்ததாகக் கூறப்படும் புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதைப் பார்த்த பின் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தன்னை இரண்டு சுனாமிகள் தாக்கிவிட்டதாக அங்கலாய்த்துக் கொண்டார். முதலாவதாகத் தாக்கியது கடல் தந்த சுனாமி; இரணைமடு ஓடு பாதை விடயம். இரண்டாவது சுனாமி என்று அவர் அந்த வேளையில் கூறியிருந்தார். இதில் உள்ள சோகம் என்னவென்றால் அவர் வெளியே கூறாத பல சுனாமிகள் அவரை தொடர்ந்து தாக்கிக்கொண்டிருப்பதுதான். உதாரணமாக புலிகளின் விமானங்கள் பற்றி நிவாரணப் பணிகளுக்கு வந்துள்ள ஒரு வெளிநாட்டுப் படையினரும் உறுதிப்படுத்தியுள்ளார். அத்தோடு விமானப்போக்குவரத்துக்களை கண்காணிக்கும் இரகசிய இடத்தினுள் செல்வதற்கும் குறித்த படையினர் அனுமதிகோரி, சிறிலங்கா அரசு அக்கோரிக்கையை நிராகரித்திருந்தது. அப்படியானால் நிவாரணப் பணிகளுக்கு வந்தோர் புலிகளின் விமானங்களை உறுதிப்படுத்தும் அளவுக்குச் சக்தி வாய்ந்த கருவிகளைக் கொண்டுவந்திருப்பது இன்னொரு சுனாமியாக சந்திரிகாவைத் தாக்கியிருக்கும்.

இங்கு முதன் முதலில் வந்த அமெரிக்க இராணுவத்தினர் கொண்டுவந்திருக்கும் பிளக் ஹோக் ரக ஹெலிகள், C 130கள், தரையிறங்கு கலங்கள்,பீச் கிறாப்ற் உள்ளிட்ட கனரக உபகரணங்களைப் பார்க்கும்பொழுது, இவர்கள் போவதற்காகவா வந்திருக்கிறார்கள் என்ற கேள்வியை ஒரு சிங்கள பொதுமகன் ஆங்கிலப்பத்திரிகை ஒன்றில் எழுப்பியிருந்தார். இந்தக் கேள்வி சந்திரிகாவின் மனத்திலும் சுனாமியாகத் தாக்கியிருக்கும்.

எத்தனை அமெரிக்கப் படையினர் வந்திருக்கிறார்கள் என்று தனக்குத் தெரியாது என இராணுவப் பேச்சாளரே கூறும் அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது. இந்த மாத நடுப்பகுதிக்குள் இங்கு வந்திருந்த அமெரிக்கத் துருப்பினில் அநேகமானோர் வெளியேறி விடுவார்கள்; எனினும் 'சிறிய' ஒரு அணியினர் தொடர்ந்து தூதரகத்தில் தங்கியிருப்பார்கள் என சிறிலங்காவில் உள்ள அமெரிக்கப் படைகளின் கட்டளையிடும் அதிகாரி கூறியுள்ளார். அழையா விருந்தாளிகளாய் இவர்கள் ஏன் இங்கு இருக்கப் போகின்றார்கள் என்பதையும் பீதுருதாலகால மலையில் விமான போக்குவரத்துகளைக் கண்காணிக்கும் கோபுரம் அமைக்க அமெரிக்கா அனுமதி கேட்டிருப்பதையும் கூட்டிப் பார்க்கும் சந்திரிகாவின் மனதில் அதன் பெறுபேறு பற்றி புரிந்துணர்வே குறைந்தது 5 றிச்ரர் அளவிலான சுனாமியாகத் தாக்கும்.

உலக நாடுகளிடமிருந்து வந்து குவியும் உதவிகள் மனத்துக்கு பெரும் நிம்மதி அளித்தாலும் உலக நாடுகள் வாக்குறுதி தரும் உதவிகளில் 30 விழுக்காடானவையையே நிறைவேற்றுகின்றன என்ற கொபி அனானின் தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றுவது போல்,கடன் தீர்ப்பனவை இடைநிறுத்தும் உத்தரவில் இப்போதைக்கு ஒப்பமிடும் வாய்ப்பில்லை என்று அமெரிக்கா அறிவித்திருப்பது எப்படியான சுனாமியாக சந்திரிகாவைத் தாக்கும் என்பதை கூறவே தேவையில்லை.

நிவாரணப் பொருட்களுடன் சக்தி மிக்க தொலைத் தொடர்புக் கருவிகள், உடற்கவசங்கள் துண்டு துண்டாகக் கழற்றப்பட்ட ஹெலிகள் முதலிய சட்டவிரோதப் பொருட்கள் வந்திருந்ததாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்க கண்டியில் தெரிவித்திருக்கிறார். அகப்பட்டவை இவையானால் அகப்படாமல் போய்விட்டவை எவை? யாருக்கு எதற்காக போயிருக்கின்றன? என்பது ஒன்றும் லேசுப்பட்ட சுனாமி அல்ல.

பிரித்தானிய கப்பலான HMS சதாம்,கிழக்குக்கரையில் வான் வழி ஆய்வுகளை நிகழ்த்தியிருக்கிறது.

இத்தாலி,நேரடியாக புலிகளிடம் நிவாரண உதவிகளை வழங்கியது. தென்னிலங்கை ஊடகங்கள் சொல்வது போல் "இறைமையை காலில் போட்டு மிதிக்கும்" செயலாக இருந்தாலும்கூட புலிகளுக்கு ஏதோ ஒரு வகை அங்கீகாரத்தை வழங்குவதாகவும் அமைகிறது.

கிழக்குக் கரையோரம் தரித்து நின்ற அமெரிக்கக் கப்பலுக்கு TRO பிரதிநிதிகள் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுடன் உரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவையெல்லாமே சந்திரிகாவை பொறுத்தவரை ஒவ்வொரு சுனாமிகள்தான்.

சுனாமி அடித்து மிகச் சில நாட்களுக்குப் பின் கொழும்புத் துறைமுகத்தினுள் தரித்து நின்ற INS சுட் லெஜ் கப்பலுக்கு சந்திரிகா வருகை தந்தபொழுது 'அழகாக சிரிக்கும்' இந்தியத் தூதுவர் நிருபமா ராவ், கொழும்புத் துறைமுகத்தின் அடித்தள மேடை தொடர்பான ஆய்வில் பெறப்பட்ட வரைபடங்களை சந்திரிகாவிடம் கையளித்தார். இந்திய கடற்படையினர் கொழும்பு வந்து "சிலநாட்களுக்குள்"இவ்வளவு 'விரைவாக' இவ் வரைபடங்களை கையளித்தது. எந்த ஒரு மந்த புத்தியுள்ள வரையும் சுனாமியாகத் தாக்கியிருக்கும். சந்திரிகா அதற்கு விதிவிலக்காக இருந்திருக்கமுடியாது.

சந்திரிகாவை தாக்கியிருக்கும் ஆகப் பிந்திய சுனாமியாக தங்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை இனி மீறினால் SLFPபியுடனான கூட்டிலிருந்து வெளியேறப்போவதாக JVP அறிவித்திருப்பது இருக்கிறது.

இந்தச் சுனாமிகளின் கூட்டு விளைவு சந்திரிகாவின் எதிர்கால நடவடிக்கைகளில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்களை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**வின்சென்ற் புளோறன்ஸ்**

---



# அரசின் கவனம் மக்கள் மீதல்ல...?

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களையும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களையும் ஒன்றாகவே கவனிக்கப்பட வேண்டும் என்பது உலக வங்கி பிரதிநிதி ஒருவரின் கருத்து. இதேபோன்றுதான் தமிழீழத் தேசியத்தலைவர் கூறிய கருத்தினையும் நினைவில் கொள்ளவேண்டும். அதாவது தமிழர்களை பொறுத்தவரை இது இரண்டாவது 'சுனாமி. அப்படியானால் முதலாவது சுனாமி எது? அது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே, யாதெனில் சிறிலங்காவின் இராணுவச் சுனாமி. கடந்த இரு தசாப்த காலங்களாக இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகி உடமைகளையும் உறவுகளையும் இழந்து இடம்பெயர்ந்து சொந்த நாட்டிலே அகதிகளாக வாழ்ந்தவர்கள்தான் தமிழ்மக்கள். இவ்வாறு பல அவலங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்ற வேளையில்தான் மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாய் கடந்த ஆண்டின் கடைசி 26 ஆம் திகதி சம்பவம் அமைந்துவிட்டது.

வழமை போல் தமிழ் மக்களின் அவலங்களின் அரசியல் இலாபம் தேடும் தென்னிலங்கை அரசியல் இச் சம்பவத்தின் பின்பும் அதனையே கடைப்பிடித்துவருகின்றது. சுனாமிக்கு முன்பு தமிழர் தாயகப்பகுதிகளில் புனர்வாழ்வு என்ற அடிப்படையில் ஒரு சில வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வந்தது. ஆனால், தற்போது அப்பேச்சுக்கே இடமில்லாமல் போய்விட்டது. அல்லது அரசு சுனாமியின் சாட்டாக அதை அப்படியே கைவிடப்போகிறதா என்ற சந்தேகம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மத்தியில் எழுந்துள்ளது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்குவதில் பாரபட்சமும் பின்னடிப்பும் காட்டி வருகின்ற அரசு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கு அளித்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றுமா என்பது சந்தேகமே. அம் மக்கள் தங்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வது தொடர்பாக உச்ச நீதி மன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பும் சிங்கள மேலாதிக்க உணர்வையே தெளிவாகக் காட்டிநிற்கின்றது. இந்தத் தீர்ப்பின் மூலம் தமிழ் மக்கள் இன்னுமொரு விடயத்தையும் புரிந்திருப்பார்கள். அதாவது தங்கள் உரிமைகளை தாங்களே பெற்றுக் கொள்வதை தவிர வேறு வழி இல்லை என்பதையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் தொடர்பாக பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய அரசு சுனாமியின் பின் அதனை அவ்வாறே மறந்துவிட்டது போலும். சர்வதேச நிதியுதவிகளை பெற்றுக்கொள்வதில் அக்கறையுடன் இருக்கும் சிறிலங்கா அரசு அதனைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் பின்னடிப்புச் செய்கின்ற அதேவேளை மறுபுறத்தில் இர்ராணுவத்தை பலப்படுத்துவதில் குறியாக உள்ளது.

அதாவது நாடு சுனாமி எனும் பேரழிவைச் சந்தித்துள்ளநேரம் சிறிலங்கா அரசு ஈரானுக்கு பல மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுத கொள்வனவை மேற்கொள்ளவென ஒரு குழுவை அனுப்பியது. அது மட்டுமா கடற்படைத்தளபதி அரசுக்கு விடுத்த கோரிக்கையில் கடற்படை தளபாடங்களும் சுனாமியால் அழிந்துவிட்டதாகவும் அதனையும் புனரமைப்புச் செய்ய வேண்டும் எனவும் கோரியிருக்கின்றார். அதனையும் அரசு நடைமுறைப்படுத்தப்போவதாக ஒரு செய்தி. இந்நிலையில்தான் நாம் ஒன்றை சிந்திக்க வேண்டும். அதாவது சிறிலங்கா அரசு தனது இராணுவ கட்டமைப்பை புனரமைப்பதில் அல்லது பலப்படுத்துவதில் காட்டும் அக்கறை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் விடயத்தில் இல்லை என்பதே வேதனைக்குரியது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் எதனை விரும்புகின்றார்கள் என்றால் தங்களின் பெயரால் கிடைக்கின்ற சர்வதேச உத்விகள் நேரடியாகக் கிடைக்க வேண்டும் என்பதே. அப்படி வழங்கினால் மட்டுமே நியாயமான முறையில் தமக்கு நிவாரணம் பகிர்ந்தளிக்கப்படும், அதைவிடுத்து கொழும்பில் வழங்கினால் அவை அனைத்து உதவிகளும் எட்டாக்கனி போன்று ஆகிவிடும் என்பது தமிழ் மக்களின் கருத்து.

தமிழ் மக்களுக்கு எவ்வித உருப்படியான வேலைகளையும் அரசு செய்யாது என்பதை கடந்த கால கசப்பான அனுபவங்கள் மூலம் உணர்ந்துகொண்ட புலிகள் ஓர் பொது கட்டமைப்பை உருவாக்குவதில் உறுதியாக உள்ளனா. ஆனால் அரசோ அதனையும் தட்டிக்கழித்து வருவது போன்றே தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால், கொழும்பில் சர்வதேச உதவிகள் வந்து குவிந்த கொண்டிருக்கும் அதேவேளை சிறிலங்கா சர்வதேசத்திடம் பட்ட கடன்கள் குறைக்கப்பட்டும், நீக்கப்பட்டும், திருப்பிச் செலுத்தும் காலம் நீடிக்கப்பட்டும் வருகிறது. இவ்வாறு சுனாமியின் பெயரால் பெரும் நன்மை அடைந்த சந்திரிகா சில சமயம் இன்னுமோர் சுனாமி வடக்கு கிழக்கை தாக்குவதற்கு பிரார்த்தனை கூட செய்யலாம். அரசு சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் விடயத்திலும் சில பூச்சாண்டி விளையாட்டை காட்டவே முயன்று வருவது போல் தோன்றுகிறது. சிரான் அமைப்பும் ஆரம்பித்து அரசின் நடவடிக்கையால் இன்று செயலிழந்து போய் இருப்பது தெரிந்ததே. அதே போன்று சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் உருவாக்கப்படும் பொது கட்டமைப்பு விடயத்திலும் அரசு காட்டும் அசட்டையீனம். பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பாக அரசு கொண்டுள்ள அக்கறை எந்தளவு என்பதை சுட்டிக் காட்டுகிறது. இந் நிலையில் உலக வங்கி பிரதிநிதி கூறியது அரசின் செவிகளுக்கு எந்தளவுக்கு புகுந்திருக்கும்? சர்வதேச சமூகமும் அரசின் இவ்வாறான செயற்பாட்டை எந்தளவுக்கு விளங்கிக்கொண்டுள்ளதோ? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆனால் ஒன்று மட்டும் உண்மை இலங்கை தமிழ் மக்கள் விடயங்களில் சிங்கள அரசுகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அக்கறையுடன் நடந்ததாக வரலாறு இல்லை இனியும் அக்கறையுடன் நடக்கும் என்றும் எதிர்பார்க்கவும் முடியாது.

**மு.தமிழ்ச்செல்வன்**




# சூரியனுக்குள் மர்மங்கள்

சூரியனின் அமைதி சமீப காலமாக திடீரெனக் குலைந்துள்ளதாக நாஸா விண்வெளி விஞ்ஞானியான டேவிட் காற்தவே கருத்து வெளியிட்டுள்ளார். 2003 இல் திடீரென சூரியனில் பெரும் குழப்பமான நிலையொன்று உருவாகியது. சூரியனில் உள்ள மூன்று பெரும் இராட்சதத் துளைகளால் மூன்று கக்குகைகள் நிகழ்ந்தன. அதைவிட எட்டு மத்தியதர கக்குகைகளும் நடைபெற்றன. சூரியக் குடும்பத்தின் மிகப்பெரிய கிரகமான யுப்பிட்டரை எடுத்துச்சென்று அந்தத் துளைக்குள் வைத்தால் யுப்பிட்டர் கிரகமே அதற்குள் புதைந்து விடுமளவிற்கு அந்தத் துளைகளின் பருமன் காணப்படுகிறது.

விடயத்திற்கு வருவதற்கு முன்னர் சூரியக் கக்குகை என்றால் என்னவென்று பார்க்கவேண்டும். சூரியன் அமைதியான கடல்போன்ற மேற்பரப்புக் கொண்டதல்ல. அங்கு நெருப்பு ஜிவாலைகள் பல இலட்சம் மைல்களுக்கு துள்ளி எழுந்து விழுந்து கொண்டிருப்பது இயற்கை. அதன் மூலம் சக்தியை உருவாக்கி அது மீண்டும் நிலைபேறு பெறுகிறது. அல்லாவிட்டால் சூரியன் என்றோ எரிந்து தீர்ந்து கரிக்கட்டியாகியிருக்கும். இந்தவிதமான சூரியக் கக்குகையில் அதிக மோசமான கக்குகைகளை அளவெடுக்க சில குறியீடுகள் வகுக்கப்பட்டுள்ளன. முதலாவது எம் கக்குகை, இது மத்தியதர நிலையில் காணப்படும். இரண்டாவது எக்ஸ் - கக்குகை இது பாரிய அளவில் காணப்படும். இந்த எக்ஸ் கக்குகயை எக்ஸ் - ஒன்று, எக்ஸ் இரண்டு என்று கக்குகைகளின் பருமனுக்கு ஏற்ப வரிசையாக அடையாளமிட்டுச் செல்வார்கள்.

கடந்த ஒக்டோபர் பிற்பகுதியில் இருந்து நவம்பர் 4ஆம் திகதி வரை சுமார் இரண்டு வாரகாலப் பகுதியில் இந்த சூரியத் துளைகளில் இருந்து சூளையால் கக்குவது போல பதினொரு கக்குகைகள் நடைபெற்றுள்ளன. இது சூரியனின் கடந்த ஒரு தசாப்தகால வரலாற்றில் மிகவும் அசாதாரணமான நிகழ்வாக உள்ளது. 1989ஆம் ஆண்டு சூரிய மேற்பரப்பில் இதுபோல ஓர் கக்குகை இடம்பெற்றது. அதன் அளவு இம்முறை நடந்த கக்குகையுடன் ஒப்பிட்டால் சிறியது என்றே கூறவேண்டும். அடுத்து 2001 ஆம் ஆண்டு இன்னொன்று நடைபெற்றது, அதுவும் சிறிய அளவாகவே இருந்தது. இவற்றுடன் ஒப்பிடும்போது சமீபத்தய நிகழ்வுகள் சூரியனில் ஒரு பெரும் குழப்பமான பௌதீக நிகழ்வு ஆரம்பித்து விட்டதா என்ற ஐயத் தைக் கிளப்பியுள்ளது.

இப்படியான சூரிய குழப்பங்கள் நடைபெற்றால் என்ன நிகழும் என்பதற்கு சில உதாரணங்களை விஞ்ஞானி டேவிட் காற்தவே தந்துள்ளார். ஒக்டோபர் 23 ஆம் திகதி கக்குகை நடைபெற்றபோது அதன் நேரடிப் பார்வை கலிபோர்னியா மீது இருந்தது. இதன் காரணமாக ஏற்பட்ட வெப்ப அதிகரிப்பு அங்கிருந்த காடுகளை ஒட்டு மொத்தமாகத் தீ மூட்டியது. டெர்மினேற்றாக நடித்த ஆனர்ஸ் ஸ்வார்ஸ்நேக்கர் கலிபோர்னிய கவர்னராக பதவியேற்றபோது நடைபெற்ற காடெரிவு அமெரிக்க வரலாற்றில் நடைபெறாத பெரும் சேதமாகும். இதுபோன்ற ஒரு தாக்கத்தாலேயே கனடா கியூபெக்கில் திடீரென மின்சாரத் தடை ஏற்பட்டு அம்மாநிலமே ஸ்தம்பிதமடைந்தது. இதற்குக் காரணம் யார் ? பயங்கரவாதிகளின் செயலா? அல்லது மாற்றுக்கிரக மனிதரின் சதியா என்று பலர் சந்தேகப்பட்டார்கள். ஆனால் அதற்குக் காரணம் சூரியனில் ஏற்பட்ட குழப்பநிலைகளும் கங்குகளாக நெருப்பைத் துப்பும் .அதன் ஆவேசமான குழப்பங்களுமே என்கிறார் விஞ்ஞானி டேவிட் காற்தவே.

திடீரென மின்சாரம் தடைப்பட்டு, அலைவரிசைகள் பாதிக்கப்பட்டு, செய்மதிகள் இயங்க முடியாத நிலையெல்லாம் ஏற்பட இந்த சூரியக் குழப்பங்களே காரணமாகும். மனித உடலை ஒரு தடவை முழுமையாக எக்ஸ்ரே படம் பிடித்தால் எப்படி அவன மீது எக்ஸ் கதிர்கள் ஊடுருவிச் செல்லுமோ அதுபோலவே பூமி மீது இந்தச் சூரியக் கக்குகையின் கதிர்கள் பக்கென ஊடுருவிச் சென்றுள்ளன. வடக்கு முனையில் இருந்து வந்த வான் புகைப்படங்கள் கண்களால நம்பமுடியாத ஒளி ஜாலங்களாகவும், வர்ண ஒளிக் கற்றைகளாகவும், ஒளி வெள்ளமாகவும் வீசியடித்தன.

இப்படியான குழப்பங்கள் இதுபோல மேலும் அதிகரித்தால் என்ன நடைபெறும் இதற்கும் அவர் பல உதாரணங்களை தந்துள்ளார். ஓர் அழகான கோடைகாலம், அந்த நீண்ட பகல் நேரத்தில் அதிகாலையே சூரியன் கிழக்கு வானில் எழுந்து வருகிறது. அதனுடைய சூரிய கதிர்கள் பூமியில் மோதி அதைச் சூடாக்குகிறது. இந்த நிகழ்வு வெளியே நடைபெற்றுக்கொண்டிருக்க காலநிலை சட்டென மாற்றமடைகிறது. பனிப்புயல் வீச ஆரம்பிக்கிறது. பனி வகைதொகையின்றிக் கொட்ட ஆரம்பக்கிறது. இரண்டு வாரங்கள் தொடர்ந்து பனி கொட்டுகிறது. வீதிப் போக்குவரத்து எல்லாம் தடைப்படுகிறது. இந்த நிகழ்வு ஒரு அழகிய கோடைகாலத்தில் நடைபெறுகிறது. இது சாத்தியமா? சாத்தியமல்ல. சூரியக் குழப்பங்களால் இதுதான் நடைபெறும் என்கிறார் விஞ்ஞானி டேவிட் காற்தவே. டிசெம்பர் மாதம் பிறந்து விட்டது, பனித்துகள்கள் கொட்டும். நத்தார் பிறக்கப்போகிறார் என்று காத்திருந்தனர் பிரான்சியர். ஆனால், தெற்குப் பிரான்சில் திடீரென பெருமழை கொட்டியது. 200 மி.மீ அளவையும் அது தாண்டிப் போனது. வெள்ளக்காடாகியது தெற் குப் பிரான்ஸ். ஐந்து பேருக்கு மேல் மரணித்தனர். பத்தாயிரம் பேர் வீடுகளை இழந்து வெளியேறினர். இந்த அகால மழை எப்படி ஏற்பட்டது? இதுபோன்ற அல்லது இதை விட மோசமான அதிசயங்கள் நடக்கலாம்.

சூரியனில் உள்ள துளைகளில் மிகவும் பெரியது எக்ஸ் 486 என்ற இலக்கமுடைய துளையாகும். நவம்பர் 4ஆம் திகதி கக்குகையின் போது இதனுடைய பார்வை முகம்



பூமியை நோக்கி இல்லாமல் போனதால் மேலும் பல தாக்கங்களில் இருந்து பூமி தப்பித்துக்கொண்டது. இப்போது கக்குகைகள்நின்று போய் சூரிய மேற்பரப்பு அமைதியாகக் காணப்படுகிறது. அங்கே அவிந்த எரிமலை வாய்போல மூன்று பெரும் சூளைத் துவாரங்கள் காணப்படுகின்றன. 2001ஆம் ஆண்டுவரையான



பதினொரு ஆண்டு காலத்தில் இது போன்ற கக்குகைகளின் போக்கு குறைந்து சூரியன் அமைதியாகவே காணப்பட்டது. சமீபத்தில்தான் திடீரென சூரியனில் உள்ள மூன்று பெரும் துளைகளும் பதினொரு தடவைகள் கக்கியதால் மிகப்பெரிய போறையாகக் காட்சி தருகின்றன. இது ஆச்சரியத்தைத் தரும் நிகழ்வாகும்.

ஆனால், இது குறித்து மக்கள் பயமடைந்துவிடக்கூடாது என்றும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இதனால் சூரியன் வெடித்துச் சிதறிவிட்டது என்று பொருள் கொள்ளலாகாது. அங்கே பிரமாண்டமான கக்குகைகள் நடைபெற்றுள்ளன என்பதுதான் உண்மையாகும். மூன்று துளைகளும் வழமைக்கு முரணாக கக்கியதும், அதன் தாக்கம் மிக நீண்டதாக இருந்ததுமே முக்கிய விடயம் என்கிறார் டேவிட் காற்தவே. இதுபோல 2006 இலும் சிறு அளவிலான தாக்கம் இடம்பெறலாம் என்றார். மூன்று எக்ஸ் 13 அளவிலான கக்குகைகளும் எட்டு எம் அளவிலான கக்குகைகளும் இரு வாரத்தில் நடைபெற்றதே முக்கிய நிகழ்வாகும். எனினும் எது சூரியனின் இயல்பு நிலை, எது இயல்பற்ற குழப்பமான நிலை என்பதற்கு ஒரு வரையறை வைப்பது கடினமானது. மேற்கண்ட மூன்று துளைகளில் இருந்தும் வரும் சூரியனின் எக்ஸ் கதிர்கள் கடந்த 35வருடங்களாக அளக்கப்பட்டு வருகின்றன. அவற்றை மட்டும் வைத்து சூரியனின் எதிர்காலம் என்ன என்ற முடிவுக்கு நாம் வரமுடியாது. சூரியன் நெடிய வரலாற்றைக் கொண்ட ஒரு கோளாகும். இருந்தாலும் ஒன்றை மட்டும் சொல்ல முடிகிறது, இது போன்ற நிகழ்வுகள் சூரியனில் எப்போது நிகழும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. அது எப்போது வேண்டுமானாலும் நிகழலாம் என்பதுதான் உண்மை.




# இருதய நோயைத் தடுக்கும் பழங்கள், காய்கறிகள்

பழங்கள் மற்றும் சில காய்கறிகளை சேர்த்து உண்பதால் இருதயப் பிரச்சினைகள் தடுக்கப்படுகின்றன. என்று ஃப்ரீரேடிகல் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு ஆய்வு கூறுகிறது.

உலகின் பின்னணி விஞ்ஞான- தொழில்நுட்ப பல்கலைக் கழகங்களில் ஒன்றாகக் கருதப்படும் இஸ்ரேலில் உள்ள டெக்னியான் ஆராய்ச்சிக் கழகத்துடன் இணைந்த ஆராய்ச்சியாளர்கள் வெங்காயம் மற்றும் தக்காளி, மூலிகை வகைகளான வெள்ளைப்பூண்டு, அதிமதுரம் மற்றும் திராட்சைகள், மாதுளம் பழங்கள் ஆகியன இருதய நோய்களைத் தடுக்கும் சத்துக்களைக் கொண்டது என்று கூறுகின்றனர்.

மேற்சொன்ன பழங்கள் மற்றும் காய்கறி வகைகளை இணைத்து உண்ணும் உணவு வழக்கத்தை அவர்கள் வலியுறுத்தக்காரணம், அவைகளில் பல்வேறு வகையான Anti Oxidents கள் உள்ளன. இவை இணைந்து செயலாற்றும். இயற்கை காம்புண்டுகளான ஜீரண Anti Oxidents -கள் உயரகத்துடன் இணையும் செயலை மெதுவாக ஆக்குகிறது. இதனால் கொழுப்புச் சத்துக்கள் படிவதும், இரத்தக் குழாய்கள் குறுகுவதும் நடைபெறுகிறது.

பழங்கள் மற்றும் காய்கறிகள் இது போன்ற நன்மைதரும் ஆன்ட்டி- ஆகிஸிடென்ட்கள் கொண்டது.

நாம் சாதாரணமாக மாத்திரைகளில் எடுத்துக்கொள்ளும் ஆன்ட்டி- ஆக்ஸிடென்ட்களான விட்டமின்கள் ஒரு தனியான செயலையே செய்கின்றன. இதனால் பழங்கள், காய்கறிகள் மற்றும் விட்டமின்கள் இணைந்த ஒரு உணவு முறை தேவையான பயன்மிக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது.

உதாரணமாக விட்டமின் E மற்றும் இதனுடன் சேர்த்து விட்டமின் P லைகோபீன் என்ற விட்டமின் A பெறப்படும் மூல விட்டமின் இரசாயனப் பொருள் மற்றும் ஃப்ளேவ நாய்ட் ஆகிய விட்டமின்கள் உள்ளடங்கிய தக்காளிப் பழங்களுடன் சேர்த்து உண்டால் இவைகளின் கூட்டுச் செயற்பாடு பலனை அதிகரிக்கும். விட்டமின் E யை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டால் கூட்டுச் செயற்பாடு இருக்காது என்று அந்த ஆராய்ச்சி கூறுகிறது.

# ஆஸ்த்துமாவை தடுக்கும் அன்னாசி

அன்னாசிப் பழங்கள் வெறும ருசிக்காக மட்டுமே உண்ணப்படுவதல்ல, அதற்கு மருத்துவ குணமும் உண்டு என்றும், ஆஸ்த்துமாவை குறைப்பதில் அன்னாசி முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது!

கனெக்டிகட் பல்கலை பேராசிரியர் எரிக் ஆர். செகோர், அன்னாசிச் செடியின் தண்டிலிருந்து எடுக்கப்படும் ப்ரோமிலெய்ன் ஆஸ்த் துமா தொடர்பான ஒவ்வாமைகளை குறைப்பதாகக் கூறுகிறார்.

ப்ரோமிலெய்ன் கொண்டு சில எலிகளில் செகோர் பரிசோதனை நடத்தினார். ஆஸ்த்துமாவினால் அதிகரிக்கும் வெள்ளையணு உற்பத்தியைப் ப்ரோமிலெய்ன் குறிப்பிடத் தகுந்த வகையில் குறைப்பதைக் கண்டார். இதனால் ஒவ்வாமை



ஆஸ்த்துமாவை உண்டாக்கும் செல் வளர்ச்சியை இது குறைக்கிறது என்கிறார் செகோர்.

புரோமிலெய்ன் எவ்வாறு வேலை செய்கிறது என்பது சரிவரத் தெரியாவிட்டாலும் நுரையீரல் சார்ந்த நோய்களை இதன் மூலம் தீர்க்க முடியும் என்று அவரது ஆய்வு தெரிவித்துள்ளது.

உண்டாக்கும் செல் வளர்ச்சியை இது குறைக்கிறது என்கிறார் செகோர்.

# அல்சரை தடுக்கும் விட்டமின் "சி"

"விட்டமின் -சி" வயிறு மற்றும் குடல் ஆகியவற்றில் ஏற்படும் அல்சரைக் களைகிறது என்று கலிஃபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இரத்தத்தில் அஸ்கார்பிக் அமிலம் என்று அழைக்கப்படும் விட்டமின் சி-யின் அதிகமாக இருப்பு, வாயு குடல் சம்பந்தமான பிரச்சினைகளைக் களைகிறது என்று டாக்டர் கோயல் சைமன் கூறுகிறார்.

"அமெரிக்கன் காலேஜ் ஆஃப்நியூட்ரிஷன்" வெளியிடும் பத்திரிகை ஒன்றில் இந்த ஆய்வின் முடிவு கீழ்வருமாறு தெரிவிக்கிறது.

"விட்டமின்-சி அதிகமாக எடுத்துக்கொள்வது, நுண்ணுயிரிகள் மூலம் பரவும் நோயிலிருந்தும், இதனால் அல்சரிலிருந்தும் பாதுகாக்கிறது."

"ஹெச். பைலோரி என்பதன் நீண்ட நாளைய பீடிப்பினால் பெப்டிக் அல்சர் மற்றும் கேஸ்ட்ரிக் கான்சர் ஏற்படுகிறது என்று ஏற்கனவே சில ஆய்வுகள் தெரிவித்திருப்பதை இந்த ஆய்வாளர்களும் உறுதி செய்தனர்.

இந்த ஹெச். பைலோரின் பீடிப்பிலிருந்து, அஸ்கார்பிக் அமிலம் என்ற விட்டமின் -சி காப்பாற்றுகிறது என்று இவ்வாய்வுகள் தெரிவித்துள்ளன.

விட்டமின்- சி ஏன் தடுக்கிறது என்பதை இவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனினும், விலங்குகளிடம் செய்து பார்த்த ஆய்வில் பாக்டீரியாவின் வளர்ச்சியை அஸ்கார்பிக் அமிலம் தடுக்கிறது என்பதை தெரிந்து கொள்ள முடிந்தது என்று கூறுகின்றனர்.

# அச்சம் அறியா எங்கள் வீரன்

க.மிரேசு



மாரிகாலத்து அடை மழையில் எழுதுமட்டுவாழ் காவல்நிலைகளின் கண்டல் கரையோரங்கள் மழை நீரால் நிரம்பி வழிந்து கடுமையான சேறும் ச்கதியுமாக இருந்தது. நுளம்புகளின் இரைச்சல் மிக மோசமானதொரு ஒலியைத் தந்து செவிகளை செவிடாக்கியது. அதைவிட நுளம்புகளின் குத்தல்களும், சீண்டல்களும் பொறுமையை சோதிக்கவே செய்தன. நுளம்புகள் தூக்கிச் சென்றுவிடும் போலிருந்தது. குளிர் உடலை வாட்டத் தொடங்கியது. இதைவிட எத்தினையோ துன்பங்கள் தொந்தரவு செய்தபோதும் நாம் எம் கடமைக்காக தொடர்ந்து முன்னேறவேண்டியே இருந்தது.

இப்போது நேரம் மாலை 6.30 ஐ தாண்டி இருந்தது. வேவு அணிகள் எதிரியின் பகுதிநோக்கி நகரத்தயாராகிவிட்டன. மூன்று பிரிவுகளாக ஒவ்வோர் அணியும் உள்செல்ல வீரவேங்கை கப்டன் தமிழ் நாடானின் அணியும் உள் நுழைய ஆயத்தமானது.

கப்டன் தமிழ் நாடானின் அணி கடுமையான பணி ஒன்றுக்காக நியமிக்கப்பட்டிருந்தது. எனவே அந்த அணியின் ஒவ்வொரு நடவடிக்கையும் நன்கு திட்டமிட்டே முன்னெடுக்கப்பட்டது. ஓயாத அலைகள் -03இன் இறுதிக்கட்டம் வெற்றிபெற்று முகமாலை காவலரண் தொகுதிவரை எமது அணி முன்னேறி இருந்தது. என்றாலும் யாழ் மண்ணை மீட்டெடுக்கவேண்டும் என்பதே புலிகளின் படையணிகள் எடுத்துக்கொண்ட சபதமாகும். எனவே முகமாலையை ஊடறுத்துச்செல்ல ஒரு தாக்குதல் திட்டத்திற்கான வேவு நடவடிக்கை நடந்துகொண்டிருக்க கப்டன் தமிழ் நாடானின் அணிகள் வேகமுடன் உள்நுழைய வேண்டியிருந்தது. நடவடிக்கையின் தன்மைகள் பற்றி கேட்டறிந்த தமிழ் நாடான் தனது வேவு அணிக்குத் திட்டத்தை தெளிவுபடுத்தினான்.

தம்பிமார் நல்ல கவன மாகக் கேளுங்கோ... எங்களுக்கு தரப்பட்ட கடமையின் முக்கி யத்துவம் நன்றாகத்தெரியும். எனவே நிதானமாக எங்களது வேலையைச் செய்துமுடிக்க வேண்டும். இந்த வேலையை நாங்கள் திறம்பட சிறப்பாக செய்துமுடிப்போம் என்று நம்பியே தலைவரும், தள பதிகளும் எம்மிடம் ஒப் படைத்துள்ளார்கள். எனவே இந்த வேலைக்காக எம்மை முழுமையாக அர்ப்பணித்து வெற்றிகரமாக செய்து முடிப்போம், "எங்களது உயிர் பிரிந்தாலும், எமக்காய் தரப்பட்ட பணி வெற்றியுடன் நிறைவுபெறவேண்டும்'' என்று கூறி தங்களது நகர்வை ஆரம்பித்தனர்.

அடர்ந்த புல்லும் பற்றைகளும் சேற்றிலே வளர்ந்திருந்த கண்ணா பற்றைகளையும் இருளின் ஊடே கடந்து எதிரியின் பிரதேசத்தை அண்மித்து விட்டபோது, தமிழ் நாடான் இயங்கத்தொடங்கினான். எம்மையும் தளபதி வீரமணியையும் அவ்விடத்திலேயே நிற்கச் சொல்லிவிட்டு ஒரு போராளியுடன் சென்றவன் சுமார் ஒரு மணித்தியாலம் கடந்தும் வரவில்லை. முன்னால் சென்றவனுக்கு என்ன நடந்துவிட்டதோ என்று நாம் திகைத்துக் கொண்டிருக்கும்போதேடப் என்ற கையடக்க தேடொளி ஏவும் சத்தம் கேட்டது. அது வானில் வந்து ஒளிரும் முன்பே நாம் எல்லோரும் புற்களுக்குள் புகுந்து உருமறைத்துக்கொண்டோம்.

தேடொளி வானில் விரிந்து ஒளியைப் பரப்ப, மேலும் பல ஏவு கருவிகளினூடே செலுத்தப்பட்டு நாமிருந்த இட மெங்கும் பகலாக்கிக் காட்டியது. எமக்கு நேரே உள்ள எதிரியின் காவ லரண்களில் அவர் களின் நடமாட்டங்கள் சில தெரிந்தன.

எமக்கோ அச்சமாக இருந்தது. எமக்கு முன்சென்ற தமிழ் நாடான் என்ன ஆனான் என்பது எமக்குத் தெரியாதிருந்தது. எனவே பலவிதமான யோசனைகளுடன் நாம் காத்திருந்தோம். நேரம் இரவு 11 மணியை தாண்டிவிட்டது. தேடொளி ஏவுதலையும் எதிரி நிறுத்தியிருந்தான். தமிழ் நாடானின் தொடர்பும் இல்லை. எனவே நாம் முன்செல்ல தீர்மானித்தபோது முன்னால் இரண்டு கறுத்த உருவங்கள் குனிந்து வருவதும் இருப்பதாகவுமாக வந்துகொண்டிருந்தன. நாம் செய்த சைகைக்கு சாதகமான சைகையே காட்டப்பட்டதனால் தமிழ் நாடான் வருவதே உறுதியாகிவிட்டது.

வழமையான சிரிப்புட னேயே எம்மை நோக்கி வந்தவன் தளபதி வீர மணியுடன் கதைத்தான். எதி ரிக்குக் கிட்டவாகவே சென்றதாகவும் எதிரி ஏதோவொரு அச்சத்திலேயே தேடொளி அடித்ததாகவும் சொல்லிவிட்டு எம்மை அழைத்துச்சென்றான். சிறிது தூரம் நடை, சிறிது தூரம் குனிந்தவாறும், ஏனைய தூரங்களை தவழ்ந்தும் சென்றோம்.மெதுமெதுவாகத் தவழ்ந்துசென்று ஒரு சிறிய பற்றைக்குள் புகுந்தோம். அந்த இடம் சேறாகி இருந்ததனால் இராணுவச் சப்பாத்துக்களின் காலடிகள் பதிந்திருந்தன. சில மணித்தியாலத்திற்கு முன்பே எதிரி அந்த இடத்திற்கு வந்து போய் இருக்கிறான் என்பது தெளிவாகியிருந்தது.

உண்மையில் சொல்லப்போனால் கப்டன் தமிழ் நாடான் கூட்டிச்சென்ற இடத்தைப் பார்த்து நாம் அதிர்ச்சியடைந்துவிட்டோம். எதிரியின் நிலையிலிருந்து 40-50 மீற்றர் தூரமே இருக்கும் அந்தளவிற்கு எதிரியை நெருங்கி விட்டோம். எதிரி கதைப்பது, சிரிப்பது, பாடல் கேட்பது என எல்லாமே தெளிவாக எமக்குக்கேட்கத் தொடங்கியது.

இடை,இடையே ஒரு வயதான எதிரியின் குரல் கர கரப்புடன் "புத்தே ஒந்தட்டபலானே'' மகன் நல்லா பார்த்துக்கொள் என்று கேட்டவாறே இருந்தது. அந்தளவிற்கு நாம் எதிரியை அண்மித்திருந்தோம்.

எதிரியின் இரண்டு நிலைகளிற்கு இடையிலாக நேர் எதிரே நாமிருந்தோம். எனவே எதிரியை அவதானிக்க வசதியாக இருந்தது. பற்றைக்குள்ளிருந்து இரவுப் பார்வைகாட்டியின் ஊடாக பார்த்துவிட்டு நாம் அவ்விடத்திலேயே இருக்க, தமிழ் நாடான், சுடர் இருவரும் எதிரியின் தடைகள் இரண்டைக் கடந்து ஏனைய தடைகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்துவிட்டு திரும்பினர்.



நாம் அவ்விடமிருந்து திரும்பியதும் தமிழ் நாடான் தொடர்ந்து தனது நடவடிக் கைக்காக அவ்விடத்திலேயே காத்திருந்தான். காலை விடிவதற்குள் வந்தவன் எதிரியின் பிரதேசத்திற்குள் புகுந்து பார்த்து அந்த இடத்தை சண்டை செய்வதற்கு ஏற்ற இடமாக தெரிவுசெய்துவிட்டே வந்தான்.

மறுநாள் நாம் வேவுப்பணிக்கென வேறொரு இடம் நோக்கிச்சென்றோம். முன்னால் கப்டன் தமிழ் நாடான், இரண்டாவதாக மேஜர் குகன், மூன்றாவது நான், நாலாவது தளபதி வீரமணி, ஐந்தாவதாக மேஜர் முடியரசன் என 05 பேரும் நகர்ந்து கொண்டிருந்தோம். எதிரியின் காவலரணுக்குக் கிட்டவாக சென்றுவிட்டதை தமிழ் நாடான் சைகைமூலம் காட்டினான். சைகை காட்டிய கணப் பொழுதிலேயே எம்மை தாக்குதல் வியூகம் எடுக்கச் சொல்லி மேலும் ஒரு சைகை செய்தான். நாம் தாக்குதல் நிலையெடுக்க முன்னதாகவே எதிரி முந்திக் கொண்டு தாக்குதலைத் தொடுத்தான். எதிரியின் தாக்குதல் விசிறிபோல் பரவலாக இருந்தமையினால் எமக்கு ஒரு ரவையும் படவில்லை. சிறிது நேரத்தில் 2-3 எதிரிகள் எம்மை நோக்கி சுட்டுக்கொண்டு வந்தனர். அப் போதுதான் தமிழ் நாடான் தனது ஆக்கிரோசத்தை வெளிப் படுத்தி, எழுந்து தாக்கிவிட்டு சுடுங்கடா என சொல்லிவிட்டு தானும் சுட்டுக்கொண்டே பின்வாங்கச் சொன்னான்.

நாம் சுட்டுக்கொண்டே பின்வாங்கி வந்து ஓர் இடத்தில் சேர்ந்தோம்.

எறிகணைகள் பரவலாக வெடித்தவண்ணமே இருந்தன. எனவே எம்மை போகும்படி சொல்லிவிட்டு தமிழ் நாடான் இரண்டு போராளிகளுடன் அங்கேயே நின்றான். 15.09.2000 காலை எப்படியும் தன் கடமையை முடித்துக்கொண்டே தமிழ் நாடான் திரும்புவான் என்று நினைத்து விடியும்நேரம்வரை காத்திருந்தோம். காலை விடிந்தது. ஆனால், எங்கள் காவியநாயகன் திரும்பும் நேரமாகியும் வரவில்லை. தூரத்தே கேட்ட ஒரு பெரிய வெடியோசை ஏதோ ஒன்றை எமக்கு உணர்த்தியது.

வெடியோசை கேட்ட திக்கில் பதுங்கிப்பதுங்கித் தவழ்ந்து சென்றுபார்த்தோம். எதிரியின் பொறிவெடி ஒன்று வெடித்து தன்தோழன் காயமடைந்து கிடக்க. தன் துப்பாக்கியை அணைத்தபடி வீரச்சாவடைந்து கிடந்தான் எங்கள் மாவீரன் கப்டன் தமிழ் நாடான் •

(கமில்டன் யூட்கில்டன்)




# களத்தில் மலர்ந்த காதல்

**மா. தீபன்**

நேரம் நண்பகலைத் தாண்டிக் கொண்டிருந்தது. காலையிலேயே போக நினைத்தது இன்னும் வெளிக்கிடேல்ல மனத்துக்குள் என்னை நானே திட்டியவாறு அவசர அவசரமாக வேலைகளை முடித்துக்கொண்டு அவனிடம் போவதற்குத் தயாரானேன்.

இன்று அவனது நினைவு நாள். துயிலுமில்லம் சென்று அவனதும் அவளதும் கல்லறைக்கு மாலைபோட்டு வணங்கிவிட்டு ஆறுதலாக இருந்து அவனுடன் கதைத்துவிட்டு வரவேண்டும்.

முதலில் நான் உங்களுக்கு அவனைப் பற்றிச் சொல்லவேண்டும்.

அலைகளின் ஆர்ப்பரிப்பில் எம்மிடம் வீழ்ந்து போன யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளை மீண்டும் கைப்பற்றுவதற்காக அங்குலம் அங்குலமாக எதிரி முன்னேறிக்கொண்டிருந்த 2000 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி சாவகச்சேரி நகருக்கு அண்மையாகக் கண்டி வீதியைக குறுக்கறுத்து எமது முன்னணி நிலைகள் அமைந்திருந்தன. அங்குதான் நான் அவனை முதன் முதலாகக்கண்டேன்.

ஐந்தடி ஆறங்குல உயரம், பொது நிறம், துரு துரு கண்கள், சிரிக்கும்போது குழிவிழும் கன்னங்கள். பார்ப்பதற்கு சாதாரண ஆணாய் தெரிந்தாலும் பார்ப்பவரை தன்பக்கம் ஈர்க்கக் கூடிய ஒரு வசீகரம் அவனது முகத்தில் இருந்தது.

என்னவோ தெரியாது எனக்கு அவனைப் பார்த்தவுடனேயே பிடித்துப்போயிற்று. பின்னர்தான் அவனது பெயர் தர்சன் என அறிந்துகொண்டேன்.

ஆரம்பத்தில் எங்களுக்கிடையிலான நட்பு சாதாரணமாகத்தான் இருந்தது. பின்னர்தான் அது ஆழமான நட்பாக உருவெடுத்தது.

இரண்டுபேருமே ஒரே பகுதியில் நின்றதால் அடிக்கடி அவனை சந்திக்கக்கூடியதாக இருந்தது. இதனால் எங்களுக்குள் பழக்கம் ஆரம்பித்து குறுகிய நாட்களுக்குள்ளேயே எங்களது நட்பு இரண்டு பேருக்குள் உண்டாகிற சாதாரண நட்பையும் தாண்டி உயிர் நண்பர்கள் என்று சொல்வார்களே அந்தளவிற்கு ஆழமாக வந்துவிட்டது.

எங்களது பகுதியில் சிறு சிறு மோதல்கள் ஏற்பட்டால், எனது பகுதியில் ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால், அவனது நடைபேசி முதலில் என்னைத்தான் தொடர்புகொள்ளும். எனது நிலையை அறிந்துகொண்ட பின்னர்தான் அவன் வேறு வேலை பார்ப்பான்.

இப்பிடித்தான் ஒருமுறை பதுங்கித் தாக்கும் நோக்கத்துடன் எதிரி எனது நிலையை நோக்கி வர மிக அருகில் வைத்து எதிரியைக் கண்டு நாங்கள் சண்டையைத் தொடங்கிவிட நிலைமை கொஞ்சம் சிக்கலாக மாறியது.

சண்டை கொஞ்சம் இறுக்கமடைய தனது நோக்கம் நிறைவேறாமல் போகவே கடுமையாகத் தாக்கியவாறு எதிரி பின்வாங்கத்தொடங்கினான். கட்டளைப் பணியகத்திற்கு நிலைமைகளைச் சொல்லிக்கொண்டிருந்த என்னை, நடைபேசியில் அவன் குறுக்கிட்டான்.

"சேரா சேரா ராங்கோ"

"ராங்கோ சேரா என்னெண்டு சொல்லுங்கோ"

"சேரா என்ன மாதிரி. உனக்கொண்டும் இல்லையே"

"பிரச்சினை இல்லை மச்சான். வழமை மாதிரித்தான்"



நடைபேசியில் கதைத்துக் கொண்டிருந்த நான் பின்னால் யாரோ ஓடிவரும் சத்தம் கேட்கவே திரும்பிப்பார்த்தேன்.

வேகமாக ஓடிவந்த அவன் நடைபேசி "ரொட்டை" மடித்தவாறு எனது நிலைக்குள் புகுந்துகொண்டான். தனது நிலையைவிட்டு என்னைத்தேடி அவன் வந்ததையிட்டு நான் அவனைக் கடிந்து கொண்டேன்.

"இல்லை மச்சான் சத்தம் கொஞ்சம் கூடவாக் கேட்குது. உனக்கேதும் பிரச்சினையோ தெரியாது. அதுதான் பாப்பமெண்டு நேர வந்தனான்." அப்பாவியாகச் சொன்னான் அவன்.

பிறகொரு நாள் மாலை ஏதோவொரு முக்கியமான விசயமொன்று கதைக்க வேணுமென்று தனது நிலைக்கு வருமாறு கூப்பிட்டான்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது ஏனென்றால் நாங்கள் பழகிய இந்தக் குறுகிய காலத்துக்குள் எங்களுக்குள் இரகசியம் என்று எதுவுமே இருக்கவில்லை. அந்தளவிற்கு எங்களுடைய தனிப்பட்ட விடயங்களையும், ஏனைய விடயங்க்ளையும் நாங்கள் இருவரும் பரிமாறிக்கொண்டோம்.

அப்படி இருக்க இண்டைக்கு என்ன புதுசா ஒரு விசயம் வந்திருக்கும் மனதுக்குள் எண்ணியவாறு அவனிடம் போனேன். என்னைக் கண்டதும் எழும்பி வந்தான் அவன்.

"என்ன ராங்கோ அப்படி என்ன முக்கியமான இராணுவ இரகசியமொன்று இண்டைக்குச் சொல்லப் போறாய்" பகிடியாகக் கேட்டேன்.

எனது கேள்வியைக் கேட்டுச் சிரித்த அவன் தனியான ஒரு இடத்திற்கு என்னை அழைத்துச்சென்றான். வசதியான இடத்தில் இருவரும் அமர்ந்து கொண்டோம்.

"சரி ராங்கோ இனியாவது விசயத்தைச் சொல்லன்".

"பெரிசா ஒண்டுமில்லை மச்சான். நான் ஒராளை விரும்புறன் மச்சான்"

அமைதியாகக் கூறினான் அவன்.

அவன் கூறியதைக் கேட்ட எனக்கு ஆச்சரியமாக இருந்தது. போராட்ட வாழ்வில் ஒருவனுக்கு காதல் வருவதென்பது வழமைதான். ஆனால், நாங்கள் இருக்கின்ற இந்தச் சூழலில் இப்படியான ஒரு உணர்வு அவனுக்கு வருமென்று கொஞ்சம் கூட நான் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், நான் எனது வியப்பைக் காட்டிக் கொள்ளாமல் "சரி மச்சான் உன்ர உள்ளத்தை கொள்ளை கொண்ட அந்தத் தேவதை யாரெண்டு சொல்லன். கேட்டேன்.

'ஆள் இஞ்ச கிட்டத்தான் நிக்கிறா' என்ற அவன், தான் விரும்பிய தனது வாழ்க்கைத் துணையாகத் தான் தெரிவு செய்தவளைப்பற்றி கூறத் தொடங்கினான். அவன் கூறுவதையெல்லாம் நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

எனக்கும் அவளைத் தெரிந்திருந்தது. எங்களது நிலைகளுக்கு அண்மையாகத்தான் அவளது நிலையும் இருந்தது. குறிப்பிட்ட காலம் அவள் எங்களது பகுதியில் நின்றதால் எனக்கும் அவளைப்பற்றி ஓரளவு தெரிந்திருந்தது.

தனக்கேற்ற சரியான ஆளைத்தான் அவன் தெரிவு செய்திருக்கிறான், மனதுக்குள் எண்ணிக்கொண்டேன்.

'சரி மச்சான் பதிஞ்சிட்டியளோ'

"இல்ல மச்சான் சண்டை முடியட்டும் பின்னுக்குப் போய் பதிவம். இதைத்தான் அவவிட்டயும் சொல்லியிருக்கிறன். "சொன்னான் அவன்.

பிறகு நீண்ட நேரமாக இருவரும் அதிலிருந்து கதைத்துவிட்டு விடைபெற்றோம்.

இது நடந்து கொஞ்ச நாளுக்குப்பிறகு அவனது அணி வேறிடத்திற்கு மாறிச்சென்று விட்டதால் முன்னரைப்போல் அவர்களால் சந்திக்க முடியவில்லை. இருந்தாலும் இடைக்கிடை கடிதம்மூலம் இருவரும் தங்களது அன்பைப் பரிமாறிக்கொண்டார்கள்.

ஒவ்வொருமுறையும் அவளிடமிருந்து கடிதம் வந்தால் படித்து முடித்தவுடன் என்னைக் கூப்பிட்டு படிக்கச்சொல்வான். அதேமாதிரித்தான் அவளுக்கு கடிதம் எழுதினாலும் எனக்குக் காட்டி விட்டுத்தான் அவளுக்கு அனுப்புவான். அவர்கள் இருவரது கடிதத்தையும் படிக்கும்போது அவர்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது.

தொடர்ச்சியாக நடக்கின்ற சண்டையில் குறிப்பிட்டளவானவர்கள் காயப்பட்டும், வீரச்சாவடைந்தும் விட அவர்களின் இடங்களுக்கு புதிதாக ஆட்களை நிரப்ப அப்போதிருந்த ஆட்பற்றாக்குறை இடம்கொடுக்கவில்லை. இதனால் அங்கு எஞ்சி நின்றவர்களே அவர்களின் இடத்தையும் நிரப்ப வேண்டியிருந்தது.

இதனால் 50 மீற்றர் என்றிருந்த எங்களது நிலைகளுக்கிடைப்பட்ட தூரம் படிப்படியாக 200,300,500 மீற்றர் எண்டு நீண்டுகொண்டு சென்றது. சில இடங்களில் அது ஒரு கிலோமீற்றரையும் தாண்டியது.

இப்படி இருக்கும் போதுதான் ஒரு நாள் எதிரியின் முன்னேற்றம் மறுநாள் எமது பகுதியால் நடைபெற இருப்பதாக கட்டளைப்பணியகத்தால் அறிவிக்கப்பட்டது. அன்று மாலை நான் எனது நிலைகளை பார்வையிட்டுக்கொண்டு சென்ற போது என்னைத்தேடி அவன் வந்தான். எனக்கு ஏனோ அன்று அவன் முகம் வித்தியாசமாக இருப்பதாகத் தெரிந்தது.

என்னருகே வந்த அவன் என்னைத் தனியாகக் கூட்டிச் சென்றான். அருகிருந்த மரக்குற்றியில் அமர்ந்த அவன் என்னையும் இருக்கும்படி கூறி விட்டு தனது 'கோல்சரைக்" கழட்டி அதன் பின் 'பொக்சி'லிருந்து சில கடிதங்களை எடுத்தான்.

"மச்சான் எல்லாம் ஆள் அனுப்பின கடிதங்கள் மச்சான் நாளையான் சண்டையில ஆரார் இருப்பமோ தெரியாது அதுதான் உன்னட்டக் காட்டிப்போட்டு எரிப்ப மெண்டு வந்தனான்" அமைதியாகக் கூறினான் அவன்.

எனது பார்வை அந்தக் கடிதங்களுக்குள்ளிருந்த ஒரு பொருள் மீது பட்டது. "பொக்கற் கலண்டர்" அளவுள்ள படம் அது. ஆங்கிலத்தில் அதில் ஏதோ ஒரு காதல் வாசகம் எழுதப்பட்டிருந்தது. அங்குள்ள வீடு ஒன்றிலிருந்துதான் அது எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

அவனிடமிருந்து அந்தப்படத்தை வாங்கிப் பார்த்தேன். படத்தின் பின்னால் அவனது பெயரை எழுதி அன்புடன் என்று போட்டு கீழே தனது பெயரை எழுதியிருந்தாள் அவள்.

"மச்சான் இதை மட்டும் நான் வைச்சிருக்கிறன்" அவனது அனுமதியுடன் அந்தப் படத்தை எனது கோல்சருக்குள் பத்திரப்படுத்திக்கொண்டேன்.

பிறகு இரண்டு பேருமாகச் சேர்ந்து அந்தக் கடிதங்களை எரித்து விட்டு நீண்ட நேரமாக அதிலிருந்து கதைத்துக் கொண்டிருந்தோம். போகும் போது 'போட்டு வாறன் மச்சான்' என்று கூறிய அவன் என்னைக் கட்டி அணைத்து "உயிரோட இருந்தால் பிறகு சந்திப்பம் மச்சான்" என்று கூறிவிட்டுச் சென்றான். அப்போது அதுதான் அவனுடனான கடைசிச் சந்திப்பு என்று எனக்குத் தெரியாது.

மறுநாள் அதிகாலையிலேயே சண்டை தொடங்கிவிட்டது. நிலைமை எமக்குச் சாதகமாக இல்லாததால் பின்வாங்குமாறு எமக்குக் கட்டளை கிடைத்தது. நாங்கள் பாதுகாப்பாக பின்னுக்கு வந்து சேர்ந்தோம். ஆனால், அவனும் அவனுடன் நின்றவர்களும் திரும்பிவரவில்லை. அன்றிரவும் அதற்கடுத்த நாளும் அவர்கள் எம்மிடம் வந்து சேருவார்கள் என்றுதான் நம்பினோம். ஆனாலும் எங்களது நம்பிக்கை பொய்த்துத்தான் போயிற்று.

இதுக்குப்பிறகு நான் கடமை மாறி பின்தள வேலைக்குப் போய்விட்டேன். சில மாதங்கள் கழிந்ததும் அன்றைய நாளேட்டைப் பார்த்த எனக்கு இன்னுமொரு அதிர்ச்சி காத்திருந்தது.

எங்களது தேசத்தை அழிக்க வந்த அக்கினிச் சுவாலையை எதிர்த்து நின்று அணைத்து ஆகுதியானவர்களின் பெயரில் அவனது பெயரும் இருந்தது. எனக்கு சந்தேகமாக இருந்தது. மீண்டும் மீண்டும் அந்தப் பெயரைப் பார்த்தேன்.

சந்தேகமேயில்லை அது அவனேதான். அதிலிருந்த பெயர்களில் அவனது அவளுடையதும்தான். அந்தப் பெருஞ்சமரில் அவளும் ஆகுதியாகியிருந்தாள்.

இதுக்குப் பிறகு ஒவ்வொரு வருசமும் வருகிற அவனது நினைவு நாளில் தவறாமல் அவனிடம் சென்று அவனதும் அவளதும் கல்லறைக்கு மலர் வைத்து வணங்கிவிட்டு அறுதலாக அதிலிருந்து அவனுடன் கதைத்து விட்டுத்தான் வருவேன்.

ஏதோ நினைவு வந்தவனாக ஓடிச்சென்று எனது அலுமாரியைத் திறந்து அதை எடுத்தேன். அவனது அவள் தனது அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தி தன்கைப்பட எழுதி அவனுக்குக் கொடுத்த அவனது அனுமதியுடன் என்னால் பத்திரப்படுத்தப்பட்ட, இப்போது என்னால் பாதுகாக்கபடுகிற 'பொக்கற் கலண்டர்" அளவுள்ள அந்தப்படம் தான் அது.

காதலைவிட களத்தையே முதன்மையாகக் கொண்டு காவியமாகிப்போன, களத்திலேயே இணைந்து களத்திலேயே காவியமாகிப்போன அந்த விடுதலைப் பறவைகள் நினைவாக என்னிடம் எஞ்சி இருப்பது இந்தப்படம் ஒன்றுதான். இதை தான் கவனமாகப் பாதுகாக்கவேண்டும். மனதுக்குள் எண்ணிக் கொண்ட நான் அவனிடம் செல்வதற்கு புறப்பட்டேன்.

# அலை கடல் மடி தடவி



அலை கடல் மடி தடவி
கரையோரம்
விழிபடும் வானம் வரை.

பிஞ்சுக் கால்கள் மணலில்
புதைந்து
சுவடுகள் பிறக்கும்
அதை கொஞ்சி அலை தாவி
மகிழும்.

நிழல் படிய எதிர்கால
கனவுகளை
சுமந்த இதயம்
கனக்கும்.

பால் சுரக்கும் தாயின்
முலையில் முகம் புதைத்து
முல்லை சிரிப்புதிர்க்கும்
அன்பு மழலை.

நினைவுப் பெருமூச்சின்
வெப்பக் கனவிலே-அவள்
வேதனை முகம் சிவக்கும்.

சுரக்கும் பால் சுவைக்க
பெற்ற மழையை
அலை கடலில் ஓரம்
தேடி....தேடி
அன்னை மனம் தவிக்கும்.

முகாமில் அழும் குரல்
காதில் கேட்கும்
போதில் தாயிழந்த
மழலை-பசிதீர்த்து
கண்ணீர்
முத்துக்கள்
நிலத்தில்
ஆனந்த மாலை
தொடுக்கும்.

வெம்பி அழும் குரல்
ஓய்ந்து
அமைதியில் துயில்
பிறக்கும்
அழகில் மனம்
பறிகொடுக்கும்.

ரமணன்

# கத்திக்கொண்டிருக்கும் பூனை



நடுச்சாமத்தில்
திடுக்கிட்டு நான் விழித்தேன்
என்னைத் தட்டி எழுப்பிய திமிரோடு
உச்ச ஸ்தாயியில் கத்திக்கொண்டிருந்தது பூனை.

பசியாலோ குட்டி ஈன்றதாலோ
"இருக்கப்படாத வியாதியாலோ" அது
கத்திக் கொண்டிருக்கலாம்.

படுத்திருந்தபடியே "டீக் டீக்" என்று
கலைத்துப் பார்த்தேன்
ஆத்திரம் தாங்காமல்
தலையணையைத் தூக்கி
அதன்மேல் எறிந்தேன்-
கொஞ்சம் அதிகமாய்க் கத்திவிட்டு
கொஞ்சத் தூரம் ஓடிவிட்டு
மீண்டும் வந்து கத்திக்கொண்டிருந்தது.

செல்லடியே தாலாட்டாய் மாற்றம் கண்ட
தமிழீழப் புத்திரனல்லவா நான்!
சிறிது நேரத்தில் தூங்கிப் போனேன்-

காலையில் தூக்கம் விட்டெழுந்தேன்
இப்போதும் பூனை கத்திக்கொண்டிருக்கிறது.

த. அஜந்தகுமார்.

## இலக்கியப்பகிர்வு

# புலரி



ஈழத்து சஞ்சிகை வெளிப்பாடுகளில் புதிய பிரசவமாய் புலரி பிரவேசிக்கின்றது. இலக்கியம் கற்றதனால் உண்டான அகத்தூண்டல் படிப்பார்வம், இன்றைய கல்வி உலகின் வரையறைப் பாங்கான தேடலுக்கு அப்பால் விரிந்த வாசிப்பார்வத்தைத் தூண்டும் உந்தல் இச் சஞ்சிகை வெளிப்பாட்டிற்கு பிரதான ஊக்கிகளெனக் குறிப்பிடலாம்.

என்று தொடங்கும் ஆசிரியர் கருத்துடன் "புலரி" என்னும் கலை இலக்கிய சமூக அறிவியல் ஏடு வெளிவந்துள்ளது. ஐப்பசி- மார்கழி 2004 காலப்பகுதிக்குரியதாக வந்த இந்த இதழின் வெளியீட்டுக் களம், யாழ்ப்பாணம் - சித்தங்கேணி ஆகும். குகபரன் அவர்கள் ஆசிரியர் இராஜகோபால் அவர்கள் இணையாசிரியர்.

ஈழத்து இலக்கிய உலகிற்கு புலரி ஒரு புதுவரவுதான் என்றாலும், பத்தோடு பதினொன்றாகவே சக்கடத்தார் ஏறிய குதிரையில் ஏறியது போல அமைந்துவிடக்கூடாது என்பதுவே இலக்கிய ஆர்வலர்களின் கருத்தாக முடியும்.

எங்கள் சிற்றிலக்கிய வரலாறு எல்லோருக்கும் தெரிந்ததுதான். அதனை புட்டுக்காட்டவேண்டிய அவசியம் இல்லை. புதிது புதிதாக இலக்கியக் கடலினுள் இறங்கும் இலக்கிய ஆர்வலர்கள் இந்த சிற்றேடு வெளியீடுகளில் சுனாமி அலைகளால் அள்ளப்படுவது போல அள்ளப்படுவது வழக்கம். எனினும் உண்மையில் எத்தனை இதழ்கள் வெற்றிகரமாக வெளியீட்டினைத் தொடருகின்றன என்பது இப்போதைக்கு கவனத்தில் எடுக்கவேண்டிய சங்கதியல்ல.

எனினும் "புலரி" போன்ற வெளியீடுகள் ஏனையோர் எத்தகைய விடயங்களில் கைகளைச் சுட்டுக் கொண்டார்கள் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் அத்தகைய சுட்டுக்கொள்ளும் செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அதனூடாகத்தான் தங்கள் தங்கள் முயற்சிகளை மேலும் முன்னெடுத்துக்கொள்ளவும் முடியும்.

"புலரி" போன்ற சஞ்சிகைகளை வெளியிடும் இலக்கிய ஆர்வலர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையேல் தோற்றம்-மறைவுக் குறிப்புக்களுடன் மாத்திரம் எல்லாம் முடிந்துவிடும்.

உண்மையில் "புலரி" போன்ற சஞ்சிகையில் இது போன்ற முடிவுகளுக்கு விரும்பமாட்டார்கள். எனவே ஏனையோரின் முன் உதாரணங்களை, அனுபவங்களை, அவர்களின் தவறுகளை, சரிகளை கவனத்தில் எடுக்க வேண்டும்.

ஐம்பது பக்கங்களுடன் புலர்ந்துள்ள புலரியின் விடயங்கள் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்ட விடயங்களாகவே உள்ளன. இவ்வாறான சஞ்சிகைகளில் குறைந்தது காத்திரமான ஆழமான விடயங்கள் ஒன்றிரண்டாவது இருத்தல் வேண்டும்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் செம்பியன் செல்வன் அவர்களுடனான நேர்காணல் கூட மேம்போக்காகவே உள்ளது. "செம்பியன் செல்வன்" போன்ற மூத்தவர்களின் அனுபவங்கள் என்பது இளைய தலைமுறையினர் பலருக்கு பயன் தரக்கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். அதற்கேற்ற விதத்தில் கேள்விகள் தொகுக்கப்பட்டிருந்தால் நன்றாக அமைந்திருக்கும்.

கலாநிதி ம.இரகுநாதன் அவர்களின் "புலம் பெயர் கதைகளில் கலப்பு மணங்கள்" என்ற கட்டுரை ஆழமான ஆய்வுக்குரிய ஒரு விடயமாகும்.

சக்கரவர்த்தியின் 'மனசு' என்ற சிறுகதை தொடர்பாகக் கட்டுரையாளர் எடுத்துக்காட்டுவது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயமாகும்.

சக்கரவர்த்தி எடுத்துக் காட்டும் யாழ்ப்பாணத்து வாலிபனின் "மனசு" போன்றதே. அதனைப் படைக்கும் பல புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் சக்கரவர்த்தி போன்ற படைபாளிகளின் மனசுகளும் ஆகும்.

"பயித்தியக்காரத்தனமான அந்தப் பம்மாத்துக்கல்ச்சர் நம்மளோட கல்ச்சர். இந்த தமிழிச்சிகள் தலையைக் குனியிறதும் ஓடுறதும் வெக்கப் படுகிறதும் லோஷ்டும் போகக்கூட அவையளுக்கு ஆம்புள வேணும். ச்சீ சுத்த பம்மாத்து கார்பேழ்! சோஷ்ஷாய் வாழப்பழக வேணும். ஒண்டா இருந்து தண்ணியடிக்க வேணும் ஒரு சிகரட்டு புருஷனும பொஞ்சாதியும் பாதி பாதி யாபத்த வேணும். பார்ட்டியில் கட்டிப் பிடிச்சு டான்ஸ் ஆட வேணும்."

என்று எப்படி முதலில் சக்கரவர்த்தியின் "மனசு" நாயகன் சொல்லுகின்றேனோ- அவ்விதமே பின்னர் மனம் மாறி-

"எது வாழ்க்கை? எங்கையோ குடிச்சுப்போட்டு விடியச் சாமம் ரெண்டு மணிக்கு எவனோ ஒரு ஆம்புளையோட வாற பொஞ்சாதியோட எப்படி வாழமுடியும்."

"ஒரு புருஷன் குடிச்சால் குடிக்காத எண்டு பொஞ்சாதி சொல்ல வேணும். பறிச்சுக் குடிக்கிற பொம்பிளையோடை எப்படி வாழுறது? அசிங்கமான பழக்க வழக்கமுள்ள பொஞ்சாதியோட குடும்பம் நடத்திறது எவ்வளவு கொடுமை எண்டு எனக்கு இப்ப்தான் தெரியுது."

என்று சொல்கிறான்.

ஆனால், இந்த உண்மையை தறிகெட்டு வாழ்ந்த பின்னரா உணரமுடியும். கண் முன்னே விரிந்து கிடக்கும் புலம் பெயர் நாடுகளில் மக்களின் அனுபவங்களில் பெற்றுக்கொள்ள முடியாதா? அல்லது அங்கு போக முன்னர் கூட இவர்களுக்குத் தெரியாதா?

வெளிப்படையாகச் சொல்வதானால் இந்த இரண்டு மன உணர்வுகளுமே அதாவது மனசு கதாநாயகனின் முன்னைய பின்னைய மனசு இரண்டுமே வெறும் சந்தர்ப்பவாத கருத்துக்கள்தான்.

இதை ஏன் இங்கு குறிப்பிடவேண்டி உள்ளது என்பதைப் பார்ப்போம். இதே பாணியைத்தான் சக்கரவர்த்தியைப் போன்ற புலம் பெயர் படைப்பாளிகள் எங்கள் போராட்டம் தொடர்பான படைப்புக்களில் காட்டமுனைகிறார்கள்.

தங்களை வித்தியாசமானவர்களாகக் காட்ட முனையும் இவர்களின் "மனசு" எப்போது மாறுமோ?

'பன்னாடைக்' கழிவுகளில் பகல் வேஷத் திருக்கூத்துக்களும் 'பாரதி' எனும் உயர்பாதுகாப்பரங்கமும் என்னும் ஜெ.சி.ஜெயசீலனின் கவிதையில்.

"வாழுங்கவி தந்த வள்ளல் உன்மனதைத் தேற்றிக் கொள், நாம் திருந்தோம் இலை. மாற்றத்தை விரும்பாமரம்"

மேற்குறித்த இறுதி வரிகள் கவனத்திற்குரியவை.

"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட" என்னும் பிரபாகரன் எழுதிய கதை புலரியில் இடம் பெற்றுள்ளது.

"நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு பிள்ளைக்குப் பால் கொடுக்கும் தாயைப் பார்த்த படி நிற்கும் அந்த ஜன்மங்களுக்கு கிடைக்கும் பாடம் என்ன? அவர்கள் அப்படியே இன்னுமொரு தாயைப் பார்க்கப் போகவேண்டியதுதானா?

"கலை" என்ற கட்டுரையும், உத்திகளின் மூலமாக ஒற்றுமையுறும் இலக்கியங்கள் என்னும் கட்டுரையும்




இன்னும் விபரமாக எழுதப்படவேண்டியவை. இவை விபரித்து எழுதப்பட்டால்தான் வாசிப்பவர்களுக்கு ஏதாவது பிரயோசனத்தை தரமுடியும்.

"சித்த மருத்துவத்தில் கிராம்பு" உலங்குவானூர்தியின் பரப்புச் செயற்பாடு" போன்ற அறிவியல் கட்டுரைகளும் "காத்திரமானதொரு வருகை" என்ற மதிப்பீட்டுக் கட்டுரையும் நீலவாணனின் "உறவு" தொடர்பாக மதிப்பீடும் புலரியில் உள்ளன.

மஹாகவி நீலவாணன் முதலிய தலைமுறையினரில் கவிதைகள் எளிமையானவை. எல்லோராலும் விரும்பிப் படித்து எளிதில் பொருள் விளங்கிக் கொள்ளத்தக்கவை. சொற்சிலம்பம், வார்த்தை ஜாலம் இருண்மை எதுவுமற்றவை. இப்பண்புகளே அவர்களை முந்தைய தலைமுறைக்கவிஞர்களில நின்றும் பிரித்துக்காட்டியது."

என விரிவுரையாளர் ஈ.குமரன் கூறுவதை நமது புதிய கவிஞர்கள் கவனிக்க வேண்டும்.

மொத்தத்தில் புலரியின் 34 ஆம் பக்கத்தில் "மேலே சொல்லுங்கள்" என்ற தலைப்பில் "கால்வின் கூலிட்ஜ்" அவர்களின் வரிகள் புலரிக்கும் எங்களுக்கும் மிகப் பொருத்தமானதும் தேவையானதும்.

"சளைக்காத மனம்!
சளைக்காத மனத்தைப் போல
வேறு சக்தியில்லை திறமை மட்டும்
போதாது
திறமையிருந்தும் தோற்றுப்போனவர்
கள் ஏராளம்.
புத்திசாலித்தனம் மட்டும் போதாது
"பலன் காணாத மேதை" என்பது
பழமொழி.
படிப்பு மட்டும் போதாது படித்தும்
பாதை தவறியவர்களால்
இவ்வுலகம் நிரம்பியிருக்கிறது.
சளைக்காத மனமும் உறுதியும்தான்
வெற்றியைத் தேடித்தரும் சாதனங்கள்".

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## வீடு

# திருமணங்கள்...?



இன்றைய உலகம் சாதி மத பேதத்தில் மூழ்கிக் கிடக்கிறது. என்னதான் இருந்தாலும் இரு மனங்கள் இணைந்துகொள்வது தானே திருமணம். இதனை ஏன் சிலர் பிரித்து வைக்கிறார்கள்.

இதனால் இவர்களுக்கு என்ன இலாபம். தமது கௌரவத்தையும் சுயநலத்தையும் விட்டு மனங்களுக்கு முதலிடத்தை கொடுப்போம். விரும்பாத இருமணங்களை ஏன் இணைக்க முயல்கிறார்கள். சந்தோசமான இல்லறத்தில் சங்கடங்கள் நிறைய காரணமாகாது வாழவேண்டும். பதவி, பணம், அழகு, பார்த்து வருவதில்லை காதல் மனம் விரும்பாத ஆணையோ பெண்ணையோ கட்டி வைத்து அவர்களின் வளமான வாழ்க்கைக்கு பங்கம் விளைவிக்காதீர்கள். நம் பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்து மணம் முடித்துக் கொடுத்து அவர்களை சிறப்பாக வாழச் செய்யவேண்டும் என்பதே பெற்றோர்களின் கனவாகும். அதிலும் தம் பிள்ளைகள் படித்து நல்ல உயர் தொழில் செய்பவர்களாயின் வரதட்சணையோடு திருமணம் செய்ய முற்படுகின்றார்கள்.

வசதியுள்ளவர்கள் - இல்லாதவர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் ஏதோ கல்யாணங்கள் நடந்து முடிகின்றன. வரதட்சணை கொடுமையால் வாழ்க்கை இன்றி தவிக்கும் கன்னி பெண்களின் கண்ணீர் கதைகளும் இல்லாமல் இல்லை. ஏற்ற இறக்கம் மறந்து காதலிக்கும் உள்ளங்களையாவது ஒன்றுசேர விடுங்களேன் என்றால் அதுவும் இல்லை. இதுவெல்லாம் நம் சமுதாயத்தின் மத்தியில் சர்வ சாதாரணமாகிவிட்டது. பெண்பிள்ளைகளை பெற்ற பெற்றோர்கள் தலையில் ஏதோ பெரிய சுமையை வைத்துக்கொண்டிருப்பது போல அவர்களை கரையேற்றும் வரை கவலையோடு உலா வருகின்றனர். மாப்பிளை கிடைத்துவிட்டால் போதும் கண்ணை மூடிக் கொண்டு அவர் எப்படிப் பட் ட வா அவரின் பின்னணி என்ன? என்பதை கூட ஆராயாமல் சடுதியாக பெண்ணை மணம்முடித்துக் கொடுத்துவிடுகின்றனர்.

வரையறை வழிமுறை என்று பழமை தொட்டு இருந்து வந்திருந்தாலும் கூட கல்யாண விசயத்தில் நூறு முறை இது விடயமாக ஆராய்ச்சி செய்தே முடிவெடுப்பது நன்மை தரும். திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது என கூறும் நாம் அப்படியான திருமணம் கடைசி வரை நிலைத்திருக்க வேண்டாமா? மனமொத்த குடும்பமாக அதாவது தம்பதிகளாக இறுதி வரை வாழ்வது தான் இதன் பெருமை. பிள்ளைகள் விசயத்தில் அதுவும் கல்யாண பந்தத்தில் இணைத்து வைப்பதற்கு முன் பொறுமையாக உட்கார்ந்து ஒன்றுக்கு பல முறை கட்டாயமாக ஆராயுங்கள். நல்ல முடிவு கிடைக்கும். இன்றைய நவீன யுகத்தில் காதல் திருமணங்கள் வரவேற்புக்குரியவை என்று நாம் கருத வேண்டும். ஒருவரை புரிந்து வாழ்க்கையை அமைத்துக்கொள்வது சரியான ஓர் செயலாகும்.

நாம் கழுத்தைப் பிடித்து கண்ணை மூடிக்கொண்டு முன் பின் அறியாதவர்களுக்கு தாரைவார்ப்பதை விட ஒருவரையொருவர் விரும்பி செய்யும் காதல் திருமணத்தால் அடையும் சந்தோசமும் அத்தோடு பலமான அத்திவாரமுமாகும். காதல் திருமணத்தால் ஒற்றுமையும் வளமான வாழ்வும் இல்லற பந்தத்தில் பூரண திருப்தியும் மன நிறைவும் உலா வரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பணம், அந்தஸ்து, நிற, குல, பதவி பேதம் என்று உறவுகளை இழந்து தவறான முடிவுகளுக்கு உட்படுத்துவதை விட பாசம், அன்பு கொண்டவர்களை இணைத்து வைப்பதே நன்மை தரும். விரும்பாத உள்ளங்களை கட்டாயத்தின் பேரில் இணைக்க முயலாதீர்கள். பத்திரிகை ஊடகங்கள் வாயிலாகவும் அதிக விடயங்களை படித்தும் பார்த்தும் கேட்டும் அறிந்துகொள்கிறோம். கணவன் மாமியார் போன்றோரின் வற்புறுத்தல் மற்றது வரதட்சணைக் கொடுமையால் தற்கொலை, காதல் தோல்வியால் இளம் காதலர்கள் தற்கொலை இப்படியான விடயங்களை தினந்தோறும் அறிவது கவலைக்குரியது. இவற்றை அறிந்தும் பிள்ளைகள் விசயத்தில் வரட்டுக் கௌரவம் பார்த்துக்கொண்டிருப்பது அர்த்தமற்ற செயலாகும்.

இந்த விசயத்தில் பெற்றோர்களே நீங்கள் விட்டுக்கொடுப்பவர்களாக இருந்துவிட்டால் உங்களின் எதிர்கால சந்ததியினர் வாழ்க்கை பிரகாசமாக ஒளிவிட வாய்ப்பாகும் அல்லவா?

காதல் கல்யாணம் இல்லாவிடினும் கூட மனம் விரும்பி ஏற்றுக்கொள்ளும் வாழ்க்கைக்கு வழி அமைத்துக்கொடுக்கலாம் அல்லவா? வலுக்கட்டாயமாக மணம் முடித்துக்கொடுப்பதை தவிர்ப்பது சாலச்சிறந்தது. பிள்ளைகளின் சம்மதத்துடன் மணம் முடித்து வைப்பதே அவர்களின் வளமான வாழ்வுக்கு வழி சமைக்கும் என்பதை பெற்றோரே புரிந்து கொள்ளுங்கள். வலுக்கட்டாயமாக மணம் முடித்துக்கொடுக்கும் பழக்கத்தை தவிர்க்கவேண்டும். விரும்பாத வாழ்க்கையை கட்டாயத்தின் பேரில் செய்துவைக்க வேண்டாம்.

**இ.கலைரூபன்**

## இரகசியங்களைக் காப்பாற்றுங்கள்

எந்தவொரு ஆணோ பெண்ணோ தங்களின் மனச்சுமை தீருவதற்காக தம்முடைய பிரச்சினையை பழகும் நண்பனோ அல்லது நண்பிக்கோ மனம் விட்டு கூறிவிடுகின்றனர். அப்படிச் சொல்லும்போது அவர்களின் மனச்சுமை தீருவது என்பது உண்மைதான். நாம் எம் இரகசியங்களைச் சொல்லும்போது அதை கேட்கும் நபர் தன்னுடைய மனதில் வைத்திருப்பாரா என்பதுதான் கேள்விக்குறி. உண்மையில் எம்மோடு நட்போடு உறவாடும் நபர் தாம் மனச்சுமை தீருவதற்காக அவரிடம் கொட்டிவிட்ட விடயத்தை அவர் அப்படியே தன் மனதைவிட்டு வெளியிடாமல் பாதுகாக்க வேண்டும். அப்படி நட்ப்பார் என்று நாம் நம்பித்தானே எங்கள் சுமைகளை அவரிடம் இறக்கி வைக்கிறோம். எம்மோடு நன்றாக உறவாடி விட்டு நம்பிக்கைக்கு துரோகம் செய்வார் ஆயின் அவரை நம்பி நடத்தல் உங்களுக்கு ஆபத்து. அப்படிப்பட்ட நபரிடம் மன ஆறுதலடைவதில் பார்க்க நாம் மனச்சுமைகளை எழுதித் தீர்த்து ஆறுதலடைதல் மேல். பேனாவை ஒரு நண்பன் ஆக்கிவிட்டால் எம் இரகசியங்கள் பெரியதொரு சுமை இல்லாமல் சுலபமாகிவிடும்.

எம் பிரச்சினைகள் முடிந்தவரை எம்மால் தீர்வு காணப்படவேண்டும். மன ஆறுதல் என்ற ரீதியில் கண்டோரிடமும் சொல்லாதீர்கள். இதனால் எம்முடைய பிரச்சினைகள் எமக்குத் தெரியாமலே ஊர் முழுக்க பரவத்தொடங்கி விடும். எதைச் சொல்ல வேண்டும். எதைச் சொல்லக்கூடாது என்று தெரிந்து நாம் நடக்க வேண்டும். நாம் பொய்சொல்லமாட்டோம். உண்மை தான்சொல்வோம் என்று எண்ணி கண்டதையும் கண்டவரிடம் உளறி விடாதீர்கள் அவர்கள் இனிக்க இனிக்க உங்கள் கதைகளை வேண்டி ஊர் முழுக்க பரப்புவார்கள்.

இன்றைய நாகரிக உலகில் எல்லோருடைய பிரச்சினைகளும் வேறு பாடு கொண்டதாகவே இருக்கின்றது. இதனை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். அடுத்தவர் பிரச்சினைகளை தேவையில்லாமல் அலசி ஆராய்ந்து பார்த்து விற்க வெண்டே சில ஆண்களும் பெண்களும் இருக்கின்றனர். இவர்கள் உருப்படியாக பிரச்சினைக்குரிய நபருக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை உபத்திரவம் செய்யாமல் இருக்கலாம் அல்லவா.

மனிதனாகப் பிறந்தவர்கள் யாருக்குத்தான் மனதில் சுமைகள் இல்லை. சுமைகள் என்பது அவரவர் மனங்களைப்பெறுத்து வேறுபடுகின்றது. சில பேர் சின்ன கஷ்டம் வந்தாலும் தாங்க மாட்டார்கள். தமக்கு மட்டும் தான் இப்படி நடக்கிறது என்று அலட்டி தம் சுமைகளை அடுத்தவரிடம் கொட்டிவிடுகின்றனர். இப்படியானவர்களுக்கு சுமைகள் குறைவதற்கு சந்தர்ப்பமில்லை.மலையே வந்தாலும் தலையே சும என்பது போல் வாழ்வில் எத்தனை இடர் வந்த போதும் கண்டவரிடமும் கொட்டித் தீர்க்காமல் அதற்கான தீர்வை எப்படிக் காணமுடியும் என எண்ணம் கொண்டோருக்கு சுமைகள் யாவும் சுலபமாகி இலகுவில் தீர்வுகாணமுடிகின்றது. எல்லோரிடமும் எம் பிரச்சினைகளைச் சொல்வதால் என்ன பயன். நாம் நம்பிக்கைக் குரியவர்களாக நடப்போம். ஆனால் நம்பி நடந்தல் கூடாது எல்லாவற்றிற்கும் எம் மனமே காரணம். மனதை ஒருநிலைப்படுத்துங்கள் ஒழுங்கான வாழ்வு உங்களை நாடி வரும்.

**சு.சிவாஜினி**

## முக்கூட்டுக்கூழ்

தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| குரக்கன் | -1/4 கிலோ |
| பொட்டுக்கடலை | -1/4 கிலோ |
| கச்சான் பருப்பு | -1/4 கிலோ |
| ஏலக்காய் தூள் | -1 தே.க |
| சீனி | -6 தேக்கரண்டி |
| தண்ணீர் | -5 டம்ளர் |
| தேங்காய்ப்பால் | -5 டம்ளர் |
| உப்பு | -தேவையான அளவு |




செய்முறை:-

குரக்கன், கச்சான், கடலை என்பவற்றைத் தனித்தனியாக துப்புர வாக்கி எடுக்கவும். கச்சான் பருப்பு, கடலை என்பவற்றை தனித்தனியாக வறுத்தெடுத்து குரக்கனோடு திரித்துக்கொள்க. இத் திரித்த மாவில் 1டம்ளர்மாவை எடுத்து தாச்சியில் இட்டு 6மே.க சீனியும் 5டம்ளர் தண்ணியும் வட்டு கரைத்து அடுப்பில வைச்சு காச்சவும். கலவை தடிக்கத்தொடங்கியதும் உப்பு ஏலக்காய்த்தூள் என்பன கலந்து இறக்கி குடியுங்கோ சுவையாக இருக்கும்.

## முதற்படி

எப்போதுமே
ஆண்களிடம் தோற்றுப் போவதே
பெண்களுக்கு
வழக்கமாகிவிட்டது.

எங்கள் விலைகளை
நிர்ணயிக்க வேண்டிய நாங்களே
விலை கொடுத்து
போட்டியில் வாங்கி
நாறிப் போயிருக்கிறோம்
அடிமை போல!

அந்த நாளில்
மானிடப் படைப்பின் போது
ஆதாமிடம் ஏவாள்
தோற்றுப் போகவில்லை.
அப்புறம் எப்படி வந்தது
இந்த ஏற்றத் தாழ்வு?
சமத்துவமாயிருந்து
நிமிர்ந்து வாழ்ந்த நிலை
எப்போது சரிந்து போனது?

ஒரு காலத்தில்
ஓங்கியிருந்த பெண்
தலைமைத்துவம்
பறிபட்டுப் போனது எவ்வாறு?
எம் ஆணி வேர்களை
ஆண்களால்
எப்படி அசைக்க முடிந்தது?

ஒருவர் தேவையிலிருந்து மற்றவர்
தேவையைப் பிரித்து பார்க்க
முடியாத பாலுறவின்
பங்காளிக்கிடையே
தனி ஒருவர் மட்டும்
மேன்மையுறுதல் எவ்வாறு தகும்?

இரவில் எமக்கு
விலை கொடுக்கும் இவர்களுக்கு
பகலிலே
ஏன் விலை கொடுக்கிறீர்கள்?
வேண்டவே வேண்டாம்
ஏட்டிக்குப் போட்டியாய்
சீதனம் கொடுத்தெடுப்பதை
முதலில் நிறுத்துங்கள்
பெண் சமமாய் மதிக்கப்பட
முதற்படியே அது தான்.

**ச.முருகானந்தன்**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்–35**

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# இளைய நாதம்



சிறி.கோபிகா

# எங்கள் ஓநாய்

ஓநாய் பற்றி நீங்கள் பல கதைகள் மூலம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதாவது வீட்டில் உங்கள் பாட்டி ஓநாய் நரி பற்றி நிறையக் கதைகள் சொல்லியிருப்பா. எனவே நாங்கள் இன்று ஓநாய் பற்றி சற்றுப்பார்ப்போம். அதாவது ஓநாயின் தன்மை அது எங்கு எல்லாம் வாழ்கிறது. எதை எதை எல்லாம் சாப்பிடுகின்றது. என்பதை பார்ப்போம்.

காடுகளில் வாழும் விலங்குகளில் ஓநாயும் ஒன்று. இது நாய் இனத்தைச் சேர்ந்த விலங்கினம். குட்டி போட்டு பால் கொடுக்கும் தன்மை கொண்டது. இதன் கால்கள் நீளமானவையாகக் காணப்படுவதோடு, பாதங்கள் உறுதியானவையாக இருக்கும். அத்தோடு மயிர் மூடியிருக்கும். ஓநாயின் முன்னங் காலில் ஐந்து விரல்களும் பின்னங்காலில் நான்கு விரல்களும் காணப்படும். உடலிலும் வாயிலும் மயிர் அடர்த்தியாக



இருக்கும். இது இயற்கையாகவே பயந்த சுபாவம் கொண்ட மிருகம். மரப்பொந்துகளிலும் பாறை இடைவெளிகளிலும், பெரிய குழிகளிலும் தனது குடியிருப்பை அமைத்துக்கொள்ளும். மேலும் இதன் உணவாக மாமிசத்தையே உண்ணும். இறைச்சியை கிழித்து உண்பதற்கு ஏற்றவாறு இதன் பற்கள் மிகவும் கூர்மையாகவும் பலமாகவும் காணப்படும். மான், முயல், ஆடு, மாடு ஆகியவை இதன் முக்கிய உணவுகள். சில நேரம் மாமிச உணவு கிடைக்காத போது ஓநாய் கிழங்குகளையும். தோண்டி உண்பதாகக் கூறுகின்றார்கள். இவ் ஓநாய் ஆசியா, ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகிய கண்டங்களில் வாழ்கின்றன. இந்தியா, இலங்கையில் இது காணப்படுகின்றன. ரஷ்யாவில்தான் இவை அதிகமாக வாழ்கின்றன. இவ்வாறான இந்த ஓநாய்கள் 12முதல்15 ஆண்டுகள் மாத்திரமே உயிர் வாழும்.

## நகைச்சுவை



**ஒருவர்:-** ஐயா! நான் முட்டை வியாபாரம் செய்ய இருக்கேன். கடன் தருவீங்களா!

**மற்றவர்:-** முன்னைய அனுபவம ஏதாவது இருக்கா?

**ஒருவர்:-** இருக்குது ஐயா, முந்தி பள்ளிக்கூடத்திலே படிக்கும் போது எல்லாப் பாடத்திலும் 'முட்டை' வாங்கியிருக்கேன்.

சு.கௌரீஷன்

## தேசிய விளையாட்டுக்கள்

| | | |
|---|---|---|
| 01. | இந்தியா | -ஹொக்கி, கபடி |
| 02. | இலங்கை | -எல்லை |
| 03. | கனடா | -பனிஹொக்கி |
| 04. | ஸ்பெயின் | -ஜல்லிக்கட்டு |
| 05. | ஜப்பான் | -கராத்தே, ஜீடோ |
| 06. | ஸ்கொட்லாந்து | -கால்பந்து |
| 07. | அவுஸ்திரேலியா | -கிரிக்கெட் |
| 08. | பாகிஸ்தான் | -ஹொக்கி |
| 09. | துருக்கி | -மல்யுத்தம் |
| 10. | அமரிக்கஐக்கிய நாடுகள் | -பேஸ்போல் |

கோ.ரஜீனி தரம்-09

## சொற்சிலம்பம் - 74

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நே | ப் | ம | தி | ல் | ட்ா | தீ |
| டி | கு | நீ | பா | ம | சீ | ட் |
| ன | யா | ச் | சோ | ன் | ணி | கா |
| லை | அ | பா | ய | சு | ங் | கொ |
| மே | ட் | தா | ஷ் | ரா | ம | ந |
| மு | ம் | கா | ச | ய் | யெ | ஸ் |
| சி | லை | ய் | ஓ | கி | ள | க |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -72 இன் விடைகள்

01. கொக்கட்டிச் சோலை

02. சோமாலியா

## சொற்சிலம்பம் - 72 இன் பரிசுக்குரியவர்

செ.நிசாந், தரம் 4B, 39, செல்வபுரம், மு/பாண்டியன் குளம்-ம.வி.

## சொற்சிலம்பம் - 72 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. சி.கட்சன், புனித பூமி, முத்துஐயன்கட்டு.
02. ஆ.தர்சினி, கிழக்குத் தெரு வேம்படி, வல்வெட்டித்துறை.
03. அ.ஜக்ஷன், ரகுபதி திட்டம் அருகாமை, உடையார்கட்டு.
04. வே.சீலன், 143C, கந்தபுரம், கிளிநொச்சி.
05. ந.டயாழினி, யா/கொடிகாமம், திருநாவுக்கரசு ம.வி.
06. தே.தர்ஷிகா, 2ஆம் கட்டை, பரந்தன்.
07. ஐ.சிவலோகன், மாயனூர், வட்டக்கச்சி.
08. ஈழமாறன், தமிழீழம்.

01. உலகில் அகலமான நதியின் பெயர்?

01) ........................................

02. அண்மையில் மன்னரால் ஆட்சி கவிழ்க்கப்பட்ட நாடு?

01) ........................................

சொற்சிலம்பம்-74
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ........................................

முகவரி :- ........................................

## ஆமையாரின் இனிப்புச் சுவை

பகுதி-02



குமுதினியின் கதை.

குமுதினியில் மக்கள் சிறிலங்கா படையினரால் அழிக்கப்பட்டதும் நடந்தது. குமுதினியால் தமிழ்மக்கள் அழிக்கப்பட்டதும் நடந்தது. குமுதினி நெடுந்தீவுக்கு பயணிகளை ஏற்றிச்செல்லும் படகு. 1960களிலிருந்து இன்றுவரை நெடுந்தீவு மக்களை வெளியுலகத்தொடர்பில் வைத்திருக்கும் படகு. நெடுந்தீவு மக்களை வெளியுலகத்தோடு தொடர்புற வைத்திருக்கும் அது அம்மக்களின் உயிராகிவிட்டது.அது ஒரு நினைவுச்சின்னம். ஒரு போர் நினைவுச்சின்னமாகினும் சரி அந்த மக்களின் வாழ்வு நினைவுச்சின்னமாகினும் சரி எந்த வகையிலும் அந்த சடப்பொருள் வரலாறாகிவிட்ட ஒன்று. இப்போது நயினாதீவுக்கு செல்வதற்காக குறிகாட்டுவான் இறங்குதுறைக்குள் சிறிலங்கா கடற்படையினர் மக்களை கதவைத்திறந்து அனுமதிக்கின்றனர். அப்பொழுதுதான் நான் வரலாறில் முதல் தடவையாக குமுதினி என் கண்களில் படுகின்றது. உண்மையில் குமுதினியில் மக்கள் உயிர்கள் சிறிலங்கா கடற்படையினரால் காவுகொள்ளப்பட்ட




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

வேளையில் குமுதினியின் தோற்றம் தெரியாவிட்டாலும் அந்த முதல் கடல் படுகொலையால் குமுதினி எல்லா மக்களின் மனங்களில் நிலைத்துவிட்டது. தோன்றாப்பொருளாக நிலைத்துவிட்ட குமுதினியின் நேர்த்தோற்றம் அன்றுதான் தெரிந்தது. அவ்வேளை அதன் தொற்றம் ஒரு சடப்பொருளாய் வெறும் படகாய் இருக்கவில்லை. கொல்லப்பட்ட எமது மக்களின் உயிராகவே தெரிந்தது. கடலம்மா கடலம்மா குமுதினி ஏன் பிந்தி வந்தாள் எம் அவலங்களை சடலங்களாய் சுமந்து வந்தாள்.

என்று அன்று குமுதினியில் எம் மக்கள் கொல்லப்பட்டவேளையில் நிலாந்தன் எழுதி ஒரு இலக்கிய வரலாற்றுப்பதிவாகியும் விட்டது குமுதினி. குறிகாட்டுவான் இறங்குதுறையின் முழுநீளத்தையும் தாண்டி 60 அடி நீளத்தில் இறங்குதுறையில் குமுதினி கிடந்தது. அந்த குமுதினியின் அரசியல் வரலாறின் முதற்பகுதி 1960களில் இலங்கை பொது வேலைத் திணக்களத்தினால் நெடுந்தீவுக்கு போக்குவரவில் விடப்பட்ட படகு குமுதினி. திருகோணமலை டொக்யாட்டில் கட்டப்பட்டு ஜேர்மனியின் புக் எந்திரம் பூட்டப்பட்ட ஒரு குட்டிக்கப்பலின் பரிமாணத்தில் மரக்கலமாக குமுதினி உருவாகி தீவகத்தின் ஆழக்கடலில் தனித்து நின்ற நெடுந்தீவு மக்களின் வெளியுலகத்தரிசிப்புக்கு வந்தது.குமுதினியுடன் காலத்துக்கு காலம் பல படகுகள் நெடுந்தீவுக்கான போக்குவரவில் ஈடுபட்டாலும் குமுதினிதான் தன் வாழ்வை உழைப்பை 40 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. அந்த குமுதினி1980களில் போர் முனைப்புற்ற காலத்தில் போராட்டப்பணிகளையும் ஒரு வகையில் ஆற்றியது. அதனால் குமுதினி மீது நயினாதீவு சிறிலங்கா கடற்படையினர் கண்வைக்கத்தொடங்கினர். நடுக்கடலில் வைத்து குமுதினி அடிக்கடி கடற்படையினரால் சோதனைக்குள்ளாக்கப்படத்தொடங்கியது. தீவுக்கடலில் குமுதினிக்கே இந்த விசேட கவனிப்பு: இதற்கு அடிப்படை காரணம் நெடுந்தீவு இந்திய கடல் எல்லைக்கு மிக அருகில் இருப்பதாகும். அத்துடன் நெடுந்தீவின் ஒரு கிராமசேவையாளர் பிரிவின் கீழ் உள்ள இந்திய கடற்கரைக்கு அண்மையாக உள்ள கச்சதீவும் ஒரு காரணமாகும். இதனால் குமுதினி கடற்படையின் விசேட கவனிப்புக்குள்ளானது. நடுக்கடல் சோதனையைத்தவிர நயினா தீவில் சிறிலங்கா கடற் படைத்தளத்துக்குக் கொண்டு சென்று அதிக சோதனைக்கு குமுதினி உள்ளாக்கப்பட்டு வந்தது. அதில் செல்லும் மக்கள் விசாரிக்கப்படுவது. தாக்கப்படுவது வழமை யானதாகியும் விட்டது.அன்றும் அப்படித்தான் பொழுது விடிந் தது.நெடுந்தீவின் மாவலித்துறை இறங்குதுறையில் குமுதினி காலை 7 மணிப் பயணத்துக்கு தயாராகியிருந்தது.

துருவன்




# பெருங்கற்கால பண்பாடு

பெருங்கற்கால பண்பாட்டின் பிரதான விடயங்களாக இறந்தோரை அடக்கம் செய்த ஈமச்சின்னங்கள், குடியிருப்புகள், குளங்கள், வயல்கள் என்பன உள்ளன.

பெருங்கற்காலத்தின் சிறப்பம்சங்கள் இந்த நான்கும் தான் ஈமச்சின்னங்களை அமைப்பதில் இவர்கள் அதி கவனம் செலுத்தினர். இவர்கள் இறந்தோரை புதைக்கையில் நிவேதனம் மற்றும் பொருட்களை மட்பாண்டங்களில் இட்டுப் புதைப்பர். சிறு சிறு கிராமங்களில் மக்கள் வாழ்ந்தனர். ஈமச்சின்னங்களை அமைப்தார்கள். உணவு உற்பத்திகளில் அதிக கவனம் செலுத்திய இவர்கள் ஈமச்சின்னங்களை பயிர் செய்யாத நிலங்களிலேயே அமைத்தனர்.

தென்னை, பனை வளங்களையும் இவர்கள் பேணினர். ஈமச்சின்னங்களில் இருந்த அம்புமுனைகள், ஈட்டிகள் வேட்டையாடுதலில் இவர்கள் ஈடுபட்டதை வெளிப்படுத்தியுள்ளது. பசு, ஆடு, எருது, எருமை, குதிரைகளை கால்நடைகளாக இவர்கள் வளர்த்துள்ளனர். கோழிகளையும் இவர்கள் வளர்த்துள்ளனர்.

பெருங்கற்கால பண்பாட்டை ஈமச்சின்னங்களில் இருந்து கிடைத்த பொருட்களே வெளிப்படுத்துகின்றன. தமிழகத்தின் ஆதிச்ச நல்லூரில் பாரிய அளவில் ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தாழிகளை மண்ணில் செய்து இறந்தோரை புதைப்பது இங்கு அநேகமாக நிகழ்ந்துள்ளது.

இதற்காக உயிருடன் இருக்கையிலேயே தாழிகள் செய்யப்பட்டதும் நிகழ்ந்துள்ளது. ஆதிச்ச நல்லூரில் பொறிக்கப்பட்டுள்ளன. மரம், மலை, சூரியன், சந்திரன் என்பனவும் இங்கு வழிபடப்பட்டுள்ளன. இரும்பு, செம்பு, பொன், வெள்ளி உலோக பயன்பாடும் இப்பண்பாட்டில் இருந்துள்ளது.

மட்பாண்ட உற்பத்தி இப்பண்பாட்டில் சிறப்புற்று விளங்கியுள்ளது. கறுப்பு, சிவப்பு நிறத்திலும், சிவப்பு நிறத்திலும், கறுப்பு நிறத்திலும் மிகத்தரமான மட்பாண்டங்களை இவர்கள் உற்பத்தி செய்துள்ளனர். சுடுவதறகு முன் இம் மட்பாண்டங்களில் கூரிய



பதில் பெருங்கற்களை இவர்கள் பயன்படுத்தினர். இதில் அதிக கவனத்தை இம்மக்கள் செலுத்தினர். ஆறுகளை மறித்து அணை அமைத்து இம்மக்கள் குளங்களை உருவாக்கினர். குழுக்குழுக்களாக மக்கள் வாழ்ந்தனர். குடியிருப்புகளில் வீடுகள் வசதியாக அமைக்கப்பட்டிருக்காதது ஒரு குறைபாடு. வீடுகள் மரங்களினாலே கட்டப்பட்டிருப்பதற்கான சான்றுகள் உள்ளன. கூரைகள் வைக்கோலால் வேயப்பட்டன. மந்தைகளும் இவர்களிடமிருந்தன. குளம் அமைத்தல், நீர்ப்பாசனக்கால்வாய்களை அமைத்தல் என இந்திய உபகண்டத்தின் தென் பகுதியல் நீர்ப்பாசனத்தை இவர்களே அமைத்தனர். ஈமச்சின்னங்களில் உழவுத் தொழிலுக்கான ஏரின் கொழுக்கல், மண்வெட்டிகள், நெல்லுமிகள் என்பவற்றை இவர்கள் புதைத் வெண்கலத்திலான சேவற்கொடி, வேல் என்பனவும் முத்தலை, ஒருதலைச் சின்னங்களும் கண்டெடுக்கப்பட்டன.



இது இங்கு வேல் வணக்கம் நடந்ததாக அறியப்படுகின்றது. சூல வழிபாடும் இங்கு காணப்பட்டுள்ளது. மட்பாண்டங்களிலும் இச்சின்னங்கள் ஆயுதத்தால் குறியீடுகள் இடப்பட்டுள்ளன. இவற்றை ஆங்கிலத்தில் 'சிராலி' என ஆய்வாளர்கள் பெயரிட்டனர்.

ஒருதலைச் சூலம், இருதலைச் சூலம், முத்தலைச் சூலம், நட்சத்திரம், அம்பு வில், படகு, தராசு, சக போன்ற குறியீடுகள் இம்மட்பாண்டங்களில் இடப்பட்டன. தவிர இனங்காணமுடியா குறியீடுகளும் இவற்றில் உள்ளன். இத்தகைய குறியீடுகள் சிந்துவெளி நாகரிக மட்பாண்டங்களிலும் உள்ளன.

ஈமச்சின்னங்களை அமைத்தது தவிர இறந்தோருக்காக நடுகல் அமைத்து வழிபடும் முறையும் இங்கு இருந்துள்ளது. சங்க இலக்கியங்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பெருங்கற்கால பண்பாட்டு மக்கள் திராவிடர்களே.

குரலோன்

# எரிகற்கள்

1908 யூன் 30 ஆம் திகதி அதிகாலை ரஷ்யாவில் மத்திய சைபீரியாவில் வானத்தில் மிகப் பெரிய தீக்கோளம் மிக வேகமாக வருவதனை அப்பிரதேச மக்கள் பார்த்தனர்.

அது சற்று நேரத்தில் நிலத்தில் விழுந்து வெடித்தபோது நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர் வரை சத்தம் கேட்டதோடு 2000 கிலோ மீற்றர் சதுர பரப்பளவுக்குள் இருந்த தாவரங்கள் அனைத்தும் எரிந்து நாசமாயின. இந்த அதிர்ச்சி நிகழ்ந்து இரண்டு நாள் வரை காணப்பட்ட அதன் நெருப்புத்துகளின் வெளிச்சத்தில் பத்தாயிரம் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள லண்டனில் இரவில் பத்திரிகை வாசிக்கமுடிந்தது என்றால் அதன் தன்மையை சற்று சிந்தித்து பாருங்கள். இதற்கு "துங்கஸ்கா நிகழ்ச்சி" என்று பெயர் சூட்டினார்கள். இதற்கான காரணம் வால் நட்சத்திரத்தின் ஒரு பகுதி பூமியை தாக்கியதே.

எரிகற்கள் என்பது இந்த வகையில் நட்சத்திரங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட துண்டுகளே. இரவு நேரங்களில் நீங்கள் பொறுமையாக ஆகாயத்தை பார்த்துக்கொண்டிருந்தால் குறைந்தது ஆறு சிறிய கற்களாவது விழுவதை பார்க்கலாம். இவை சின்னச் சின்ன எரிகற்களே.

இதுவரை விழுந்ததில் பெரிய கல் ஒன்பது அடி நீளமானது. பெரும்பாலும் எரிகற்கள் நம் பூமியுடன் குறுக்கிட்டு காற்று வெளியில் உராயும்போது வெப்பத்தால் எரிய ஆரம்பிக்கின்றன. எரிந்து சுமார் நூறு கிலோ மீற்றர் உயரத்திலே சாம்பலாகி விடுகின்றன. சற்றுப் பெரிதாக இருந்தால் மாத்திரமே எரிந்துகொண்டு பூமியில் விழுகின்றன. பூமியில் பெரும் பகுதி கடலாக இருப்பதால் எரிகற்கள் பெரும்பாலும் கடலுக்குள்ளேயே விழுகின்றன. இதைவிட கிரகங்களுக்கு நடுவே என்னென்னவோ விடயங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. நூறு தொன் எடையுள்ள எரிகல் ஒன்று துங்கஸ்காவில் விழுந்து ஒரு உதைபந்தாட்ட மைதான அளவு பரப்பளவு கொண்ட வெளியையே உருவாக்கியது. இது மணிக்கு 70000 கிலோ மீற்றர் வேகத்தில் விழுந்த வால் நட்சத்திரத்தின் துண்டு என கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே எரிகல் பற்றிய அடிப்படை விடயங்கள்.

எம் நெஞ்சை விட்டகலா அன்புத் தெய்வத்தின்

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
14
-
04
-
1947



விண்ணில்
17
-
01
-
2002

மண்கும்பாணைச்சேர்ந்த

அமரர்

# ஐயம்பிள்ளை நடராசா

திதி–12–02–2005

உந்தன் உறு நோயை ஒரு நாளு முரையாமல்
எங்கள் வாழ்வுக்காய் ஏற்றமுற உழைத்தீர்கள்
சொந்த மனையாளும் சோடிழந்து தவிக்கின்றாள்
சிந்தை தனில் மக்கள் சிரம் தாழ்த்தி வணங்குகின்றார்
மிக்க நலமுடைய மேன்மைக்குணமுடைய
உத்தமரே எம்மாமா எங்குற்றீர் ஏங்குகின்றோம்
அம்புலியைக்காட்டி எமக்கடிசில் ஊட்டி விட்ட
அன்புக்கரம் தேடி அலைகின்றோம் தாத்தாவே
மைத்துனரே நீங்கள் மறைந்த மாயமென்ன
பித்து பிடித்தவர் போல பிதற்றுகிறோம் கேட்டிலையோ
அண்ணாவே எம்மை அரவணைத்த ஆரமுதே
அன்புத்தலைமகனே ஆற்றாது தவிக்கின்றோம்
உற்றார் உறவினர்கள் ஊரவர்கள் நண்பரெல்லாம்
கசிந்துருகிக் கதறுகின்றார்
இற்றைநாள்வரையும் எம்மோடிருந்த
இன்முகத்தைக்காணாது எவ்வழியும் தேடுகின்றோம்
பற்றுடன் வந்தொருக்கால் பார்த்து நீர் போனால் என்ன?
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(சி-11280)

உரிமையாளர்
மைதிலி நகைமாடம்,
89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்:
199, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்

# நீங்காத நினைவலைகள்



மோசேஸ் அக்கினேசம்மா



ஆ.அனிதா
1988-07-13



த.தர்மினி
1994-02-03



த.குமுதம்மா (ரஞ்சினி)
1960-04-25



த. ஜெயராஜ்
1985-06-14



ஆ.அருண் 1990-06-08 ஆ.அனுஷியா 1995-07-19 ஆ.அருணதயா 1964-09-13



தி.சகுந்தலாதேவி
1961-09-25



தி.றேபேட் நிக்ஷன்
1992-11-22



வி.றிஷன் 2003-06-19 வி.சிந்துஜா 2000-11-10 வி.ஸ்ரீபன் 2002-07-28



ச.அபிநிஷா
2003-03-27



ந. அன்னலட்சுமி
1942-04-03

**அம்மா** - பாலூட்டி தாலாட்டி வளர்த்த அன்னையே
எங்கள் உயர்ச்சிக்காக மட்டுமே உங்களை அர்ப்பணித்த தெய்வமே
வழிகாட்ட ஆளில்லாமல் தவிக்கின்றோம் - அம்மா.
**சகோதரிகளே** - எங்கள் இன்பத்தில் பங்கு கொண்டு
துன்பத்தைத் தாங்கிக் கொண்டு
நீங்கள் தானே பெரும் பலமாக இருந்தீர்கள்
இன்று பலமிழந்து வெறும் சடலங்களாக நாம்.
**பிள்ளைகளே** - நீங்கள் சாதாரணமானவர்களா-
கல்வியிலும் சரி விளையாட்டிலும் சரி
முன்னுக்கு நிற்பவர்கள் நீங்கள் தானே
எத்தனை ஆயிரம் மனக்கோட்டைகள்
இன்று அத்தனையும் உடைந்து.....
**மழலைகளே** - உங்களோடு நாமும் மழலைகளாவோம்.
உங்களின் குறும்புகளுக்கு நாமும் ஈடுகொடுப்போம்
இப்போ உங்கள் குறும்புகள் வந்து
தினம் தினம் துன்புறுத்துகின்றனவே.

சுனாமி பேரலையால் முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் வசித்த எமது உறவுகளின் பிரிவுச்செய்தி அறிந்து எமது துயரத்தில் பங்கு கொண்டு எம்மை ஆற்றுப்படுத்தி எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது கண்ணீரோடு கூடிய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை 12.02.2005 சனிக்கிழமை 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி :
தாரணி மணப்பந்தல் பணி,
துர்க்காவீதி,123, 2 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

எஞ்சியிருக்கும் எச்சங்கள்:
க.இரத்தினசிங்கம் குடும்பம், பி.அருமைத்துரை குடும்பம், மா.தர்மராசா குடும்பம், மோ.திருச்செல்வம் குடும்பம், சி.ஆனந்தராசா குடும்பம், ந.தசரதன் குடும்பம் (சமூகசேவை உத்தியோகத்தர் -கண்டாவளை), ந.அரவிந்தன் குடும்பம், ந.சுரேஸ்குமார் குடும்பம் (டென்மார்க்), ந.சதீஸ்குமார் குடும்பம்.

(5680)



## பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

"சுனாமி" காவு கொண்ட எங்கள் வளங்களில் தொழில் துறைகளில் பிரதானமானது கடற்றொழில் ஆகும். பாரம்பரியமாக மீன்பிடித்தொழிலை செய்துவந்த மக்களை மட்டுமல்லாது அவர்களது வாழ்விடங்களை அவர்களின் தொழில் கருவிகளை ஏன் அவர்களது எதிர்காலத்தையே நாசம் செய்து விட்டது "சுனாமி"

எனினும் நீண்ட எங்கள் கரையோரமும் அதனை நம்பியிருக்கும் எங்கள் மக்களும் அவர்களுக்குத் தெரிந்த மீன்பிடித்தொழிலும் அழிந்துபோக யாருமே விரும்பமாட்டார்கள்.

அழிவில் இருந்துதான் புதிய ஆக்கச் சக்தி பிறக்கின்றது என்பது எங்கள் மக்களின் நீண்டகால போராட்ட வாழ்க்கை மூலம் கண்ட அனுபவமாகும். அதனையே சுனாமியின் பின்னரான நிலைமையிலும் நாமும் கைக்கொள்ள வேண்டும்.

இதனையே கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். கடற்றொழில் நவீன முறையில் கட்டியெழுப்பப்படவேண்டும் எனவும் அவர் தன் கருத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்குடாநாட்டில் 14 மீன்பிடி வலயங்கள் உள்ளன. இவற்றில் 9வலயங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இவ் வலயங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது வெறுமனே படகினையும், வலைகளையும், வழங்காது படகுக்கட்டுமானம், படகுக் கட்டுமானத்தொழிற்சாலை, வலைத் தொழிற்சாலை, ஐஸ தொழிற்சாலை, குளிரூட்டிக் களஞ்சியம், இறங்குதுறை, வெளிச்சவீடு ஆயியவற்றைக் கொண்ட நவீன முறையிலேயே மீன்பிடி வலயங்கள் கட்டியெழுப்பப்படவேண்டும்.

வடக்குக் கிழக்குப் பகுதிக் கடலில் 200 கடல்மைல்களுக்கு அப்பால் மீன் வங்கி உள்ளது. இங்குள்ள மீன்களை வெளிநாடுகளில் இருந்தும் தென்பகுதியில் இருந்தும் வரும் மீனவர்கள் பிடித்து அள்ளிச் செல்லுகின்றார்கள். இதற்கென மாதக்கணக்கில் கடலில் தங்கி நின்று மீன்பிடிக்கக் கூடிய நவீன வசதிகள் நிறைந்த மல்ரிபோட் எனப்படும் படகினைப் பயன்படுத்துகின்றார்கள். இவ்வாறு படகுகள் தென் பகுதிக்கு வழங்கப்பட்டதுபோல வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள ஒவ்வொரு கடற்றொழிலாளர் சங்கத்துக்கும் குறைந்தது நான்கு படகுகளையாவது பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனத் தெரிவித்த கேணல் சூசை அவர்கள்.

மேலும் தெரிவித்த கருத்து முக்கியமானது "சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் அழிந்துபோன எங்கள் கிராமங்களைத் திட்டமிட்ட முறையில் சகல வசதிகளுடன் கட்டியெழுப்புவதற்கு எமது செயலணிக் குழு திட்டங்களைத் தயாரித்துள்ளது"

# நெத்தலியாறும் தெளிந்த நீரும்

வளம் கொளிக்கும் வன்னி மண்ணில் கலகலத்துப் பாயும் ஆறுகளில் ஒன்று நெத்தலியாறு ஆகும். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றான கல்மடு குளத்திற்கு நீரைக் கொண்டு வருவதும் வன்னி மக்களுக்கு மட்டுமன்றி குடாநாட்டுக்குக் கொண்டுசெல்வதற்கும் மணலை வாரி ஒதுக்குவதும் நெத்தலியாற்றின் கொடையாகும்.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் ஊடறுத்து சுண்டிக் குளத்தில் கடலில் கலக்கின்றது. மாரிகாலத்தில் பெய்யும் மழை நீரில் பெருமளவு நீர் கடலுக்குச் செல்வதை காணக்கூடியதாக உள்ளது. கடந்த காலங்களில் இவ்வாற்றின் குறுக்கே பல அணைக்கட்டுக்கள் அமைத்து நீரை மறித்து மக்கள் பயன்பாட்டிற்கு உட்படுத்தியதையும் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாற்றின் குறுக்கே பல அணைக்கட்டுக்கள் அமைத்து நீரை மறித்து மக்கள் பயன்பாட்டிற்கு உட்படுத்தியதையும் காணக்கூடியதாகவும் உள்ளது. இவ்வாற்றை மறித்து பெரிய குளத்திற்கு நீரைக் கொண்டுசெல்வதற்கு அமைக்கப்பெற்ற கட்டுமானங்கள் இப்போதும் பயன்பாட்டில் உள்ளது.

உழவன் ஊர், தருமபுரம் பகுதிகளுக்கு நீரைக்கொண்டுசெல்வதற்கு அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் அனைத்தும் முழுமையாக சிதைவடைந்து உள்ளதை காணக்கூடியதாக உள்ளது: கோடைகாலங்களில் எமது மக்களின் குடி நீர் தேவைக்குக் கூட சில வேளைகளில் நீண்ட தூரம் செல்கின்றனர்.

எம் மண்ணில் பாயும் ஆறு நீண்ட தூரம் பாய்ந்து கடலில் கலக்கின்றது. எம்மண்ணில் பொழியும் மழையை, மழை நீரை எமது நிலத்தடி நீராக மாற்றாத வரையும் அடுத்த சந்ததிக்கு தண்ணீரை சேமித்து வைக்காது விடுகின்றோம்.

உலக நாடுகளில் நடாத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் படி நிலத்தடி நீர் மிகவும் விரைவாகக் குறைவடைந்து வருகின்றது. அது மட்டுமன்றி கனிய வளங்களும் குன்றிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மழைநீரைச் சேமிப்பதற்கும் பல்வேறு தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ் வேளையில் நாம் ஆற்று நீரை வீணேகடலில் கலக்க விடுகிறோம்.

இவ்வாறின் கரையில் நன்னிலமாக பல நூறு ஏக்கர் நிலமிருந்தும் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாத நிலமாக உள்ளது. தென் இலங்கையில் இவ்வாறான பல ஆறுகளுக்குக் குறுக்காக அணைக்கட்டுகளை அமைத்து சிறு நீர்த்தேக்கங்களை உருவாக்கி நீரினை அதி உச்ச பயன்பாட்டிற்கு உட்படுத்துகின்றனர்.

இவ்வாறு நாமும் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நீரின் தேவையை உணர்ந்து எமது மக்களுக்கு நீண்டு நிலைத்து நிற்கக் கூடியவாறு ஆய்வுகள் மேற்கொண்டு திட்டமிட்டு புதிய கட்டுமானங்கள் அமைக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

தமிழர் தாயகப் பகுதிகளில் கிடைக்கும் நீர் தாயக மக்களின் தேவைகளுக்குப் போதுமானதாக உள்ளது. இதனைப் பல்வேறு நிபுணர்கள் ஆய்வுகளின் மூலம் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தனியாக நெத்தலி ஆறுக்கு மட்டுமில்லை. கனகராயன் ஆற்றுக்கும் இவ்வாறு செய்யப்படவேண்டிய புனரமைப்பு வேலைகள் நிறையவே உள்ளன. இதனை என்னுடைய முந்தைய ஒரு கட்டுரையில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தற்போது உள்ள சூழ்நிலையில் நிதி வழங்கும் முகவர்கள் நீர் தொடர்பான வேலைகளை மேற்கொள்ளும் திணைக்களங்கள் ஆற்றுப்படுகை அபிவிருத்திக்கு உதவ முன்வரவேண்டும். சிறிலங்கா அரசு ஆற்றுப்படுகை அபிவிருத்திக்கு என ஒரு அமைச்சரை நியமித்து பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

ஆற்றுப்படுகையில் நாகரிகம் தோன்றியதாக வரலாறுகள் கூறுகின்றன. இங்கு எமது விடுதலைக்கு ஆற்றுப்படுகைகள் பெரும் பங்காற்றி உள்ளன. எனவே நாமும் எமது ஆற்றுப் படுகைகளை இனங்கண்டு அபி விருத்தி செய்து மக்களுக்கும் எதிர் கால சந்ததிக்கும் விட்டுச்செல்ல வேண்டிய மிகப்பெரிய சுமை இன்றைய மக்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது.

இதை நிறைவேற்ற வேண்டியது தற்போதுள்ள பொறுப்பு வாய்ந் தவர்களின் கடமையாகும். "ஆற்று நீரைப்பாதுகாப்போம். அடுத்த சந்ததியை வாழவைப்போம்"

**சுமன்**

# வாழ்வை வியாபாரமாக்காதீர்கள்

சமூகம், மனித உறவுகள் பின்னிப் பிணைந்துள்ள ஒரு தொகுதி. சமூக நெறிமுறைகளும், பண்பாட்டுக் கோலங்களும் மனிதர்களின் நடத்தைப் பாங்குகளை நெறிப்படுத்தி, முறைப்படுத்தி ஒழுங்கை உண்டாக்குகின்றன. மனித உறவுகளால் சமூகம் ஆக்கப்படினும் கண்டவாறான உறவுகளால் சமூகம் அமைவதில்லை. ஒவ்வொரு சூழ் நிலையிலும் பண்பாடு மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று நெறிகளை வகுத்து வழிகாட்டுகிறது. இதனால் தான் இலெசுல் ஒயிட்டு என்னும் அறிஞர் மக்களுடைய நடத்தை பண்பாட்டின் செயல் என்கின்றார்.

மனித வாழ்வு பேசும் மானிட நேயம் இன்றைய நிலையில் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றது? மனிதம் கருத்தில் கொள்ளப்படுகின்றதா? விடை காணப்படாத வினாக்களாகவே தொடருகின்றன. மனித வாழ்வியல் வாழ்வதற்காகவும்,வாழ வைப்பதற்காகவும் தனது பணியை மேற்கொள்கின்றதா? இல்லையேல், சந்தைச் சக்திகளை ஏற்படுத்தி வியாபாரத்தையும், தனி மனித வீழ்வையும எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கின்றதா? இந் நிலையில் சமூகக்கூறுகள் அனைத்தும் ஆக்கமுறையில் பங்காற்றுகின்றன. நிலைத்து நிற்கின்றன என்பதையே நேர்வழியில் ஆள்பவர்களும், பிறர்க்குரியாளர்களும் கனவுலகத்தை விடுத்து நிஜவு லகத்தில்நிலை நிறுத்தப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

தனதுயிரை துச்சமாக மதித்து பேதங்கள் பாராது இன்னொரு உயிரை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதுதான் மனிதம். சமூக அந்தஸ்திற்காகப் பாடுபடுவது மனிதமல்ல. இந்தச் சிறு தீவிலே சின்னத்தனமான சிந்தனையாளர்கள் வாழ்வின் வியாபாரிகளாக வலம் வருகின்றார்கள். தாம் வாழ்வதற்காக வகை வகையான சிந்தனைகளும் பாரபட்ஷமும், தனிப்பட்ட மனச் சாய்வுகளும் கொண்ட ஓர் அமைப்பில் நீதியின் அர்த்தம் என்ன? பிறரின் நிம்மதியைக் குலைத்து, வாழ்வை வலிந்துகெடுத்து விட்டு அஸ்தமிக்கும் சூரியன்களாய் போலிக்கருத்துருவங்களைப் போர்த்திக் கொண்டு செல்வாக்குகளால் அர்த்தமற்ற வாழ்வு வாழ்வதா? இச் சாத்தியமற்ற நியாயங்கள் உருப்படுமா? சரி, இவ்வாறான குண பேதங்களை மன்னித்து விடின், கருணைக்கும், மன்னித்தலுக்கும் அப்பால் மனித நீதியை உருவாக்குவது சாத்தியந்தானா?

வாழ்வில், அறிந்து செய்யும தவறுகளை நாம்கண்டுகொள்ளாமல விடமுடியாது. அறிந்து செய்யப் படுபவை தவறுகள் அல்ல; தீய செயல்கள். இது புத்திசாலித் தனமற்றது. பாராட்டத் தகாதது. தர்மமுமற்றது. இத் தீய செயல் குற்ற உண்வை ஏற்படுத்தும்; பின் விளைவுகளும் தொடரும். இவ்வாறானவர்களின் வாழ்வு, மேலோட்டமாய் பார்க்கும் போது ரம்மியமாய், கவர்ச் சிகரமாய் தென்படலாம். வாழ்க்கை எங்கோ அவர்களைக் கடித்தும் விடுகின்றது.

சிலர், திருமணமும், குழந்தைகள் கிடைப்பதும்தான் வாழ்வு என்கின்றார்கள். ஏனெனில் இவர்கள் அதற்கு மட்டுமே பிறப்பெடுத்தவர்கள். சாதனை அதுதான். காலம், நேரம் கடமைக்கு கிடையாது. நேர்மறைக் கோஷமுள்ளவனை எதிர்மறைக் கோஷமுள்ளவன் ஒன்றுமே செய்ய முடியாது. "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான்." உணர்வைத தொடுவதுதான் செயல். மாறாக வரட்டுச் சித்தாந்தம் பேசுவதுதான் செயலல்ல. வாழ்வில் முன்மாதிரியாக வாழவேண்டும். வாழ்க்கை வியாபாரிகளின் முன்னேற்றம் சந்தர்ப்பத்திற்கேற்றமாதிரி தம்மைத் திசை திருப்பும் ஒரு ரகம். ஒரு தரம் நாஸதிகம் பேசினால் மறுதரம் தெய்வ சிந்தனை பற்றியதாக இருக்கும். இந்த ஏமாற்றம் யாருக்கானது? அவர்களுக்கே உரித்தானது. பலம்- நியாயம்- பலவீனம்- அநியாயம் உணருங்கள்.

அமெரிக்க கவிஞர் லாங்.'. பெல்லோ வாழ்க்கை பற்றிக் கூறும் போது 'வாழ்க்கை நிஜமானது. வாழ்க்கை உயர்ந்தது. இதற்குத் தோள்களை உயர்த்தியே இருக்க வேண்டுமென்பதில்லை.' எனவே வாழ்க்கை வாழ்வதற்கும், வாழ வைப்பதற்குமே தவிர நாடக பாணியில் நடத்துவதைத் தவிர்த்து, பதவி, அந்தஸ்து போன்ற நிலையற்ற மோகங்களினால் வியாபார நோக்கமின்றி, மன்னுயிரையும் தன்னுயிரைப்போல் நினைத்துச் செயற் படுவோமாக.

"வாழும் காலத்தில் வாழ்கின்ற மனிதருக்குச் சேவை செய்வதே பேரின்பம்"

**இனியவள்**

## தமிழீழ மாவட்ட நீதி மன்று - கிளிநொச்சி

**மா.நி.வ.இல :-50/2003,**
**தன்மை :-காணி.**

| வழக்காளி | எதிர் |
|---|---|
| கோவிந்தன் செல்வபதி, | 1)கந்தையா பொன்னுத்துரை, |
| எமர்சன் வீதி, | 2)கந்தையா மயில்வாகனம், |
| டி.ஆர்.ஒ.முருகேசன்பிள்ளை | அன்னசத்திர ஒழுங்கை, |
| -கமம், | கந்தர் மடம், |
| மருதநகர், | யாழ்ப்பாணம். |
| கிளிநொச்சி. | -எதிராளி- |

### பகிரங்க அறிவித்தல்

மேற் குறித்த
2ஆம் எதிராளிக்கு,

மேற்குறிப்பிட்டுள்ள வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றானது, 16/08/2004 அன்றைய நாள் வழங்கப்பட்ட தீர்ப்பில், பிணக்கிற்கு உட்பட்ட 24 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள ஆதனத்தினை 2ஆம் எதிராளி விற்பனை செய்வதாக இருந்தால் வழக்காளிக்கே முக்கியத்துவம் கொடுத்து விற்பனை செய்யவேண்டும் என்று, குறித்த தீர்ப்பில் அறிவுறுத்தியுள்ளது. எனவே 2ஆம் எதிராளி, வழக்காளி தவிர்ந்த வேறு எவருக்கும் குறித்த ஆதனங்களை விற்பனை செய்யக்கூடாது என்றும், அப்படி விற்பனை செய்யப்பட்டிருப்பின் அவ் விற்பனை செல்லுபடியற்றது என்று வெளிப்படுத்தி, இப் பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது.

"இந்த 2005 ஆம் ஆண்டு 01 மாதம் 28 ஆம் திகதி "
மன்றின் கட்டளைப்படி.

வழக்காளி சட்டவாளர்,
தா.இ.குலசங்கர்,
டிப்போச்சந்தி,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(சி.11305)

உலா-21

# எங்கட தலைவிதியை நிர்ணயிப்பது — நாங்கள் தான் எண்டிறதை மறக்காதேயுங்கோ..!

வணக்கம் எல்லோருக்கும் ! ஐயைய்யோ பொறுங்கோ, குந்து சுடுகுது எழும்பி நிண்டு கதைப்போம். என்ன வெயில் ! நெருப்புப் பத்திற அளவுக்கெல்லே சுட்டெரிக்கிது. மத்திய கோட்டுக்குப் பக்கத்தில இருக்கிறோம் எண்டு சாட்டுக்கு சுலபமா விஞ்ஞான விளக்கம் குடுக்கலாம். ஆனால் ஒவ்வொருத்தரும் ஏதோ நாலு மரம் நட்டு வைச்சால் பிற்காலத்துக்கும், பேந்து வாற சந்ததியளுக்கும் எவ்வளவு பிரயோசனப்படும் ! ஏதோ நான் சொன்ன உடனே மட்டும் என்ன மரம் வைக்கவே போறீங்கள் ? சுனாமி விசயத்தில கூட மொத்தமா தடுக்கேலாட்டியும், அலைஅடிச்சுக் கொண்டு வாற வீரியத்தைக் குறைக்கிறதுக்கு, மரங்கள் அடர்த்தியா நிண்டால் சரியாப் பிரயோசனப்படும். மரங்களின்ர பயனை மனுசர் புரிஞ்சுகொண்டு, அதுக்கேற்றமாதிரி நடவடிக்கை எடுக்காட்டி, அந்த விளக்கம் இல் லாத நடமாடும் மரங்களால பூமிக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை. பாக்கு நீரிணையைக் குறுக்க வெட்டிறதால அங்கை அழிக்கப்படப்போகிற பவளப் பாறையளால ஒரு பாதிப்பும் இல்லையெண்டு கனபேர் கருத்துச்சொன்னவை. ஆனாலும், சுனாமி நேரம் நீரிணையின்ர புண்ணியத்தாலதான், அதைத் தாண்டி பெரிய அளவில மேற்குப் பக்கத்தில பாதிப்பில்லை எண்டு இப்பசொல்லினம். என்ன வோங்கோ ஒருசிலர் தங்கட சுயலாபத்துக்காக உண்மைக்குப் புறம்பாய் படுபாதகமான அநியாயப் பொய்யளையெல்லாம் அவிட்டு விடுகினம். உப்பிடித்தான் யாழ்ப்பாணத்தில இருந்து வந்தவர் ஒரு விசயம் சொன்னார். அனர்த்தத்தால பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலை இருக்கிற எங்கட உறவுகளுக்கு உருப்படியா ஒண்டுமே செய்யாமல், சும்மா விலாசம் காட்ட கமராக்காரரோடை வந்த டக்ளஸ் கும்பல்,ஜேவிபி கோஷ்டியளுக்கு சனம் உள்ள ஆத்திரத்தை எல்லாம் வைச்சு நல்ல பூசை குடுத்தவையல்லோ ! அந்த சம்பவத்தை மனசிலவைச்சுக் கொண்டு அந்த அறுவாங்கள், சனம் எல்லாம் நிவாரணம் மிதமிஞ்சி குடுத்த பழைய உடுப்புகளை கொளுத்தி எரிக்கினம் எண்டு கதையைப் பரப்பிவிட்டாங்களாம். இதைக் கேள்விப்படிற குடுத்த சனத்துக்கு மனம் கொஞ்சம் கஷ்ரப்படுமெல்லோ ! பாருங்கோ உலகத்தை, மனசில கறுவியம் வைச்சுக்கொண்டு என்னென்ன மோசங்களெல்லாம் உந்த அநியாயப்படுவாங்கள் செய்யத்துணியிறாங்கள் எண்டு.

உலகத்தைப் பற்றிச் சொல்லேக்கிள்ளைதான் என்ரை சில வயிற்றெரிச்சல்களும் ஞாபகத்துக்கு வருகிது. பின்லாடன்ரை ஆட்கள் நியூயோர்க்கிலை தாக்குதல் நடத்தி ஒரு வருசம் முடியிறதுக்குள்ளை அமெரிக்காவிலை அதிகமா விற்பனையான புத்தகம் எதுவெண்டு நினைக்கிறீயள் ? 'இஸ்லாமிய அடிப்படைவாதம்' பற்றிய ஒரு ஆய்வு நூல் தான் ! என்னத்துக்குச் சொல்லிறனெண்டால் மக்களைப் பாதிக்கக்கூடிய ஒரு சம்பவம் நடந்த கையோட, அதுக்கான காரணங்களை ஆய்ந்து அறியிறதிலை சாதாரண சனங்கள் கூட எவ்வளவு ஆர்வமா இருக்கினம் எண்டு பார்த்தீங்களே ? ஏதோ ஒரு புத்தகம் ஒட்டுமொத்தப் பிரச்சினையையும் புட்டு புட்டு வைக்கப்போறேல்லை. இருந்தாலும் எந்த ஒண்டும் கட்டாயம் நல்லதொரு ஆரம்பமாக இருக்கும். நானும் கடல்லை பெரிசா அனுபவம் இல்லாதனான். கொஞ்சம் விரிவாய் அறிஞ்சு கொள்ளுவம் எண்டிட்டு, கடலியல் பற்றி கிட்டடியிலை வந்ததெண்டு கேள்விப்பட்ட நூலை புத்தகக்கடை ஒண்டில கேட்டன். அங்கை நிண்டவர் தங்களிட்டை அப்பிடி ஒரு புத்தகம் இல்லையெண்டு சொன்னார். ஆனாலும் மூலையிலை நீல மட்டையோடை ஒண்டு என்ரை கண்ணுக்குள்ளை குத்திச்சு. பார்த்தால் நான் தேடி வந்த புத்தகம் அங்கை கிடந்தது அவருக்குத் தெரிஞ்சிருக்கேல்லை. தெரியிற மாதிரி அடுக்கிவைக்கிற பழக்கமும் இருக்கிறமாதிரித்தெரியேல்லை. இன்னுமொருக்கால் கிளிநொச்சிக்கு வெளியால ஒரு புத்தகக் கடையிலை எங்கட நாட்டில கட்டாயம் இருக்கவேண்டிய ஒரு முக்கியமான புத்தகம் வேணுமெண்டு கேட்டன். விடியக் காலையிலை விடியாத ஒரு மூஞ்சையோட நாடியிலை கை வைச்சபடி ஒருத்தர் 'அது இல்லை' எண்டார். 'எப்ப உங்களுக்கு திரும்பக் கிடைக்கும்', எண்டு நான் பதிலுக்குக் கேட்டன். நாடியிலை வைச்சகை அப்பிடியே வைச்சபடி இருக்க 'வராது' எண்டு பதில் வந்திச்சு. 'ஏதோ பெரிசா வாசிச்சுக் கிழிக்க வந்திட்டார்' எண்ட தோரணையில அவற்றை மூஞ்சை கிடந்திச்சிது. ஏதோ வீடு,வாசல்லை சோலி சுரட்டாக்கும் எண்டு நானும் நினைச்சிட்டு வந்திட்டன். ஆனாலும் எப்ப போனாலும் அதே நாடி, அதே கை, அதே விடியாத மூஞ்சைதான் காணக்கூடியதாய் இருக்கிது. 'ஆ', 'ஊ' எண்டு பெரிசா உந்தக் கடையளுக்கு பேர் வைக்கிற ஆக்கள் வாசிப்பில ஈடுபாடு கொண்ட ஆக்களைப் போட்டு, மேலதிகமான புத்தகத்தேவையளையும் உடனுக்குடன் சரிசெய்யக்கூடின மாதிரி ஒழுங்குகள் செய்யோணும். புதுசா விற்பனைக்கு வாற புத்தகங்களைப் பற்றி வாசலிலை சிறுகுறிப்போடை விளம்பரங்களைப் போடோணும். உரப்பைக்குள்ளை புத்தகங்களைப் போட்டு மூட்டையா வைச்சு விக்கிறதுக்கும், ஒழுங்காப் பிரிச்சு அலுமாரியில அடுக்கி வைச்சு விளக்கமா விக்கிறதுக்கும் வித்தியாசம் இருக்கோ, இல்லையோ ? நீங்களே சொல்லுங்கோ ! கடையளுக்குப் பெரிசா பேர் வைக்கிறதோட எல்லாம் முடிஞ்சு போறேல்லை, அங்கங்கை பெறக்கூடியதாக இருக்கிற சேவையளும் அதுக்கேற்ற மாதிரி இருக்கோணும். இல்லாட்டி ஆசிய அபிவிருத்தி வங்கியின்ரை ஆதரவோடை வாசிப்புப்பழக்கத்தை ஊக்குவிக்கிற திட்டம் யாழ்ப்பாணத்திலை அறிமுகப்படுத்தப்பர்றதைப் போல, எல்லா இடமும் மினைக்கெடோணும். எல்லாக் கடையளையும் நான் குறை சொல்லேல்லை. தொப்பி அளவான எல்லாரும் போட்டுக்கொண்டு, கொஞ்சம் திருந்தப்பாருங்கோ ! சந்தையிலை மீன், மரக்கறி வியாபாரம் மாதிரி புத்தகங்களைப் பற்றியும் கனக்கச்சொல்லக்கூடிய நிலையிலை, கடையிலை நிக்கிற ஆக்கள் இருக்கோணும். ஏனேண்டால் முழுச் சமுதாயமும் வாசிப்பில ஈடுபட்டு, மேம்படிறதுக்கான முக்கிய பொறுப்பு அவையிட்டைத்தான் இருக்கு.

ஐயோ பாருங்கோ, நான் வஞ்சகம் இல்லாமல் நாலையும் உங்களோடை கதைச்சுக்கொள்ளிறது. ஆனால் சில ஆக்கள் என்ரை தலையிலையே சம்பல் அரைக்கப் பார்த்திட்டினம். 'அப்பு நீங்கள்தானே சனத்தின்ரை குறையளைப் பற்றி எழுதிறனீங்கள். எங்கட ஒழுங்கை குன்றும், குழியுமா சரியான மோசமாய் கிடக்கு. உதுக்குத் தார்வீதி போடச்சொல்லி ஒருக்கால் எழுதுங்கோவன்', எண்டு அவையள் கேட்டிச்சினம். இதென்னடா கரைச்சலாக் கிடக்குது ! இனி வேலி அடைக்கவும், வெங்காயம் உரிக்கவும் வழிவகை செய்யச்சொல்லி கேட்பினமாக்கும். பிள்ளையள் ஒண்டு உங்களுக்குச் சொல்லி வைக்கிறன். அரசாங்கம் சும்மா கணக்குக் காட்டிறதுக்காக பிரதான வீதியளுக்கு தார் பூசி வடிவு காட்டிப் படம் எடுப்பினம். அதுக்காக ஒழுங்கையளுக்கெல்லாம் ஒழுங்காய் ஏதாவது அலுவல் நடக்குமெண்டு எதிர பார்த்து இருக்காதயுங்கோ ! எட, செத்த சனத்தின்ர தொகையைப் பார்த்து மனச்சாட்சிக்குப் பொறுக்காமல், சில வெளிநாடுகள் செய்யிற உதவியளை ஒழுங்காய் பிரிச்சுக்குடுக்காமல், நயவஞ்சக அரசியல் நடத்திற உதுகளிட்டை எதிர்பார்த்திருந்து ஏமாந்து போடாதேங்கோ ! நான் உங்களுக்கு ஒண்டு சொல்லிறன், செய்து பாருங்கோ ! ஒவ்வொரு ஒழுங்கையிலையும் இருக்கிற ஆக்களே எல்லாரும் சேர்ந்து கல்லை, மண்ணைப்போட்டு செப்பம் செய்தால் என்னவாம்?'நாங்கள் கஷரப்பட்டுச் செய்துவிட, மற்றவையள் வந்து வலு ஹாயா ஓடித்திரிவினம்' எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது எனக்குக் கேட்கிது. நீங்கள் நெடுகலும் கஷ்ரப்படுகிறதை விட, இடையிடை உப்பிடி ஒரு பொதுப்பணி செய்யிறதாலை லாபம்தான் அதிகம். இப்பிடிச்செய்யிறதால மிதமிஞ்சின கொழுப்பும் கரைஞ்ச மாதிரியிருக்கும். ஒழுங்கையும் போடுப்பட்ட மாதிரி இருக்கும். அப்ப கொழுப்பில்லாத ஆக்கள் என்ன செய்யிறதெண்டு கேட்டுப்போடுவியள். அவையள் கொஞ்சம் கொழுப்பு வைக்கிற மாதிரி கோப்பை நிறைய ஒரு வெட்டு வெட்டிப்போட்டு வேலையில இறங்கலாம். இதெல்லாம் குறையள் இல்லாமல் ஒழுங்கா நடக்கிறதுக்கு இன்னுமொரு விசயம் செய்யோணும் : மாதாமாதம் ஒவ்வொரு ஊரிலையும் இருக்கிற திறமான ஒழுங்கையையும், மோசமான ஒழுங்கையையும் தெரிவு செய்து மேடையில ஏத்தி கௌரவிக்கோணும். அப்பதான் சோம்பேறியளை எல்லாரும் அடையாளம் காணுவினம். கௌரவப்பிரச்சினையால எல்லாரும் திருந்தப்பார்ப்பினம். உழைப்பு தனிப்பட்டதாய் இருந்தாலும், லாபம் பொதுவானது.

உப்பிடித்தான் எல்லாச் சிக்கல்களுக்கும் ஒரு தீர்வு நிச்சயமா இருக்கும். சில வேளையளிலை சந்தர்ப்பத்தைப் பொறுத்து அந்தத் தீர்வு சிக்கல்கள் நிறைந்ததாவும் இருக்கலாம். ஆனாலும் கன விசயங்களை நாங்கள் வலு சுலபமா தீர்த்துக்கொள்ளலாம். சுனாமியை விட மோசமான பாதிப்புகளை நீண்டகால அடிப்படையில தரக்கூடிய பிளாஸ்ரிக் மற்ற பொலித்தீனைப் பற்றி பெரிசா நாங்கள் அலட்டிக்கொள்றேல்லை. அதால வெளிப்படக்கூடிய 'டயக்சீன்' கருச்சிதைவு, உறுப்புக்கள் தவறுதல், அங்கவீனம் எண்டு பல பாதிப்புகளையும் ஏற்படுத்தக்கூடிய நஞ்சு எண்டிறதைக் கொஞ்சமாவது யோசிச்சுப் பாருங்கோ! நடந்து முடிஞ்சாப் பிறகு ஒப்பாரி வைக்கிறதை விட, நடக்கிறதுக்கு முன்னாலையே தடுக்கலாமெல்லோ? அண்டைக்கு பஸ்ஸில போகேக்கிள்ளை முறிகண்டியில கச்சான் வாங்கிச் சாப்பிடேக்கிள்ளை தான் பார்த்தன். அந்தப்பை 'திவயின' சிங்களப்பேப்பரால செய்யப்பட்டிருந்திச்சு. பொலித்தீனை விட பேப்பர் எவ்வளவோ திறம் தான். ஆனாலும், கழிவுப்பேப்பரை இறக்குமதி செய்யிற அளவுக்கு கேவலமான நிலையில எங்கட போக்கு இருக்கிது. நாங்கள் வாசிக்கிறதும் வலுகுறைவு, அப்பிடி வாசிச்சாலும் முடிஞ்சதை மீள்பயன்பாட்டிற்குக் குடுக்கிறது இன்னும் குறைவு. 'உன் புன்னகை போதுமடி! சில பூக்களும் பூக்குமடி!' இல்லாட்டி 'சிரிச்சு சிரிச்சு வந்தாளடா சினா, தானாவோ ஏதோ இரண்டு எழுத்து'... எண்டெல்லாம் சிரிப்பு, புன்னகையைப் பற்றிப் பாட்டுகள் இருக்கிது. ஆவெண்டு பார்த்துக் கொண்டிருக்கிற சினிமாக்கசற் வாடகை 50 ரூபா. ஆனால் ஆரோக்கியமா சிரிக்க வைக்கிற ஒரு சஞ்சிகை 25 ரூபாவாக இருந்தாலும் பரவலா வாங்கப்படுகிற தொகை காணாது. பார்த்துப் பார்த்து அழுகிறதுக்கு அம்பது ரூபா குடுக்கிற நாங்கள், நாங்களும் எங்களுக்கு விருப்பமான ஆக்களும் சிந்திச்சு சிரிக் கிறதுக்கு இருபத்தஞ்சு ரூபா குடுக்கிறேல்லை.என்னவோங்கோ எங்கட தலைவிதியை நிர்ணயிக்கிறது நாங்கள்தான் எண்டிறதை மட்டும் ஞாபகத்தில வைச்சு, முன்னெச்சரிக்கையோட பொறுப்பாய் செயற்படுங்கோ ! 'பெப்ரவரி 14' வலன்ரைன்ஸ் நாள் வருகிது. ஆரோ ஒரு தம்பி போன வருசம் தர்மபுரத்தில பரந்தன்-முல்லைத்தீவு வீதியிலை பெயின்ரால காவியம் எழுதி வைச்சிருந்தவர். உதுகளை விட்டிட்டு பிரயோசனமா ஒவ்வொருத்தரும் நாலு புத்தகங்களை பரிசாக்குடுக்கலாமெல்லோ! என்னவோ கச்சான் பைக்கான கழிவுப்பேப்பரை நாங்கள் இறக்குமதி செய்யிறோம் எண்டிறது மனசில வருத்தமா இருக்கிது. பேந்து சந்திப்பம், நான் வாறன் !





# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 07

### பகுதி -35

அடுத்த வியாழன் பிற்பகலிலே குழந்தைகள் வழிநடத்தல் மையத்துக்கு டிப்ஸ் வந்ததும் அவன் என்னை நோக்கி விரைவான புன்னகை புரிந்துவிட்டு எனக்கு முன்னதாகவே விளையாட்டு அறைக்கு நடந்து சென்றான். விளையாட்டு அறைக்குள் புகுந்த அவன் பொம் மை வீட்டை நோக்கிச் சென்றான்.

"இது வேறமாதிரி இருக்குது. எல்லாம் மாறிப்போயிருக்கு" என்றான். "வேறு யாராவது அவற்றை எடுத்து விளையாடியிருக்கக்கூடும்" என்று நான் சொன்னேன்.

'ஓம்' என்ற டிப்ஸ், சடாரென்று சுழன்று திரும்பி, மணல் பெட்டியை பார்வையிட்டான். மிருகங்களும் அப்பிடித்தான். நான் விட்டிட்டுப் போனமாதிரி அவை இல்ல." என்றான்.

"அநேகமாக அவற்றையும் யாராவது எடுத்து விளையாடியிருக்கக் கூடும்." எனது கருத்தை நான் சொன்னேன்.

'அப்படித்தான் தெரிகிறது" என்றான் டிப்ஸ். அறையின் நடுவில் வந்து தரித்துக் கொண்டவன் எதையோ உன்னிப்பாக கேட்டு அவதானித்தான். "தட்டச்சுப் பொறி ஒலி உங்களுக்குக் கேட்குதா?"




என்று என்னைக்கேட்டான். "யாரோ தட்டச்சுப் பொறியில் வேலை செய்கிறார்கள். தட்டச்சுப்பொறியால் எழுத்துக்களை எழுதுகிறார்கள்"

"ஓம் எனக்குக் கேட்குது" நான் பதில் சொன்னேன்.

தனது உரையாடலின் கருப்பொருளாக பாதுகாப்பான, சடப்பொருட்களை அறிமுகப் படுத்தும் திறமை டிப்ஸுக்கு இருந்தது. ஏதாவதொன்று அவனைத் தொல்லைபடுத்தும் பொழுது இவ்வகை உரையாடலை அவன் கவசம் போல் பயன்படுத்துவதாகத் தோன்றியது. விளையாட்டுச் சாமான்கள்தான் விட்டு விட்டுப்போன மாதிரி இருக்காதது. அவனைக் குழப்பிவிட்டிருந்தது. போனமுறை அவன் அங்கிருந்து சென்றபோதுதான் வைத்த இடத்திலிருந்து அவற்றை நகர்த்தவேண்டாம் என்று அவன் கேட்டிருந்தான். ஏன் அவனும் சொல்லவில்லை. அவனுக்கும் எந்த வாக்குறுதியும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. இது வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டது. எல்லாப்பிள்ளைகளையும் போலவே, தனது உலகத்தின் எந்தப் பகுதியும் அசைவற்றதில்லை என்பதோடு கட்டுப்படுத்தக்கூடியதுமில்லை என்பதை பட்டறிவின்மூலம் டிப்ஸ்சும் உணர்ந்துகொள்வது முக்கியமானதென்று தோன்றியதாலேயே அவ்வாறு தவிர்க்கப்பட்டது. இப்போது, மாறுகின்ற தனது உலகம் பற்றிய அசைக்க முடியாத சான்றுகளை அவன் எதிர்கொண்டுவிட்டதால், அவனுடைய பதில் வினையை அடிப்படையாகக்கொண்டு அடுத்த நகர்வை மேற்கொள்ள வேண்டியது முக்கியமானதாகவிருக்கும். அவனுக்கு ஆறுதல் சொல்வதோ, நீண்ட விளக்கங்களைக் கொடுப்பதோ, மன்னிப்புக் கேட்பதோ, அல்லது மாற்றீடாக வார்த்தைகள்.... வார்த்தைகள்... வாத்தைகள்....என பொழிவதோ முக்கியமானதாக இருக்காது. பதிலாக, அவன் இப்போது பெற்றுக்கொண்டுவிட்ட பட்டறிவோடு மாறும் உலகத்துக்கு ஈடுகொடுப்பதற்கு அவனுக்குள்ள இயலுமையை அளவிட்டுக்கொள்வது அவசியமாகவிருக்கலாம்.

மணற் பெட்டியை நோக்கி நடந்த அவன் தட்டையாக்கி விடப்பட்டிருந்த மணலையும் அதில் ஆங்காங்கே கலந்து சிதறிக் கிடந்த பொம்மைகளையும் வெறித்துப் பார்த்தான்.

"என்னுடைய சின்ன வாத்து எங்கே?" கேட்டான் அவன். "மணல் குவியலின்ர உச்சியில நீங்கள் விட்டுப்போன சின்ன வாத்து எங்கே எண்டுதானே யோசிக்கிறீங்கள்?" என்று நான் கேட்டேன்.

வேகமாகச் சுழன்று திரும்பிய அவன் நேருக்கு நேராக என்னைப் பார்த்தான்.

"ஓமோம்" என்று கோபமாகச் சொன்னவன் "எங்க என்ர சின்ன வாத்து?" என்றான்.

அங்கே நிலவிய சூழலை சுமுகமாக்கும் முயற்சியில், "நீங்க வைச்ச இடத்திலயே அதை இருக்க விடச்சொல்லி நீங்க சொன்னனீங்கள். ஆனா யாரோ அத நகர்த்திப்போட்டினம்" என்று பதில் சொன்னேன். அவன் தன்னுடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் அதிக துல்லியத்தன்மையுடன் அடையாளம் கண்டு கொள்ளும் விதத்தில் எனது பதிலின் மூலம் அவனது பதில் வினைகளின் தீவிரத்தைக் குறைக்கும்நோக்கமும் இருந்தது.

அவன் எனக்கு மிக அண்மையாக நெருங்கி வந்து என் கண்களுக்குள் நேராகப் பார்த்தான். "ஓமோம்" என்று அழுத்தமாகச் சொன்னவன், "ஏன்?" என்று கேட்டான்.

"நீங்கள் விட்டுப்போன இடத்தில, அதுகளை நான் இருக்கச் செய்யாதது ஏன் என்று நீங்கள் யோசிக்கிறீங்கள் அல்லவா?" என்று நான் கூறினேன்.

"ஓம்" என்றான் அவன். "ஏன்?" மீண்டும் கேட்டான் "அத நான்தான் நடக்கவிட்டனான் என்று ஏன் நினைக்கிறீகள்?" அவனைக் கேட்டேன்.

"எனக்குத் தெரியாது. எனக்குக் கோபம் வருகுது. நீங்கள் அத இருக்கச் செய்திருக்க வேணும்"

இப்போது கேள்விகளை நான் கேட்க ஆரம்பித்தேன். "நான் ஏன் அப்பிடிச் செய்ய வேணும்?" நான் கேட்டேன். "அப்பிடிச் செய்வன் எண்டு உங்களுக்கு வாக்குத் தந்தனானோ?" அவன் பார்வை நிலத்தை நோக்கிப் பதிந்தது. "இல்லை" என்ற அவன் குரல் கிட்டத்தட்ட கிசுகிசுப்பாகக் குறைந்திருந்தது.

"ஆனா நான் அதைச் செய்யவேணுமெண்டு நீங்கள் நினைச்சனீங்கள்? "ஓம்" அவன் முணு முணுத்தான். "எனக்காக நீங்கள் அப்பிடிச் செய்யவேணும் எண்டு நினைச்சனான்."

"வேற பிள்ளையளும் இங்க வந்து விளையாடுறவையெல்லோ.... அவையளில யாரோதான் உங்கட வாத்த நகர்த்தியிருக்கவேணும்."

"என்ர மலையையும் உடைச்சுப்போட்டினம். என்ர சின்ன வாத்து என்ர மலை உச்சியிலதான் நிண்டது."

"எனக்குத் தெரியும். உங்கட மணல் மலையும் அங்க இல்ல அல்லவா?" என்று கேட்டேன்.

"அதக் காணவில்லை" என்றான். "அதுக்காக உங்களுக்குக் கோபமும் ஏமாற்றமுமாய் இருக்கு... என்ன?"

ஆம் என்பது போல் டிப்ஸ் தலையை ஆட்டினான் பின் என்னைப் பார்த்தான். நான் பதிலுக்கு அவனை நோக்கினேன். மணல் மலைகளும் சக்திவாய்ந்த அந்த பிளாஸ்ரிக் வாத்தும் இறுதியில் டிப்ஸ்சுக்கு உதவப்போவதில்லை. கடந்தவாரம் அவன் நிர்மாணித்த அந்த ஆக்கத்தில் அவை குறியீடாகக் காட்டிய பாதுகாப்பு மற்றும் மணநிறைவு உணர்வுகள்தான் அவனுக்கு உதவக்கூடியவையாகும். இந்த காத்திரமான குறியீடுகள் மறைந்துவிட்டதை எதிர்கொள்ளும் அவன், இப்போது தனக்கேற்பட்ட ஏமாற்றத்துக்கும் எங்களுக்கு வெளியால் உள்ளவைகள் மாறக்கூடியவைதான் என்ற புரிந்துணர்வுக்கும் ஈடுகொடுத்துக்கொண்டிருக்கும் இந்த வேளையிலே தனக்குள்ளேயே தன்னம்பிக்கையையும் மன நிறைவையும் உணரவேண்டும் என்று நான் எதிர்பார்த்தேன். பல நேரங்களிலே இந்த கூறுகள் மீது மிகக் குறைந்தளவு கட்டுப்பாட்டையே நாம் கொண்டிருப்போம். ஆனால், எமது அகவளங்களை பயன்படுத்த நாம் கற்றுக்கொண்டு விட்டால், எமது பாதுகாப்பை நாம் எம்முடனேயே எடுத்துச் செல்வோம்.

மணல் பெட்டியின் விளிம்பில் அமர்ந்துகொண்ட அவன் சிதறிக் கிடக்கும் உருவங்களை மௌனமாக பார்த்தான். பின்னர், அந்த உருவங்களில் சிலவற்றை எடுத்து ஒரே மாதிரியானவற்றை வேறு வேறாகப் பிரிக்கத் தொடங்கினான். தனது கையை நீட்டி எனது பென்சிலை எடுத்துக்கொண்டான். மிருகங்களில் ஒன்றின் தங்கு பீடம் வளைந்துபோயிருந்தது. அதிலிருந்த துவாரமொன்றில் பென்சில் நுனியால் துருவிப்பார்க்க முயற்சி செய்தான். அந்த முயற்சியில் பென்சில் கூர் உடைந்து போய்விட்டது.

"இஞ்ச பாருங்கோ, பென்சில் கூர் உடைஞ்சு போய்விட்டது." என்று வெகு இயல்பாகக் கூறினான். அந்தப் பென்சிலை என்னிடம் நீட்டினான். இவன் ஏன் இப்படிச் செய்தான்? என்ற கேள்வி என்னுள் எழுந்தது.



"நான் போய் பென்சிலை தீட்டிக்கொண்டு வாறன் டிப்ஸ்." என்ற நான், "நான் ஒரு நிமிடத்தில் வந்துவிடுவேன். நீங்கள் இங்கேயே இருங்கோ" என்றுவிட்டு அவனை விட்டுப்போனேன்.

குழந்தைகளின் நடத்தைகள் குறித்த ஆய்வுகளின் ஒரு பகுதியாகவும் எங்களது தொழில் சார் பயிற்சித் திட்டங்களுக்கெனவும் நாங்கள் அடிக்கடி பயன்படுத்தும் அந்த விளையாட்டு அறையின் ஒருபக்கத்தில் பெரிய முகம்பார்க்கும் கண்ணாடிபோல் தோன்றிய ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. உண்மையில், அது ஒரு ஒருவழி அவதானிப்புக் கண்ணாடியாக இருந்தது. விளையாட்டு அறையில் இருக்கும் எவருக்கும் அது முகம்பார்க்கும் கண்ணாடியாக உதவியது. அதன் பின்னால் இருளாக்கப்பட்ட ஒரு அறையிலே அவதானமாக தெரிவுசெய்யப்பட்ட, சிறப்பாக பயிற்றப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அவதானிப்பாளர்கள் அமர்ந்திருப்பார்கள். இந்த அவதானிப்பாளர்கள் ஒலிப்பதிவுக் கருவிகளைக் கண்காணிப்பதோடு உள்ளே இருப்பவர்களின் நடத்தைகளை அவை நிகழ்ந்த நேரத்துடன் குறித்து வைப்பார்கள். பின்னர் ந்த ஒலிப்பதிவுகள் எழுத்துருவாக்கப்பட்டு குறித்த குழந்தையினதும் சிகிச்சையளிப்பவர்களினதும் அவதானிக்கப்பட்ட நடத்தைகளை உள்ளடக்கும் விதமாக தொகுக்கப்படும். அறிக்கையின் பக்கவாட்டில் 1 நிமிட இடைவெளிகளில் நேரம் குறிக்கப்பட்டிருக்கும் இவற்றை, எமது தொழில் சார் பயிற்சித்திட்டத்தின் ஒரு பகுதியான உயர் மட்டக் கருத்தரங்குகளில் கலந்துரையாடுவதற்கான ஆய்வுத் தரவுகளாகப் பயன்படுத்துவோம்.

(தொடரும்....)



(சி-11255)




**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

*பாவலா!*

*சனாதிபதி சந்திரிகா சுதந்திரதின உரையில் சமாதானம் தொடர்பான எந்தச் செய்தியையும் வெளியிடவில்லை ஏன்?*

*வ.சுகந்தா,*
*சங்கானை.*

சட்டிக்குள் உள்ளது தானே அகப்பையில் வரும் தம்பி அம்மணியார் மனதுள் சமாதானம் குறித்தோ நிவாரணதானம் குறித்தோ எந்த நன்( )க்கமும் கிடையவே கிடையாது. இதுதான் உண்மையான செய்தி.

*பாவலா!*

*எல்லா விடயங்களிலும் அசட்டைத்தனம் உள்ளவர்களை என்னவென்று கூறுவது? இவர்களுக்கு தாங்கள் கூறும் ஆலோசனை யாது?*

*பிரியா,*
*கூமாங்குளம்.*

அவன் தான் சோம்பேறி...

சோம்பேறியின் காதில் போட்ட சொல் புதைகுழிக்குள் போட்ட கல் போன்றதே...! ஆலோசனைகளையும் அசட்டை செய்து விடுவார்கள்.

*பாவலா?*

*இம்முறை சுதந்திரதின நிகழ்வின் அணிவகுப்பை குட்டியானை குழப்பியதாகக் கூறப்படுகிறதே கவனித்தீரா?*

*சதீஸ்,*
*யாழ்ப்பாணம்.*

ஆட்சியை பெரியயானை (ஐ.தே.க) குழப்புது. அணிவகுப்பைக் குட்டியானை குழப்புது... சந்திரிகா நாட்டை குழப்புறார்.... பாவம் இலங்கை.

*பாவலா!*

*எந்நேரமும் காகம் கரைந்தமாதிரி கரைந்துகொண்டிருந்துவிட்டு, நாம் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுவதாக சாட்டுப்போக்கு கூறுகிறார்களே இவர்களைப்பற்றிக் கூறும்?*

*குயிலன்,*
*பரந்தன்.*

உங்கள் கேள்விக்குப் பதிலாக ஒரு கவிதை நினைவுக்கு வருகிறது.

கொத்திக் குதறி
கூடு விட்டுத் துரத்தியபின்
செத்துக் கிடக்கும்
சிறு குயிலின் இறப்புக்காய்
சுற்றிவர இருந்து
கரைந்து உருகுகின்றன
காகங்கள்.

*பாவலா!*

*ரத்வத்தையின் புதல்வர்கள், உடத்தலவின்ன படுகொலைக்கும் எமக்கும் தொடர்பில்லை, சம்பவதினம் வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை என்று சாட்சியம் கூறியிருக்கிறார்களே இது உண்மையா?*

*தி.தேவன்,*
*வவுனியா.*

இயமனை எப்போதாவது வெளிப்படையாக நீங்கள் கண்டதுண்டா?

*பாவலா!*

*அமெரிக்க முன்னாட் சனாதிபதிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட வருகிறார்களாமே? உண்மையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிடுவார்களா?*

*எஸ்.கிசோ,*
*கிளிநொச்சி.*

சாமி விரும்பினாலும் பூசாரி அனுமதிக்க வேண்டுமே? புரிகிறதா

*பாவலா!*

*ஆன்மீகம், மூடநம்பிக்கை இரண்டிற்கும் வித்தியாசம் தெரியாதவர்களுக்காக ஒருமுறை விளக்கம் தரவும்?*

*எம்.தீபன்,*
*வல்வெட்டித்துறை.*

ஆன்மீகம் விஞ்ஞானம், மூடநம்பிக்கை அஞ்ஞானம்.

*பாவலா!*

*இந்தியா பாகிஸ்தான் உறவு எவ்வாறு உள்ளது?*

*ரஞ்சி,*
*புத்தூர்.*

கரவு மிகுந்த உறவாகவே தொடர்கிறது.

*பாவலா!*

*சுனாமியால் அழிந்த பிரதேசங்களில் ஜே.வி.பியினர் சிங்களக் குடியேற்றங்களை நிறுவ முற்படுகிறார்களே இதனைப் பற்றி?*

*அச்சுதன்,*
*திருகோணமலை.*

அடுத்து வரக்கூடிய சுனாமிக்கு அந்த மக்களை காவு கொடுக்க துடிக்கிறார்கள் போலும்... இனவெறிக் குடிகாரர்கள் செய்யும் குடியேற்றம் குடிகெடுக்கும் என்பது மட்டும் உறுதி.

*பாவலா!*

*மக்களை ஏமாற்றி பணம் சம்பாதிக்க நினைக்கும் அரசியல்வாதிகளுக்கு தங்களின் அறிவுரை?*

*திவ்வியன்,*
*புதுக்குடியிருப்பு.*

தயவு செய்து வெகுசன விரோதிகள் ஆகாதீர்...

---




"பதினெட்டு வயது நிறைந்த உங்கள் மகள் அதே வயதையுடை ஆண்பிள்ளையொன்றுடன் அடிக்கடி கதைப்பதாக, பழகுவதாக, நீங்கள் அறிகிறீர்கள். என்ன செய்வீர்கள்"

"பிரச்சினையில்லை பிள்ளை இஞ்சவா உனக்கு படிப்பு முக்கியம் முதல் படிசோதினை முடிஞ்சபிறகு உங்கட விசயத்தைப் பார்க்கலாம் எண்டு சொல்லுவன்"

"அதெப்படி சிலவேளை படிப்பு சம்பந்தமா அவையள் கதைக்கினம். ஒரு கொப்பி வாங்க, புத்தகம் கேக்க எண்டு பழகினா எப்பிடி சட்டெண்டு நாங்கள் காதலெண்டு முடிவெடுக்கிறது...."

"ஒரு பிள்ளைய பல பெடியள் தேடி வந்து கதைச்சாப் பிரச்சினையில்லை. ஒரு பிள்ளைய ஒரு பொடியனே நெடுக வந்து சந்திச்சாப் பிரச்சினை... தானே"

அப்பிடி என்னெண்டு சொல்லுற என்ரபிள்ளையெண்டா அது எங்கபோய் வந்தாலும் என்ர கண்காணிப்பு இருக்கும். விரும்பினா இந்த நாளையில உதெல்லாம் சகஜம்- புத்தியச் சொல்லி வயசு வர சேர்த்துவிட வேண்டியதுதான்"

"சரிசரி... இப்ப இந்தக் கதைக்கிற பிள்ளையளில ஆம்பிளைப்பிள்ளை உங்கடயெண்டால் உங்கட அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?"

என்ர மகனெண்டா உடன கூப்பிட்டுச் சொல்லுவன். தம்பி உனக்குப் பின்னால தங்கச்சி நிக்கிறாள். நீ உழைச்சுத்தான் அவளைக் கரைசேர்க்கோணும் தம்பியின்ர படிப்பு எல்லாத்தையும் யோசிச்சு முடிவெடு எண்டு வேற என்னத்தச் சொல்லுற"

அப்ப... காதலிக்க பெண்ணுக்குள்ளசுதந்திரம் ஆணுக்கில்ல. அவை காதலிக்கிறதெல்லாம் சும்மா.

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–107



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்–107**

........................................................................
........................................................................
........................................................................
........................................................................

பெயர் : ........................................................
முகவரி : ........................................................
........................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –106



**வே.நிலாகினி,**
**பிரதான வீதி,**
**கண்டாவளை.**

### பரிசுக்குரிய வரிகள்

*உன் அன்னைவிளக்கை அனைத்த "சுனாமி"*
*உன்னைத் துயரத்துள் பிணைத்து விட்டதோ?*
*உனைத் தாங்க தாய்மடிகள் எம்மண்ணில் உள்ளதடா*
*உயர்வாய் உலகில் நீ கலங்காதே கண்ணா!*

### பாராட்டுக்குரிய வரிகள்

*தாய் மடி தவழ்ந்து பாசத்தால் நனைந்த*
*பிரம்மனின் அருள் கொடையே! தொட்டிலால்*
*இறங்கி ஓடிவா மகனே!*
*புது வழி அமைப்போம் அவனியில் நாம் வாழ.*

ச.வசந்தராஜ்,
புதுக்குடியிருப்பு.

*பிறந்த இடத்தின் பெயரே இல்லை-பிஞ்சுக்கு*
*புகுந்த இடமோ புரியவில்லை*
*பார்வை தான் ஊர்வலம் போகிறது- ஆனால்*
*தேடல் அநாதையாகி விட்டது.*

ஆ.லூசியாமேரி,
புளியங்குளம்.

*ஆராரோ பாடி அமைதியால் எனை தூங்க வைத்த*
*அன்னையவளை வாரி சுருட்டிச் சென்றாள் கடலன்னை*
*யார் வருவார் எனை தாலாட்டி அமைதியாய் தூங்கவைக்க*
*யார் வந்த போதும் என் அன்னையவள் அன்பிற்கீடாகுமா.*

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*தொட்டிலில் தவழும் பச்சிளம் குழந்தாய்*
*உனக்கு யார் வேண்டும் தாலாட்ட*
*உன்னையீன்றவள் இவ்வுலகை நீத்தாள்*
*எனினும் கலங்காதே நாம் உள்ளோம் உனக்காக.*

யோ.கபிலன்,
நெடுங்கேணி.

*சின்னப்பூவே சிரித்து மகிழும்*
*இந்நாளில் ஏன் இந்த ஏக்கப்பார்வையோ?- உன்*
*அன்னையை நீ இழந்தாலும் உன்னை அரவணைக்க-எம்*
*மண்ணை காக்கும் மறவர் உள்ளார் வருந்தாதே.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு



# பால்மா பிரியர்களுக்கு
# கிளிநொச்சி அம்மன் களஞ்சியம்
வழங்கும்
# மாபெரும் பரிசுப்போட்டி




Nestle
# NESPRAY



## நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!



அதிகூடிய பால்
அதிகூடிய சுவை
அதிகூடிய கரையும் தன்மை
முழுக்குடும்பத்திற்கும் ஏற்ற பால்மா



கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!






நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டி அதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள்.இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி ஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இங்கே வெட்டவும்




இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

# அம்மன் களஞ்சியம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே: 021-228 5852,5077 (சி-11149)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது